www.tamilarangam.net

# புதிய - ஜனநாயக கட்சியின் 3வது தேசிய காங்கிரஸ் அரசியல் அறிக்கை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# புதிய ஜனநாயக கட்சியின்
# 3வது தேசிய காங்கிரஸ்
# அரசியல் அறிக்கை

**யூன் 20, 21 - 1997**

புதியபூமி வெளியீட்டகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய ஜனநாயக கட்சியின்
3வது தேசிய காங்கிரஸ்
அரசியல் அறிக்கை

யூன் 20, 21 -1997

அச்சு :
டெக்னோ பிரின்ட்,
83 ஆஸ்பத்திரி வீதி,
தெகிவளை.

வெளியீடு :
புதிய பூமி வெளியீட்டகம்
எஸ் 47, 3வது மாடி,
கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி கட்டிடம்
கொழும்பு - 11
இலங்கை

அன்பளிப்பு :
ரூபா 25.00

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAN BOOKS NORWAY SIGNATURE

## அறிமுகம்

புதிய – ஜனநாயக கட்சி இலங்கையின் பொதுவுடமை இயக்கப் பரப்பில் இருந்து தோற்றம் பெற்றதோர் கட்சியாகும். காலனிய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் உருவாக்கிய இடதுசாரிச் சிந்தனைகளில் இருந்தே 1943 இல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கம் பெற்றது. அக்கட்சி மாக்சிச லெனினிசத்தின் அடிப்படையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களையும் தொழிலாளி வர்க்கப் போராட்டங்களையும் முன்னெடுத்து வளர்ச்சி பெற்று வந்தது. ஆனால் அறுபதுகளின் ஆரம்பத்துடன் சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தோன்றி வளர்ந்த தத்துவார்த்த விவாதத்தினால் புதிய மாக்சிச லெனினிசக் கட்சி ஒன்று தோன்றுவதாயிற்று. பழைய கட்சி முற்று முழுதான பாராளுமன்றப் பாதையைத் தழுவி நிற்க புதிதாகத் தோற்றம் பெற்ற கட்சி புரட்சிகர வர்க்கப் போராட்டப் பாதையைப் பின்பற்றி நின்றது. இக்கட்சியின் தலைமையின் கீழ் தொழிலாளர்கள் விவசாயிகள் புத்திஜீவிகள் கணிசமான அளவில் அணிதிரண்டிருந்தனர். சக்திமிக்க தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு இக்கட்சி தலைமை தாங்கியது. குறிப்பாக அக்கால கட்டத்தில் மலையகப் பாட்டாளி வர்க்கம் தனது புரட்சிகர உணர்வை வெளிகாட்டி நிற்பதற்கு கட்சி வழிகாட்டியது. அதேகாலப் பகுதியில் வடபகுதியில் சாதிய தீண்டாமைக்கு எதிரான புரட்சிகரப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கும் கட்சியே தலைமை தாங்கியது. அறுபதுகளின் நடுக்கூறு தொட்டு 1978 ம் வரையான சுமார் ஒன்றரை தசாப்த காலத்தில் மாக்சிச லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யானது இலங்கையின் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் காத்திரமான தலைமைப் பாத்திரத்தை வகித்து வந்தது. இருப்பினும் வளர்ந்து கொண்டிருந்த புதிய வளர்ச்சிப் போக்குகளுக்கு ஏற்ப கட்சியைத் தகவமைத்து முன்னெடுப்பதில் அன்றைய தலைமைத்துவம் புத்தகவாத ஒருமுனைவாதத் தவறுகளை இழைத்து நின்றதுடன் அவற்றைச் சுயவிமர்சன ரீதியில் திருத்திக் கொள்ள மறுத்துக் கொண்டது. இதனால் கட்சியினால் முன்னெடுக்கப்பட்டு வந்த பரந்துபட்ட வேலைமுறை யானது வெறும் அதிதீவிர எதிர்ப்பு அரசியல் முழக்கங்களாக மட்டுப் படுத்தப்பட்டது. இத்தகைய நிலையில் அக்கட்சிக்குள் இருந்து வந்த நேர்மையான மாக்சிச லெனினிச வாதிகள் தவிர்க்க முடியாத சூழலில் அக்கட்சியை விட்டு புதிய கட்சியைத் தோற்றுவிக்கும் பணிக்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். மறைந்த கம்யூனிஸ்ட் போராளியான தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் தலைமைத்துவ வழிகாட்டலில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்னும் பெயரில் உருவாக்கம் பெற்றது. 1978 ன் நடுக்கூறிலே தோற்றம் பெற்ற இக்கட்சி இலங்கையின் வடக்கு கிழக்கு மலையகம் மற்றும் கொழும்பு பிரதேசங்களில் தனது வேலை களை விரிவுபடுத்திக் கொண்டது. மேற்படி கட்சியின் முதலாவது தேசிய காங்கிரஸ் 1984 ல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது. இரண் டாவது காங்கிரஸ் 1991 ல் கொழும்பில் நடைபெற்றது. இவ் இரண் டாவது காங்கிரஸ் கட்சியின் பெயரை புதிய - ஜனநாயக கட்சி என மாற்றிக் கொண்டது.

மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தினையைத் தனது தத்துவார்த்த அடிப்படையாக ஏற்றுக் கொண்ட புதிய - ஜனநாயக கட்சி இலங்கை யின் பிரத்தியேக நிலைமைகளுக்கு ஏற்றவாறு அதனைப் பிரயோகித்து முன் செல்வதை உயர்த்தி நிற்கின்றது. மாக்சிசம், சோஷலிசம் கம் யூனிஸ்ட் கட்சிகள் என்பனவற்றுக்கு ஏற்பட்டுள்ள தற்போதைய பின்னடைவானது முற்றிலும் தற்காலிகமானதேயாகும். இத்தகைய பின்னடைவுச் சூழலை மாற்றியமைக்கும் உலக மாக்சிச லெனினிச வாதிகளோடும் கட்சிகளோடும் இணைந்து நமது நாட்டில் மாக்சிச லெனினிசக் கட்சியாக எமது புதிய ஜனநாயக கட்சியை கட்டி எழுப்பு வதில் முழுக் கவனத்தைக் கட்சி செலுத்தி வருகின்றது. ஒரு புரட்சி கரமான தத்துவம், புரட்சிகரமான கட்சி புரட்சிகரமான வேலைதிட்ட நடைமுறை என்பன இன்றி வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் சமூக மாற்றம், மனித குல விடுதலை சாத்தியமற்றது என்பதில் கட்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீண்டும் தனது உறுதிப்பாட்டினை தெளிவுபடுத்துகின்றது. வர்க்கப் போராட்டம் காட்டும் புரட்சிகரமான சமூக விடுதலைக்கான போராட்ட மார்க்கத்தில் இருந்து பெண்ணியம், சாதியம், தேசியம், சூழலியம் போன்றவற்றைப் பிரித்தெடுத்து தனித்தனியே அவற்றுக்கு மட்டும் பிரத்தியேக விமோசனம் தேட முற்படும் நவீன 'இசங்கள்' மூலமான தவறான கருத்தியல் கோட்பாடுகளைப் புதிய - ஜனநாயக கட்சி வன்மையாக மறுத்து நிராகரிக்கின்றது. அதேவேளை பெண்ணியம், தேசியம், சாதியம், சூழலியம் போன்றன எழுப்பும் நியாயமான கேள்விகளுக்கும் அவை முன்மொழியும் கோரிக்கைகளுக்கும் கட்சி மாக்சிச லெனினிச அடிப்படையில் அதன் இன்றைய வளர்ச்சி நிலை களின் புதிய அணுமுறைகளின் வாயிலாக பதிலறுத்துச் செயல் பூர்வ மாக முன் செல்வதில் முழுமையான கவனத்தை செலுத்துகின்றது. வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களை பல்வேறு தளங்களிலும் அவ்வப் பிரச்சினை களுக்குரிய தனித்துவத்தின் முக்கியத்துவத்தை மறுக்காது முன்னெடு த்துச் செல்வதில் கட்சி தனது வழிகாட்டலையும் தலைமைத்துவப் பங்களிப்பினையும் வழங்கும்.

கடந்த காலங்களின் புரட்சிகரப் போராட்டங்களின் செழுமை மிக்க அனுபவங்களினால் படிப்பினைகள் பெற்று புதிய நிலைமைக்குரிய சரியான அரசியல் போராட்ட மார்க்கத்தினை வகுத்து முன் செல்வதில் இம் மூன்றாவது கட்சிக் காங்கிரஸ் ஒரு முக்கிய பாத்திரத்தை வகிக்கின் றது. இக் காங்கிரஸ் தத்துவம், கொள்கை, ஸ்தாபன அமைப்பு, போராட்ட நடைமுறை போன்றவற்றை வளர்த்தெடுத்துப் பலப்படுத்தி சொந்தப் பலத்தை அதிகரிக்கச் செய்யும் என்பதில் கட்சி உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. அதேவேளை ஏனைய மாக்சிச லெனினிச சக்திகளோடும், இடதுசாரி முற்போக்கு அணிகளோடும் பரந்த ஐக்கிய முன்னணியைத் தோற்றுவித்து முன்னெடுப்பதிலும் எமது புதிய - ஜனநாயகக் கட்சி முன்நிற்கும்.

www.tamilarangam.net

## தேசிய நிலைமை

இலங்கை நாடு இதுவரை கண்டிராத வகையில் பாரிய அரசியல் பொருளாதார சமூக கலாசார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து நிற்கின்றது. திறந்த பொருளாதாரக் கொள்கை, தனியார்மயமாக்கல் உருவாக்கியுள்ள பொருளாதார சீர்குலைவுகளும் நெருக்கடிகளும் ஒருபுறமாக வளர்ந்து செல்கின்றது. மறுபுறத்தில் கடந்த இரண்டு தசாப்தத்தின் மேலாக தேசிய இனப்பிரச்சினை சார்பான போராட்ட மானது கொடூர யுத்தமாகி ஓர் உச்ச நிலையை அடைந்திருக்கிறது. இவற்றின் பாரிய எதிர்விளைவுகளாக நாட்டின் தொழிலாளர்கள் விவசாயிகள் அறிவுஜீவிகள் தேசிய இனங்கள் பெண்கள் ஆகிய அனைத்து மக்களும் பொருளாதார நெருக்கடிகள் அரசியல், ஒடுக்கு முறைகள் யுத்தக் கொடுமைகளின் கொடூரத் தாக்கங்கள் ஜனநாயக மனித உரிமை மீறல்கள் என்பனவற்றை அன்றாட வாழ்க்கைச் சுமைகளாகவும், துயரங்களாகவும், அனுபவித்துக் கொண்டு இருக் கின்றனர். இத்தகைய நெருக்கடிகளும், யுத்த அவலங்களும் மிகுந் துள்ள ஒரு சூழலிலேயே எமது புதிய -ஜனநாயகக் கட்சியின் மூன்றா வது தேசிய காங்கிரஸ் நடைபெறுகிறது. ஆதலால் நாடும் மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தெளிவான ஓர் அரசியல் மார்க் கத்தை வரைவு செய்து அதன் அடிப்படையில் நமது அரசியல் போரா ட்ட இயக்கத்தை முன்னெடுக்கும் கடமையை இக்காங்கிரஸ் கொண் டுள்ளது.

நாட்டில் பூதாகாரமாகி நிற்கும் பிரச்சினைகளின் தன்மைகளை மேலெ ழுந்தவாரியாகக் கண்டுகொள்ள இயலாது. இவற்றை மாக்சிச உலகப் பார்வையின் ஊடான வரலாற்று அடிப்படையிலும் வர்க்கப் போராட்ட நிலையிலும் அணுகித் தெளிவுபெறுவது அவசியமாகும். ஒவ்வொரு பிரச்சினையும் அதற்கே உரிய தனித்துவத்துடனும் தாக்கத்துடனும் காணப்படும் அதேவேளை ஒன்று மற்றதுடன் இணைந்தும் பிணைந்தும் காணப்படுகின்றன. எனவே முழுமையாகவும் பகுதியாகவும் நோக்கப்படும் அதேவேளை முழுமைக்கும் பகுதிக்குமிடையிலான உறவுகளை சரியானபடி அடையாளம் கண்டுகொள்வதும் அடிப் படையானதாகும்,

www.tamilarangam.net

## நாட்டின் சமூக அமைப்பு

இந்நிலையில் நாட்டின் தற்போதைய சமூக அமைப்பின் தன்மை பற்றித் தெளிவுறுவது ஒரு முன்தேவையாகிறது. இலங்கை நாடு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாக நிலவுடமை அமைப்பின் கீழ் இருந்து வந்த ஓர் விவசாய நாடாகும். நாநூறு ஆண்டுகளுக்கு சற்று மேல்வரை ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், அதன்பின் பிரித்தானியர் என்போரின் தொடரான ஆதிக்கங்களின் கீழ் இருந்து வந்துள்ளது. ஒன்றே கால் நூற்றாண்டுக்குமேல் பிரித்தானியர் தமது கொலனித்துவ நாடாக இலங்கையை வைத்திருந்தனர். தேசிய சர்வ தேசிய பிராந்திய நிலைகளில் வளர்ச்சி பெற்றுவந்த கொலனிய எதிர்ப்புப் போராட்டச் சூழலில் இந்த நூற்றாண்டின் நடுக்கூறிலே சுதந்திரம் வழங்கியதாகக் கூறி உள்நாட்டு தரகு- முதலாளிய சக்தி களிடம் பிரித்தானியர் அரசியல் அதிகாரத்தைக் கைமாற்றிச் சென்றார் கள். ஆனால் பொருளாதார அடிப்படைகளும் அரசியல் வழிகாட்டல் களும் அவர்களின் கைகளிலேயே இருந்து வந்தன. பிரித்தானிய வகைசார் அரசியல் அமைப்பும் அதனை அடியொற்றிய நீதி, நிர்வாக, கல்வி அமைப்புகளும் தொடரப்பட்டன. கலாசாரத்தளங்களிலும் அந்நிய தாக்கம் ஆங்காங்கே ஆதிக்கம் செலுத்துவதாயிற்று.

சுதந்திரம் என்று அழைக்கப்பட்ட நிகழ்வுக்கு முன்பும் அதற்குப் பின்பும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதில் தரகு முதலாளிய வர்க்க சக்திகள் முன்நின்றன. இலங்கையின் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த இவர்கள் கொலனித்துவ எசமானர்களையும், அவர்களோடு இணை ந்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளையும் அரவணைத்து அவர்களது பொருளாதார அரசியல் நலன்களுக்கு எவ்வகையிலும் ஊறுவிளை விக்காத ஆட்சியைத் தொடர்ந்தனர். இத்தகைய அந்நிய அடிவருடித் தனப் போக்கினை மக்கள் அதிருப்தியுடன் நோக்கி வந்ததன் விளை வாக ஐம்பதுகளின் நடுக்கூறில் தேசிய நலன்களை முதன்மைப் படுத்திய தேசிய முதலாளித்துவ சக்திகள் அதிகாரத்திற்கு வரச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. தொடர்ச்சியாக அன்றி தரகு முதலாளித்துவ, தேசிய முதலாளித்துவ வர்க்க சக்திகள் மாறி, மாறி ஆட்சி அதிகாரத் திற்கு வந்து போயினர். தேசிய முதலாளித்துவ சக்திகள் தமது ஆட்சி அதிகார காலத்தில் எப்பொழுதும் இலங்கையின் இடதுசாரிகளான

www.tamilarangam.net

ரொட்சியவாத, பொதுவுடமைவாதப் பாராளுமன்றக் கட்சிகளைத் தங்களுடன் இணைத்து வைத்திருந்தனர். அதனால் பொருளாதார அரசியல் சீர்திருத்தங்கள் சிலவற்றை அவர்களால் செய்ய முடிந்தது. அந்நிய மூலதனங்களைத் தேசவுடமையாக்குவதிலும், நிலவுடமைக்கு உச்ச வரம்பு விதித்ததிலும், அரசியல் யாப்பினைப் புதிதாக வரைந்து கொண்டதிலும் அந்நிய ஆதிக்கக் கூறுகளை குறிப்பிட்ட அளவுக்கு கட்டுப்படுத்தியும் இன்னும் பிற முற்போக்கான நடைமுறைகளிலும் தேசிய முதலாளித்துவ சக்திகள் இலங்கையின் சமூக அமைப்பிலே சிற்சிலவற்றைக் குறிப்பிடக்கூடியவாறு செய்து கொண்டார்கள். அதேவேளை அவர்களது வர்க்க இயல்புக்குரிய தேசியவாத நிலைப் பாடு காரணமாக தேசிய இனப்பிரச்சினையை உக்கிரப்படுத்தவும் பின் விளைவுகளைப் பாரதூரம் ஆக்குவதற்கும் தமது பாதகமான பங்களிப் பினையும் வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முழுமையாக நோக்கும் போது நீண்டகாலம் நிலை பெற்றிருந்த நிலவுடமை அமைப்பின் பொருளியல் வரையறைகளில் சிற்சில மாற்றங்கள் இடம் பெற்றிருந்த போதிலும் அடிப்படையான சொத்து டமை, கருத்தியல் கட்டமைப்பு, வாழ்வியல் முறைமை, பழைமைவாதச் சிந்தனைப் பரப்பு என்பனவற்றில் சமூக ரீதியான மாற்றங்கள் பெருமளவிற்கு இடம் பெறவில்லை. இவ்விடத்திலே மற்றுமோர் அம்சக் கூற்றினை அவதானிப்பது அவசியமாகிறது. அதாவது இல ங்கை சுதந்திரம் பெற்ற சுமார் அரை நூற்றாண்டு காலப்பகுதி முழுவதும் தரகு முதலாளிய, தேசிய முதலாளிய வர்க்கங்களின் சார்பாக ஆட்சி அதிகார தலைமைத்துவத்தில் இருந்து வந்தவர்கள் அனைவரும் இலங்கையின் உயர் நிலவுடமை வர்க்கத்தில் இருந்து வந்தவர்களாகவே காணப்பட்டனர். அதன் தொடர்ச்சியே இன்றும் நிலவுகின்றது. ஆனால் ஓர் நான்கு ஆண்டு காலப்பகுதியில் மட்டும் தவிர்க்க முடியாத விதிவிலக்காக சாதி சமூக நிலையில் அடிமட்டக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தமது விசேட ஆளுமை காரணமாகப் பெரு முதலாளித்துவ சக்திகளின் பிரதிநிதியாக ஆட்சி அதிகாரத் தலைமைத்துவத்தில் இருக்க முடிந்தது. இதனை இலங்கையின் நிலவுடமை சார் சக்திகள் சகித்துக்கொள்ள முடியாத ஒன்றாகவே கருதி நின்றன. இந்நிலவுடமை சார் ஆதிக்கப்போக்கும் அதன் அரசியல் முனைப்பும் ஐரோப்பிய சமூக நிலைக்கு எதிர்மாறான ஆசிய நிலைமைகளின் தனித்த அம்சக் கூறுகளில் ஒன்றாகும். இதனையே அரை நிலவுடமைத் தன்மைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரியதாகக் காண இயலுமாகிறது. அந்த வகையில் இலங்கையின் சமூக அமைப்பிலே அரை நிலவுடமைத் தன்மை இன்றும் நீடித்து வரும் முக்கிய அம்சமாகக் காணப்படுகிறது.

பிரித்தானியர் இலங்கையைத் தமது கொலனியாகக் கொண்டு பெருந் தோட்ட தேயிலை உற்பத்தியைப் பிரதான சுரண்டல் தளமாக்கிக் கொண்டனர். இத்துறையுடன் இணைந்த சேவைத் துறைகளை மட்டுமே குறிப்பிட்டளவிற்கு விருத்தி செய்தனர். மூன்றாம் உலக நாடுகளில் அந்தந்த நாட்டு மூல வளங்களைச் சுரண்டிக் கொள்ளையிட்டுச் சென்ற கொலனித்துவ வாதிகள் எவ்வகையிலும் அந்நாடுகளை வளர்ச்சி பெறும் நவீன கைத்தொழில் நாடுகளாக மாற்ற முற்படவில்லை. அதனால் அந்நாடுகள் குறைவிருத்தி நாடுகளாகவே விட்டுச் செல்லப்பட்டன. இந்நாடுகளின் அரைக் கொலனியல் அமைப்பு முறை தொடரப்பட்டு பொருளாதாரப்பிடி அன்னியர்களிடம் தக்க வைக் கப்பட்டு இருந்தது. இதுவே இலங்கையிலும் இடம் பெற்றது. இவ் அரைக் கொலனியல் அமைப்பு முறையானது படிப்படியாக உலக ஏகாதிபத்திய ஏகபோக முதலாளித்துவ பல்தேசிய நிறுவனங்களின் இராட்சத வளர்ச்சியுடன் ஒன்று கலக்கப்பட்டது. அதுவே வேகமான நவ கொலனியல் அமைப்பு முறையாக மறு உருவாக்கம் செய்யப் பட்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களில் இந்நவ கொலனியல் அமைப்பு முறையை முழுமைப்படுத்தும் நோக்கிலும் போக்கிலும் இலங்கையின் பெரு முதலாளித்துவ வர்க்க சக்திகள் ஏகாதிபத்திய எசமானர்களுக்கு மிகப் பெரும் சேவைகளை வழங்கி உள்ளனர். திறந்த பொருளாதாரக் கொள்கை, தனியார் மயம், தாராள சந்தை முறைமை போன்றவற்றின் ஊடாக ஏகாதிபத்திய பல்தேசிய நிறுவனங்களின் பூரண சுரண்டல் கொள்ளையிடலுக்கு நாடு பலியிடப்பட்டது.

www.tamilarangam.net

## அடிப்படை முரண்பாடு

**மேலே கூறப்பட்டனவற்றின் ஊடே நம் முன்னே விரிந்து காணப்படும் இலங்கையின் சமூக அமைப்பின் தன்மையையும் அவற்றினிடையே துலக்கம் பெறும் அடிப்படை முரண்பாட்டம்சங்களையும் அவை உருவாக்கி நிற்கும் பிரதான முரண்பாட்டின் தோற்றப்பாட்டையும் நாம் வரையறை செய்து கொள்ளமுடியும்.**

நமது சமூக அமைப்பானது அரை நிலவுடமை பெரு முதலாளித்துவ, நவ கொலனித்துவ அமைப்பு முறையாகவே காணப்படுகிறது. இத்தகைய சமூக அமைப்பின் கீழ் நிலவுடமை சார் சக்திகளும், பெரு முதலாளித்துவ வர்க்கமும் ஏகாதிபத்தியமும் அதன் பல்தேசிய நிறுவனங்களும் ஒரு தரப்பாக இணைந்து காணப்படுகின்றன. இதன் மறு தரப்பிலே பொருளாதார சுரண்டலுக்கும் அரசியல் ஒடுக்கு முறைக்கும் உள்ளான தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள், தேசிய இனங்கள் பெண்கள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரும் இருந்து வருகின்றனர். இவ்விரு தரப்பிற்குமிடையிலான முரண்பாடே இலங்கையின் சமூக அமைப்பில் காணப்படும் அடிப்படையான முரண்பாடாக நீடித்து காணப்படுகின்றது.

இத்தகைய சமூக அமைப்பும் அதனிடையே காணப்படுகின்ற அடிப் படை முரண்பாடும் ஏனைய முரண்பாடுகளை தோற்றுவித்து வளர்த் தெடுத்து தனது இருப்புக்குத்தக்கவாறு அவற்றைப் பயன்படுத்தி வருவதில் ஒரு மையப் பாத்திரத்தை வகிக்கின்றது. இவ்வடிப்படை முரண்பாடு வர்க்க முரண்பாடாகவே இருந்து வருகின்றது. இவ்வர்க்க முரண்பாட்டில் தொண்ணூறு வீதமான மக்கள் பிரிவினரும் பத்து வீதமான சொத்துடைய ஆளும் வர்க்கத்தினருமாகவே காணப்படு கின்றனர்.

இலங்கையின் சமூக அமைப்பிலே காணப்படும் இவ்வேற்றத்தாழ் வானது தெளிவான வர்க்க அடிப்படையை கொண்டதே ஆகும். ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சிற்சில வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும் அடிப்படையில் சொத்து டைய சுரண்டும் வர்க்க சக்திகளின் நலன்களைப் பிரதி நிதித்துவம் செய்து நிலவி வரும் சமூகக் கட்டமைப்பை மாற்றமடையாது பேணிப் பாதுகாத்து வந்துள்ளன. இவ்விடயத்தில் உள்ளூர இனமத மொழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறுபாடுகள் தோன்றியிருப்பினும் அவற்றிற்கும் அப்பால் தமிழர் களிடையேயும் முஸ்லிம்களிடையேயும் தோன்றிய அரசியல் கட்சிகள் யாவும் சொத்துடமை பெற்ற உயர் வர்க்கத் தமிழர்களினதும் முஸ்லிம் களினதும் நலன்களை முதன்மைப்படுத்தியவர்களாக விளங்கினர். அதனால் ஆளும் வர்க்கத்தரப்பினருடன் தேவைப்பட்ட வேளைகளில் சிரமமின்றி ஐக்கியப்படவும் முடிந்தது. அரசியல் கட்சிகள் என்பன வெறுமனே சகல மக்களினதும் பொதுவான நலன்களுக்காகச் செயற் படுகின்றன அல்லது போராடுகின்ற என்பதற்குப் பதிலாக அவை ஏதாவது ஒரு வர்க்கத்தின் அடிப்படை நலன்களைப் பிரதிபலிப்பனவாக இருக்கின்றன என்பதே சமூக யதார்த்தமாகும். இதனை எத்தகைய நவீன வாதங்களினாலும் மறுத்தலிக்க முடியாது.

இவ்வடிப்படையில் இலங்கையின் ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பில் காணப்படும் அடிப்படை முரண்பாட்டில் அனைத்து ஆளும் வர்க்க அரசியல் கட்சிகளும் நிலவுடமை பெரு முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளின் சார்பாகவே செயற்பட்டு வந்திருக்கின்றன. இன்றும் இந்நிலைமை தொடர்கின்றது. அதேவேளை ஏகப் பெரும்பான்மை யான மக்களுக்கு இன, மத, மொழி ரீதியில் நன்மை செய்வது போலக் காட்டி தேசிய இனங்கள் மத்தியிலான முரண்பாடுகளை வளர்த்துப் பூதாகரமாக்கி தத்தமது வர்க்க நலன்களைப் பாதுகாத்து வந்துள்ளன என்பதும் இலங்கையின் வரலாறு ஆகும்.

www.tamilarangam.net

## பிரதான முரண்பாடு

இவ்வடிப்படை முரண்பாட்டினை விட இரண்டாம் மூன்றாம் தர நிலைகளிலே இன சாதிய பால் முரண்பாடுகள் இருந்து வந்துள்ளன. ஆனால் இது வரை காலமும் இரண்டாம் தர முரண்பாடாக இருந்து வந்த இன முரண்பாடான தேசிய முரண்பாடு கடந்த இரு தசாப்த காலத்தில் கூர்மைப்படுத்தப்பட்டு யுத்த வடிவின் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. இன்றைய சூழலில் அது இலங்கையின் தற்போதைய பிரதான முரண்பாடு என்ற வடிவத்தைப் பெற்று யாவற்றையும் விட முதன்மை நிலையாகக் காணப்படுகின்றது. இத்தேசிய முரண்பாடானது அடிப்படை வர்க்க முரண்பாட்டிற்குரிய அம்சங்களைக் கொண்டிராத போதிலும் நிலவுடமை பெரு முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகள் இத்தேசிய முரண்பாட்டினை முதன்மை நிலைக்கு வலிந்து முன்தள்ளிவிட்டுள்ளன. பிரதான இடத்தைப் பெற்று நிற்கும் இத்தேசிய முரண்பாட்டின் வேகத் தன்மையின் மறைவில் தமது சொத்துடைய உயர் வர்க்க நலன்களையும் ஆட்சி அதிகாரங்களையும் நிலை நிறுத்தி வருவதுடன் அந்நிய ஏகாதிபத்திய ஊடுருவல்களுக்கும் இம்முரண் பாடு தகுந்தவாறு களம் அமைத்து வருகின்றமை நோக்குதற்குரிய தாகும். அத்துடன் ஏகப் பெரும்பான்மையான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் நமது சமூக அமைப்பிலே நிலவி வரும் அடிப்படை வர்க்க முரண்பாட்டின் வேர்களையும் அதன் விரிந்து பரந்த விருட்சத் தன்மையினையும் அறிந்து கொள்ளவிடாதவாறு திசை திருப்பி வைத்து இருக்கவும் இத்தேசிய முரண்பாடு நன்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்தேசிய முரண்பாடு இன்று எவ்வாறு முதன்மை பெற்று பிரதான இடத்தை வகிக்கின்றது என்பது ஆழ்ந்து நோக்கப்படவேண்டும். இலங்கை பல இனங்கள் வாழுகின்ற பல மதங்கள் பின்பற்றப்படுகின்ற ஒரு நாடாகும். இதனைத் தனியொரு தேசம் எனக் கொள்ளவியலாது. சிங்களவர் 73.9 வீதம் இலங்கைத் தமிழர் 12.7 வீதம் முஸ்லிம்கள் 7 சதவீதம் இந்திய வம்சாவழி மலையக மக்கள் 5.5 வீதம் மிகுதியானோர் பறங்கியர் மலே இன மக்கள் என்பதாகவே இலங்கையின் சனத்தொகை யான ஒரு கோடி 80 இலட்சம் மக்கள் காணப்படுகின்றனர். பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியன பின்பற்றப்படும் மதங்களாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாற்றுக் காலம் முதல் இலங்கையில் சிங்களவர்களும் தமிழர்களும் வாழ்ந்து வந்துள்ளனர். இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக நாட்டின் தெற்கிலும் வடக்கிலும் மத்திய மலைப்பிரதேசத்திலும் நிலவுடமை ஆட்சிகள் நிலவிவந்து இருக்கின்றன. ஒரே ஆட்சியின் கீழும் தனித்தனி ஆட்சிகளாகவும் மட்டுமன்றி தென்னிந்திய நிலவுடமை ஆட்சிகளின் கீழும் ஆளப்பட்ட பல்வேறு காலகட்டங்களை இலங்கை வரலாற்றில் காணமுடியும்.

சிங்களவர் தமது வரலாறு, நாகரிகம், பண்பாடு என்பனவற்றை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் போற்றிப் பாதுகாத்து வளர்த்து வந்துள்ளனர். அவர்களது எண்ணிக்கை இந்நாட்டில் பெரும்பான்மையானது என்பதும் சிங்கள மொழி உலகிலே இலங்கை யில் மட்டுமே உள்ள தனி ஒரு மொழி என்பதும் பௌத்த மதத்தைப் பேணிக் காப்பதில் முதன்மைத்துவம் வழங்கி வருகின்றமையும் குறிப்பான அம்சங்களாகும். சிங்கள மக்களது நாகரிகம், பண்பாடு, மதம் என்பனவற்றின் ஊற்று மூலம் இந்திய பெருநிலப்பரப்பு என்பதும் நோக்குதற்குரியது ஆகும். இருப்பினும் தமக்குரிய தனித்துவத்தைச் சிங்களவர் வேறுபடுத்தி முதன்மைப்படுத்தியும் வந்துள்ளனர்.

சிங்களவர்களுக்கு அடுத்த நிலையிலே காணப்படுபவர்கள் இலங்கைத் தமிழர்கள். இவர்களும் வரலாற்றுக் காலம் முதல் நாட்டின் வடக்குக் கிழக்கிலே பாரம்பரியமாக வாழ்ந்து வந்ததோடு மட்டுமன்றி நிலவுடமை அரசு முறையையும் சிற்றரசுகளையும் வைத்திருந்தும் வந்துள்ளனர். இவர்களது மொழி தமிழாகவும் அதிகமானோரின் மதம் இந்து மதமாகவும் காணப்படுகின்றது. தொன்மை மிக்க தென்னிந்திய இன மத மொழிக் கலாசாரத் தொடர்புகளால் சிங்கள மக்களை விடப் பிணைப்புக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர். தென்னிந்திய வர லாற்றோடு தம்மை இணைத்து நோக்கும் போக்கில் முனைப்புடை யோராகவும் பழைமை பேணுபவர்களாகவும் இலங்கைத் தமிழர்கள் உள்ளனர்.

அடுத்த நிலையில் முஸ்லிம் மக்கள் காணப்படுகின்றனர். நாட்டின் கிழக்குப் புறத்தில் மிகச் செறிவாகவும் ஏனைய பகுதிகளில் பரந்தும் காணப்படும் இவர்கள் இஸ்லாமிய மதக் கலாசாரத்தின் தனித்துவத் துடன் வாழ்ந்து வருகிறார்கள். அவ்வாறு வாழ்ந்து வந்த போதிலும், அவர்களது தாய்மொழி இன்றும் தமிழாகவே இருந்து வருவது

www.tamilarangam.net

குறிப்பிடக்கூடியதாகும். மொழியால் மட்டுமன்றிப் புவியியல், பொருளாதார அம்சங்களாலும் அதிகளவு முஸ்லிம்கள் தமிழர்களுடன் மிக நெருக்கமாக வாழ்ந்து வந்ததே வரலாறாக உள்ளது. அண்மைத் தசாப்தங்களில் தமது தனித்துவத்தை முதன்மைப்படுத்தும் சமூக தேசிய உணர்வுடன் வளர்ந்து வந்துள்ளமை நோக்குதற்குரியதாகும்.

மலையக மக்கள் எனக் கொள்ளப்படும் இந்திய வம்சாவழி தமிழ் மக்கள் இலங்கையின் மத்திய மலைப்பிரதேசங்களில் கடந்த ஒன்றே முக்கால் நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருபவர்களாவர். அவர்கள் இந்தியாவிலிருந்து வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டல் தேவைக்காக அழைத்து வரப்பட்ட போதிலும் அவர்கள் இலங்கையை தாயகமாகக் கொண்டே வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தமிழ் இன, மொழி, கலாசாரத்துடன் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்த போதிலும் மலையக தனித்துவத்தை அடையாளமாகப் பெற்ற மக்களாகவே காணப்படுகின்றனர். அண்மைக் காலங்களில் மலையக மக்களின் சமூக உணர்வானது தேசிய இன உணர்வுகளாக வளர்ச்சி பெற்றிருப்பதை அடையாளம் காணமுடிகிறது. தமது இருப்புக்கும் எதிர்கால வளர்ச்சிக்கும் அது அவசியம் எனக் கருதுகின்றனர்.

மற்றும் பறங்கியர், மலே இன மக்கள் என்போரின் எண்ணிக்கை மிகக் குறைவானதாகவும் தமது தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்ள வியலாத சூழலில் அவர்கள் ஏனைய இன மத மொழியினருடன் கலந்து வருவதும் கவனிக்கத்தக்கதாகும்.

இந்நாட்டின் பெரும்பான்மை எண்ணிக்கை கொண்ட சிங்கள தேசிய இனத்தின் மத்தியில் தமது வரலாறு, நாகரிகம், பண்பாடு பற்றிய அக்கறைகள் கொலனித்துவக் காலத்தைத் தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளன. இந்நாட்டிற்குரிய மண்ணின் மைந்தர்கள் தாங்கள் மட்டுமே என்ற தேசியவாத உணர்வு சிங்கள ஆளும் தரப்பினரிடமும் அவர்களுக்கு வழிகாட்டி நின்ற பௌத்த மதத் தலைவர்களிடமும் இருந்து வந்துள்ளன. இந்த நூற்றாண்டின் ஆரம்பம் முதல் அன்னிய கொலனித்துவத்தில் இருந்து விடுபட்டு சுய ஆட்சியை உருவாக்கும் கருத்துக்களை முன்வைத்து வளர்த்தும் வந்துள்ளனர். ஆனால் அத்தகைய கருத்துக்கள் தீவிரமான தேசிய விடுதலைப் போராட்ட வடிவைப் பெறவில்லை என்பது குறிப்பிடக்கூடியது. அத்தகைய நிலை பிற்கால வளர்ச்சியில் பல இனங்களின் நாடு இலங்கை என்று நோக்கப்

www.tamilarangam.net

படுவதற்குப் பதிலாக பெரும் தேசிய இனத்தின் தேசம் என்ற நோக்கும் போக்கும் வலிமை பெறக் காரணமாகியது. ஆனால் வெள்ளை ஏகாதிபத்தியத்திடமிருந்து அதிக சிரமமின்றி சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்ட சூழலில் படிப்படியாக தமிழ் தேசிய இனத்தையும் ஏனைய தேசிய சிறுபான்மையினரையும் புறக்கணித்து பாகுபாடுகளுக்கு உள்ளாக்கும் இனவாத நடைமுறைகளில் சிங்கள தேசிய இனத்தின் மத்தியில் உள்ள ஆளும் வர்க்கத்தினரும் மதவாதிகளும் இனவாத சக்திகளும் ஈடுபட்டு வரலாயினர்.

எதிர்நிலையிலே தமிழ்த் தேசிய இனமும் ஏனைய சிறுபான்மையினரும் தனித்துவமான தமது இன, மொழி, மத, பண்பாட்டு அம்சங்களை வற்புறுத்தும் இயல்பான வளர்ச்சிப் போக்கிற்கு உள்ளாகினர். பெரும் தேசிய இனத்தின் மத்தியில் பேரினவாத வளர்ச்சி படிப்படியாக உச்சநிலை நோக்கி வளர்ந்து தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை உச்சரிப்பதற்குக் கூட அஞ்சி மறுத்து நின்ற நிலையில் குறுந்தேசியவாதம் சுயநிர்ணய உரிமையின் உச்ச வடிவமான பிரிவினையைக் கோரி நிற்கும் சூழலை உருவாக்கியது. இவற்றின் எதிர் விளைவு சாத்வீகப் போராட்டங்கள் காலவோட்டத்தில் ஆயுதம் தாங்கிய போராட்டமாக வளர்ந்து இன்று ஓர் உள்நாட்டு யுத்தம் என்ற நிலை கண்டு நிற்கின்றது. பேரினவாதத்தின் தேசிய இன ஒடுக்கு முறையானது தமிழ் தேசியத்தை முழுமைப்படுத்தியது போன்று முஸ்லிம், மலையக தேசியங்களையும் முழுமைப்படுத்தி வருகின்றது. இவ்வளர்ச்சியானது இலங்கை, சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தேசிய இனங்களையும் பிற சிறுபான்மைச் சமூகங்களையும் கொண்ட ஒரு பல்லின நாடு என்னும் யதார்த்தத்தைத் தோற்றுவித்துள்ளது.

மேற்படி யதார்த்த நிலையை சிங்கள தேசிய இனத்தின் மத்தியில் உள்ள பேரினவாத சக்திகள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. அவர்கள் இலங்கை ஒரு பௌத்த சிங்கள தேசம் என்ற ஒரே நிலைப்பாட்டில் இருப்பது மட்டுமன்றி அதனை உறுதிப்படுத்தி நிலைநாட்டுவதற்காக ஏனைய தேசிய இனங்களின் தனித்துவத்தையும் தன் அடையாளங்களையும் மறுத்து ஒடுக்கு முறைக்கும் உள்ளாக்கி நிற்கின்றனர். இதன் விளைவானதே இன்றைய தேசிய இனப்பிரச்சனையும் அது சார்ந்த கொடூரமான உள்நாட்டு யுத்தமுமாகும். இத்தேசிய முரண்பாட்டில் பேரினவாதமும் அதனை ஏற்றுச் செயற்படும் அரசும், அரசுயந்திரமான ஆயுதப் படைகளும் அவை சார்ந்த அமைப்புக்களும் ஒரு புறமாக

www.tamilarangam.net

அணி சேர்ந்துள்ளனர். அவர்களோடு அந்நிய ஏகாதிபத்திய சக்திகளும் கைகோர்த்து இம்முரண்பாட்டினூடே தமது பொருளாதார அரசியல் நலன்களை பேணிப்பாதுகாத்துக் கொள்வதில் குறியாக நிற்கின்றனர். மறு தரப்பிலே இப்பேரினவாத ஒடுக்குமுறைக்கு தமிழ், முஸ்லிம், மலையகத் தேசிய இனங்கள் முகம் கொடுத்து வருகின்றன. இத்தேசிய முரண்பாடும் அது உருவாகியுள்ள யுத்தமும் இன்று இலங்கையின் சகல துறைகளிலும் ஊடுருவி நிற்கின்றது. நாட்டின் பொருளாதார, அரசியல், கலாசாரத் துறைகளின் ஒவ்வொரு முனையிலும் எதிரொலிக்கின்றது. இவ்யுத்தம் உருவாக்கியுள்ள பாதுகாப்புச் செலவினம் 1996 ஆம் ஆண்டில் ஐயாயிரம் கோடி ரூபாயாக அதிகரித்து இருந்தது. இத்தொகை கடந்த ஐக்கிய தேசியக் கட்சி, பாதுகாப்பிற்குச் செலவிட்ட ஆகக் கூடிய தொகையின் இரண்டு மடங்காகி உள்ளது. மத்திய வங்கி மதிப்பீட்டின்படி 1980 ஆம் ஆண்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஒரு சதவீதமாக இருந்த பாதுகாப்புச் செலவீனம் 1996 ல் 45 வீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. அதேபோன்று 1994 ஆம் ஆண்டு பணவீக்கம் 8.4 சதவீதமாக இருந்தது. 1996 இன் முடிவில் 16 சத வீதமாக உயர்ந்துள்ளது. இது எதைக் காட்டுகிறதெனில் யுத்தச் செலவின் அதிகரிப்பையும் யுத்தப் பாதிப்புள்ள துறைகளின் புன ரமைப்பு, புனர்வாழ்வுக்குமான செலவீனத்தையே ஆகும். இது 1997 ஆம் வருடத்தில் மேலும் பல மடங்காகக் கூடிய சூழலே தொடர்கின்றது. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்து பெறப்படும் சகல வகைக் கடன்களும், வளங்களும் இன்று யுத்தத்திற்கே செலவிடப்படுகின்றது.

இரண்டாம் தர நிலையில் காணப்பட்ட தேசிய முரண்பாடானது இரண்டு தசாப்தமாக பேரினவாத இராணுவ ஒடுக்கு முறை யுத்தமாக வளர்க்கப்பட்டதன் மூலமும், அரசியல் தீர்வு என்பது சுயநிர்ணய உரிமை அடிப்படையில் அணுகப்படாமையினாலும் அடிப்படை முரண்பாடு உருவாக்கி நிற்கும் பிரச்சினைகளுக்கும் மேலாக முதன்மை பெற்று பிரதான இடத்தை வகிக்கும் நிலையை உருவாக்கியுள்ளது. இவ்வாறு தற்போதைய சூழலில் பிரதான இடத்துக்கு வந்துள்ள தேசிய முரண்பாடு ஒரு தற்காலிக தன்மை பெற்று விளங்குகின்றது என்பதும் இம்முரண்பாட்டிற்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்படும் போது அது இரண்டாம் நிலைக்கு மீண்டும் செல்லமுடியும் என்பதும் கவனத்திற்குரியதாகும். ஆனால் அதற்குரிய காலம் அதன் நியாயமான தீர்வுத் தன்மையிலேயே தங்கியுள்ளது.

www.tamilarangam.net

இவ்வாறு தேசிய முரண்பாடுகள் பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளில் கூர்மையடைந்து பிரதான இடத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் தமது உள்ளார்ந்த தந்திரோபாயங் களைப் பயன்படுத்தியமையும் புறநிலைக் காரணமாகும். உலக அளவில் வர்க்கப் போராட்ட அடிப்படையில் இடம் பெற்று வந்த தேசிய விடுதலைப் போராட்டங்களை முறியடித்து சோஷலிசத்தை நோக்கிச் செல்லும் போராட்ட சூழலை திசை திருப்ப ஏகாதிபத்திய சக்திகள் தேசிய முரண்பாடுகளைத் தக்கவாறு பயன்படுத்த ஆரம்பித்தன. பாட்டாளி வர்க்கத் தலைமைத்துவங்களுக்குப் பதிலாக மத்தியதர வர்க்க குட்டி முதலாளித்துவத் தலைமைகளை உருவாக்கிக் குறிப்பாக இளைஞர் சக்திகளைப் பயன்படுத்துவதில் ஏகாதிபத்தியம் பல்வேறு வழிவகைகளில் ஒரு மறைமுகப் பின்புலப் பாத்திரத்தை வகித்து வந்தது. இது ஆழ்ந்த நோக்கல்களின் மூலமே அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. இதன் மூலம் ஏகாதிபத்தியம் ஓர் தற்காலிக வெற்றியை அடைந்து நிற்பதை நிராகரிக்க முடியாது.

1. வர்க்க போராட்ட சக்திகளை மழுங்கடித்து வர்க்க ரீதியில் அணி திரள வேண்டிய சக்திகளை இன, மத, மொழி ரீதியில் பிளவுண்டு அணி சேர வைத்துள்ளமை.

2. இனங்கள் மத்தியில் இருந்து வர்க்கப் போராட்ட சக்திகளாக வளரவேண்டிய இளைஞர் யுவதிகளை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து வருகின்றமை.

3. மூன்றாம் உலக நாடுகளில் சுயசார்புப் பொருளாதாரக் கொள்கைகளை உள்நாட்டு யுத்தங்களின் மூலம் கைவிடச் செய்து ஏகாதிபத்தியவாதிகளிடம் கையேந்தி நிற்க வைத்துள்ளமை.

4. அந்தந்த நாடுகளின் ஆளும் வர்க்கங்களின் அரசியல் ஒடுக்கு முறைகளுக்கு ஊக்கமளித்து அரசு யந்திரமான ஆயுதப் படைகளைப் பெருக்கி பலப்படுத்தி நவீனமாயமாக்கி யுள்ளமை.

5. இன்று உலகில் இடம் பெற்று வரும் 82 யுத்தங்களில் 79 யுத்தங்கள் நாடுகளுக்குள்ளே இனமொழி மத பிரதேச முரண்

www.tamilarangam.net

பாடுகள் காரணமாக முன்னெடுக்கப்படும் யுத்தங்களாகும் என்பது குறிப்பானதொன்றாகும்.

இவை அனைத்தும் உலக ஏகாதிபத்திய மூல உபாயத்தின் ஓர் அம்சமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை ஆழ்ந்து நோக்குதற்குரியதாகும். மூன்றாம் உலக நாடுகளின் சொத்துடமை மிக்க ஆளும் வர்க்க சக்திகள் இவ் ஏகாதிபத்திய நோக்கங்களுக்குப் பலியாகி நின்று தத்தம் நாடுகளை நாசமாக்கும் பாதையில் செயற்பட்டு வருகின்றன. இத்தகைய வழி யிலேயே இலங்கை 1977 ஆம் ஆண்டிற்குப் பின் நகர்த்திச் செல்லப் பட்டது. பதினேழு ஆண்டுகள் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி மேற்கூறிய வற்றைக் கொடூரமான வழிகளில் நிறைவேற்றிக் கொண்டது. அக்கால, கட்டம் பற்றித் தெளிவு பெறுவது அடிப்படை முரண்பாடு, பிரதான முரண்பாடு அவற்றினால் எழுந்த பிரச்சனைகள் என்பனவற்றை முழுமையாக விளங்கிக் கொள்ள அவசியமானவையாகும்.

www.tamilarangam.net

## 1977 - 1994 காலகட்டத்தில் இலங்கை

அமெரிக்க ஏகாதிபத்தியம், மேற்குலக, யப்பானிய முதலாளித்துவ ஏகபோக சக்திகள் மூன்றாம் உலக நாடுகளில் நிலவிவரும் ஏற்றத்தாழ்வான சமூக அமைப்புக்களைப் பாதுகாத்து நிலைநிறுத்தி வருவதில் அதிக அக்கறை உடையவையாகவே இருந்துவருகின்றன. அவற்றினூடே தமது ஏகபோக முதலாளித்துவ பல்தேசிய நிறுவனங்களின் நவ கொலோனியல் அமைப்பு முறைமைகளை ஊடுருவச் செய்து உலகம் தழுவிய சுரண்டல் கொள்ளையிடலுக்கான தளத்தை விரிவுபடுத்தி, பலப்படுத்துவதில் மிகச் சிரத்தை காட்டி நிற்கின்றன. எழுபதுகளின் பிற்கூறுகளிலும் அதற்குப் பின்னும் உருவாகிய சர்வதேசச் சூழல்களும் இவர்களுக்குச் சாதகமான நிலைமைகளைத் தோற்றுவித்தன. தமது மூல உபாயங்களக்கு ஏற்ப பழைய வழிமுறைகளுக்குப் பதிலாகப் புதிய செயல்முறைகளை மூன்றாம் உலக நாடுகளின் மீது திணிக்கத் தொடங்கினர். இதனையே ''புதிய உலக ஒழுங்கு', 'உலக மயமாதல்' போன்ற கவர்ச்சிகரமான சொல்லாடல்கள் மூலம் அமெரிக்கா முன்வைத்து வருகின்றது. இந்நச்சுத்தன்மை வாய்ந்த நவ கொலோனியல்முறை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களின் ஆலோசனை, வழிகாட்டல்கள், ஆணையிடல் போன்ற நடைமுறைகள் மூலமாக முன்தள்ளப்பட்டுவருகின்றது. இத்தகைய நவ கொலோனியல் அமைப்பு முறைகளுக்கு எமது நாடு ஏற்கனவே உட்படுத்தப்பட்டு விட்டது. கடந்த இரண்டு தசாப் தங்களாக நவ கொலோனியல் சுரண்டலுக்கும் அதன் பாரிய எதிர்விளைவுகளுக்கும் நமது நாட்டின் செல்வவளங்களும், ஆற்றல்மிக்க மனித வளங்களும் தாரைவார்க்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் ஆளும் பிற்போக்கு சக்திகளின் வைரம் வாய்ந்த பிரதிநிதியும் ஏகாதிபத்தியவாதிகளின் நம்பிக்கைக்குரியவருமான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1977 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் ஆட்சி அதிகாரத்தின் தலைமைப் பாத்திரத்தை பெற்றுக் கொண்டார். இது இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டுத் துறைகளில் ஒரு இருண்ட காலத்தைத் தொடக்கி வைத்தது. ஏகாதிபத்தியவாதிகளும் உள்நாட்டு பிரபுத்துவ, பெரு

www.tamilarangam.net

முதலாளித்துவ வர்க்க சக்திகளும் ஒன்றிணைந்து நாட்டை நாசக் காடாக்கும் நவ கொலோனியல் அமைப்புமுறைக்கு ஏதுவான உறுதிமிக்க அடித்தளங்கள் யாவும் இடப்பட்டன. தாராள பொருளா தாரக் கொள்கை என்னும் மகுடத்தின் கீழ் தனியார்மயமும், திறந்த சந்தையும் கொண்டு வரப்பட்டன. தேசிய பொருளாதாரம், சுயசார்பு, சொந்த வளங்களை விருத்தி செய்வது போன்ற யாவும் தூக்கி வீசப்பட்டன. அதற்குப் பதிலாக திறந்த பொருளாதாரக் கொள்கை நடைமுறையால் நாட்டில் சுபீட்சம் பெருகும், வேலைவாய்ப்பு அதிகரிக்கும், பொருட்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கும், நாடு விரைவில் ஒரு சிங்கப்பூராகிவிடும் என்று மக்கள் நம்ப வைக்கப்பட்டனர்.

அந்நிய பல்தேசிய நிறுவனங்களின் ஏகபோகச் சுரண்டலுக்கு சகல வாய்ப்புரிமைகளும் வழங்கப்படும் விதத்தில் சுதந்திர வர்த்தக வலயங்கள் உருவாக்கப்பட்டன. அங்கே நிறுவப்பட்ட தொழிற் சாலைகளில் நமது ஆண் பெண் தொழிலாளர்களின் கடுமையான உழைப்பு மிக மலிவு விலையில் சுரண்டப்பட்டது. அந்நிய மூலதனத் திற்கு முழுமையான பாதுகாப்பும், தொழிலாளர் வர்க்கத்திற்கு கடுமையான சட்ட நடைமுறைகளும் விதிக்கப்பட்டன.

தனியார் மயப்படுத்தும் கொள்கை பரந்த நிகழ்ச்சி நிரலாக்கப்பட்டது. ஏற்கனவே அரச கூட்டுத்தாபன பொதுத்துறைகளாக விளங்கிய நிறுவனங்கள் வேகமான வழிகளில் தனியார் கைகளுக்கு தாரை வார்க்கப்பட்டன. பெருந் தோட்டத் தொழில்துறையும் தோட்டங் களும் இருபத்திரண்டு தனியார் நிறுவனங்களிடம் நூறுவருடக் குத்தகை ஒப்பந்தத்தில் கையளிக்கப்பட்டன. இது தோட்டங் களையும் அதன் தொழிலாளார் வர்க்கத்தையும் அந்நிய உள்ளூர் முதலாளிகளிடம் கொடூரச் சுரண்டலுக்கு மீண்டும் கையளித்துள்ளன.

இத்தகைய தனியார் மயத்திற்கு இ.தொ.காவும் அமைச்சராக அங்கம் பெற்ற தொண்டமானும் முழு ஆதரவை வழங்கி நின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் மலையக மக்கள் மீதான வர்க்க இன அடக்கு முறைகள் பல்வேறு வழிகளில் ஏவப்பட்டும் வந்தன.

www.tamilarangam.net

நாட்டின் வளமிக்க காணிகள், விவசாய நிலங்கள் பல ஆயிரம் ஏக்கர் கணக்கில் பல்தேசிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. உதாரண மாக புத்தளம் மாவட்டத்தில் அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்திற்கு ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு, நிர்மாண வேலைகளும் இடம்பெறத் தொடங்கின. அப்பிரதேச மக்களின் வாழ்விடங்களும் தொழில் மையங்களும் இதனால் பாதிப்படைந்துள்ளதுடன் சுற்றுச் சூழல் மாசடைவது வேகமாகி வருகின்றது. அத்துடன் நாட்டின் சுதந்திரம், சுயாதிபத்தியத்திற்கான எதிர்கால அச்சுறுத்தலாகவும் அபாயமாகவும் அது அமைந்துள்ளது. கட்டுப்பாடற்ற இறக்குமதி யானது உள்ளூர் உற்பத்தியைப் பாழடையச் செய்துள்ளதுடன் அந்நியப் பொருட்களின் சந்தையாக நம் நாடு மாற்றப்பட்டுள்ளது. நமது மக்களது வாழ்வுத் தேவைக்கு அப்பாற்பட்ட ஆடம்பரப் பொருட்களின் குவியல்களை நகரங்களில் மட்டுமன்றி கிராமங் களிலும் காணமுடிகிறது. இது அந்நிய ஆடம்பரப் பொருட்களின் மீதான நுகர்வு மோகத்தையும் வாழ்க்கை பற்றிய போலித்தனங்களை யும் சாதாரண மக்கள் மத்தியில் பரவச் செய்வதற்கு வழிவிட்டுக் கொடுத்தது.

தாராள மயமாக்கல் அடிப்படையில் நமது நாட்டின் விலை மதிப்பற்ற சொத்தாக விளங்கும் மனித வளம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும், மேற்குலக நாடுகட்கும் கப்பல் ஏற்றப்பட்டது. அந்நிய செலா வணியைப் பெறுவதற்கும் உள்நாட்டில் வேலையின்மை என்பதைக் குறைக்கவும் ஒரு வழி முறையாகவே வெளிநாடுகளுக்குச் செல்லும் பாதை கட்டுப்பாடற்ற வகையில் திறந்து விடப்பட்டது. அதனால் மத்திய கிழக்கு நாடுகளில் நம்மவர்களின் கடும் உழைப்புக் குறைந்த விலையில் வாங்கப்படுகின்றது. மேற்குலகம் சென்றவர்கள் 'பொரு ளாதார அகதிகள்' என்ற ஏளனத்துடன் வேண்டப்படாதவர்களாக நடாத்தப்பட்டு தலைகுனிவு வாழ்வுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

பணவருவாயை மட்டுமே எதிர்பார்த்த உல்லாசப் பயணத்துறையால் நாட்டின் கலாசாரமும் இளம் தலைமுறையினரும் பாரிய சீரழிவு களுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். போதைவஸ்துப் பாவனை, சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகம் இவற்றின் மூலம் எயிட்ஸ் போன்ற கொடிய நோய்கள் உட்பட பன்முகச் சீரழிவுகள் தாராளமாகி வருவதற்கு வழிகாட்டப்பட்டது. மேற்குலகின் சீரழிவுகள் யாவும்

www.tamilarangam.net

இறக்குமதியாக்கப்பட்டு இளம் தலைமுறையினர் வழி திருப்பப்படு வதற்கு வகை செய்யப்பட்டது.

கல்விக் கொள்கையில் திட்டமிட்ட தேசியக் கல்விக் கொள்கை ஒன்று பின்பற்றப்படுவது கைவிடப்பட்டதுடன் திறந்த பொருளாதாரத்திற்கு அமைவான கல்விக் கொள்கை திணிக்கப்பட்டது. பல்கலைக் கழகங்களில் பல்வேறு சட்டங்களினால் கட்டுப்பாடுகள் இறுக்கப் பட்டன. கல்வி வர்த்தக மயமாக்கப்பட்டது. தனியார் துறையினர் கல்வியில் கைவைத்து அதனை வியாபாரமாக்கும் முறை படிப்படி யாக வளர்க்கப்பட்டது.

மேற்கூறியவற்றின் மூலம் முதலாளித்துவ போட்டிச் சிந்தனைகளும் மனித நேயத்திற்கும் அப்பால் பணத்தைச் சேர்ப்பதற்காக ஒருவரை ஒருவர் முந்திக் கொள்ளும் நச்சு மனப்பான்மை பிரதான போக்காக மாற்றப்பட்டது. பணம் சேர்க்கும் ஒரே குறிக்கோள் மேலோங்கி மனித விழுமியங்களை மறுக்கும் நிலை உருவாக்கப்பட்டு, போற்றிப் பாதுகாக்க வேண்டிய நமது கலாசாரத்தின் சில நற்கூறுகள் கூட கையிழக்கச் செய்யப்பட்டது.

இவ்வாறு ஏகாதிபத்திய நவ கொலோனியல் அமைப்பு முறைமையை விரிவுபடுத்தி உறுதியாக்குவதற்கு புதிய அரசியல் அமைப்பு வரை பும் அரசு யந்திரம் மூலமான ஒடுக்க முறையும் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதன் தலைவரான ஜே.ஆருக்கும் தேவைப் பட்டது. அதனால் புதிய அரசியல் யாப்பினை தகுந்தபடி உருவாக்கி நிறைவேற்று அதிகாரம் கொண்ட எதேச்சதிகார ஜனாதிபதி முறையைக் கொண்டு வந்து தன்னைத்தானே ஜனாதிபதியாக்கியும் கொண்டார். ஜே.ஆர். அப்பதவியில் பல தில்லுமுல்லுகள் குறுக்கு வழிகளைக் கையாண்டு சுதந்திரம், ஜனநாயகம் என்பனவற்றின் பெயரை உச்சரித்த பன்னிரண்டு ஆண்டுகள் தனிநபர் ஆட்சி செய்து தமது வர்க்கத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்குமான விசுவாசமிக்க கடமையைச் செய்து முடித்தார். ஏனைய நான்கு ஆண்டுகள் ஆர்.பிரேமதாசாவும் ஒரு ஆண்டு டி.பி.விஜேயதுங்காவும் ஆட்சிப் பொறுப்பில் இருந்தனர். இக்காலப் பகுதி முழுவதும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆயுதப்படைகளினதும் ஏனைய பாதாள உலகக் குண்டர் குழுக்களினதும் அரச பயங்கரவாதத்தின் மூலமே அவ் வாட்சி தக்கவைத்துக் கொள்ளப்பட்டது.

www.tamilarangam.net

அந்நிய பல்தேசிய நிறுவனங்களின் ஊடுருவல்களையும் அவர்களது கொடிய சுரண்டல்களையும் அவற்றுக்குத் துணை போகும் ஆட்சியின் சுயரூபத்தையும் மறைத்து மக்களைத் திசை திருப்புவதற்கும் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையினை மறுப்பதற்குமாக ஜே.ஆர். ஆட்சி தமிழ் மக்கள் மீதான மோசமான இன வன்செயல்களை திட்டமிட்ட வகையில் 1977 ம் 79 ம் 81 ம் 83 ம் ஆண்டுகளில் அடுத்தடுத்து ஏவி வந்தன. இதன் மூலம் பேரினவாதத்தை முழுமைப் படுத்தி தமிழ் மக்கள் மீதான இராணுவ ஒடுக்கு முறையை நிரல்ப் படுத்தி ஒரு கொடூர யுத்தமுனை திறக்கப்படுவதற்குரிய சகல அடித்தள வேலைகளையும் செய்து கொண்டது. தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் உயிர் உடைமை இழப்புகளுக்கு உள்ளாகி அகதிகளாகுவதற்கும் அன்று வழிவகை செய்யப் பட்டது. தமது பொது எதிரியை உரியபடி அடையாளம் காணப்படுவதை தடுத்து சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இன மொழி பிரதேச நிலைகளினூடே திசை திருப்பப்பட்டனர்.

வடக்குக் கிழக்கில் இன உரிமை கோரி நின்ற இளைஞர்கள் பயங்கரவாதிகள் எனக் கூறப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்ட அதேவேளை தெற்கில் தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராகவும் இளைஞர் - யுவதிகளுக்கு எதிராகவும் கடுமையான ஒடுக்குமுறைகள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கட்டவிழ்த்து விடப்பட்டன. தொழிலாளி வர்க்கத்தின் தொழிற்சங்க ஜனநாயக உரிமைகளை மறுத்து அடக்கும் அத்தியாவசிய சேவைகள் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆயுதப் படைகளுக்கு அளவற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டதுடன் அடையாளம் காட்டாத ஆயுதம் தாங்கிய குண்டர் குழுக்கள் ஆட்கடத்தல், கொலைகளில் ஈடுபட்டன. இளைஞர் யுவதிகள் மட்டுமன்றி அரசியல் வாதிகள், அறிவு ஜீவிகள், பத்திரிகையாளர்கள் இன்னும் பலர் கொல்லப்பட்டனர். பொருளாதார நெருக்கடிகளும் வேலையின்மையும் வறுமையும் சாதாரண இளைஞர் யுவதிகளை தீவிரவாக செயல்களின் பக்கம் செல்லுமாறு நிர்ப்பந்தித்தன. ஆனால் ஆட்சியினர் அவர்களுக்கு ''நாசகாரச் சக்திகள்'' எனப் பட்டம் சூட்டி அவர்களை வகை தொகையின்றி கொண்டு ஒழித்தனர். அக்கால கட்டத்தில் இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை அறுபதினாயிரம் எனச் சுட்டப்படுகிறது. மேலும் பல ஆயிரம் பேர்கள் இன்று வரை கண்டுபிடிக்கப்படாது காணாமற் போயினர். சிறைச்சாலைகளும்

www.tamilarangam.net

சித்திரவதைக் கூடங்களும் மனித உரிமைகளைப் பற்றிய சிறு அளவு சிரத்தையும் இன்றி மனித வதைகளிற் ஈடுபட்டன. முழுநாட்டிலும் அக்கால கட்டத்தில் ஒட்டு மொத்தமாக ஏறத்தாள ஒன்றே கால் இலட்சம், சிங்கள, தமிழ், முஸ்லிம் இளைஞர் யுவதிகள் மக்கள் கொன்றொழிக்கப் பட்டனர். சுமார் ஐம்பதினாயிரம் பேர் வரை காணாமற் போயினர். அதேவேளை அடக்குமுறை அரசியந்திரமான ஆயுதப்படைகள் விஸ்தரிக்கப்பட்டு நவீன ஆயுதங்களால் கட்டி எழுப்பப்பட்டது. இவை அனைத்தும் எந்த நோக்கத்தின் அடிப்படையில் இடம் பெற்றன என்பது மிக முக்கியமானதாகும். ஏகாதிபத்திய சக்திகளினதும், நிலவுடமை, பெரு முதலாளித்துவ வர்க்கங்களின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் ஏதுவாகவே மேற்கூறிய யாவும் முன்னெடுக்கப்பட்டன. இனங்கள் மற்றும் உழைக்கும் மக்கள் என்போர் மத்தியில் இருந்து வந்த வர்க்க சக்திகளாக வளர்ந்து வரக்கூடிய உண்மையான புரட்சிகர சக்திகளே திட்டமிட்டு நாடு முழுவதும் அழிக்கப்பட்டன என்பது ஆழ்ந்து நோக்கத்தக்கதாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட இருண்ட ஆட்சிக் காலத்தின் ஒரு உச்ச நிலையின் போதே எமது கட்சியின் இரண்டாவது தேசியக் காங்கிரஸ் 1991 ல் தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்து நிலைநிறுத்துவதும், சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதும் உடனடிக் கடமை எனச் சுட்டிக்காட்டியது. இது வரை முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி அமைப்பு முறையின் கீழ் மட்டுப்படுத்தப்பட்டதும் தொழிலாளி வர்க்கத்தினதும் மக்களினதும் போராட்டங்களின் மூலம் வென்றெடுக்கப்பட்டதுமான ஜனநாயக - தொழிற்சங்க -மனித உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்து அவற்றை மீட்டெடுப்பது உடனடித் தேவை என்பதை கட்சிக் காங்கிரஸ் சுட்டிக் காட்டியது. இச்சூழலில் தமிழ் தேசிய இனத்தினதும் ஏனைய சிறுபான்மையினரினதும் உரிமைகளை நிலைநிறுத்தும் வகையில் சுயநிர்ணய உரிமையானது வென்றெடுக்கப்படுவதன் அவசியத்தையும் அவ் இரண்டாவது காங்கிரஸ் தெளிவுபடுத்தியது. இவற்றைச் சாத்தியமாக்குவதற்கு சகல இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகள் ஒரு பரந்த வேலைத்திட்டத்தின் கீழ் அணி திரண்டு பல்வேறு வகைப்பட்ட போராட்டங்களை முன்னெடுப்பதன் தேவையையும் வற்புறுத்தியது. இதன் ஓர் அம்சமாக பாராளுமன்ற ஆட்சி அரங்கில் இருந்து பெரு முதலாளித்துவ

www.tamilarangam.net

பேரினவாத பாசிசத்தன்மை கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அகற்றப்பட்டு அவ்விடத்தில் ஓர் மாற்று ஜனநாயக அரசாங்கம் தோற்றுவிக்கப்பட வேண்டும் எனவும் அக்காங்கிரஸ் வலியுறுத்தியது. ஆனால் எமது கட்சிக் காங்கிரஸ் சுட்டிக்காட்டி வற்புறுத்தியவாறு ஒரு பொது வேலைத்திட்டத்தை உரியவாறு உருவாக்கி அதில் இடதுசாரி முற்போக்கு சக்திகள் முதன்மைப் பாத்திரம் வகித்து ஓர் ஜனநாயக மாற்று அரசாங்கத்தை உருவாக்கு வது என்பது முழுமை பெறமுடியவில்லை. கடந்த காலங்கள் போன்றே பாராளுமன்றத்தை மட்டும் குறியாகக் கொண்ட பாரம் பரிய இடதுசாரிக் கட்சிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பின்னால் இழுபட்டுச் செல்லும் வழமையான போக்கே மேலோங்கியது. இதனால் முழு இடதுசாரிச் சக்திகளும் குறைந்த பட்சமாவது உறுதி யான ஒரே குரலில் பேச முடியாத நிலைக்கு உள்ளாகின. இது ஆழ்ந்த பரிசீலனைக்கும் சுய விமர்சனத்திற்குரிய விடயமாகும். அவ்வாறான பரிசீலனையும் சுய விமர்சனமும் செய்யப்படுவதன் மூலமாகவே ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் உள்நாட்டு நிலவுடமை சார் பெரு முதலாளித்துவ சக்திகளுக்கு எதிராகவும் உறுதியான நிலைப்பாடு ஒன்றினைத் தோற்றுவிக்கும் இடதுசாரிகளது பொது வேலைத்திட்டம் ஒன்றினை உருவாக்கி முன்னெடுக்க முடியும். இதற்குரிய தேவை யையும் அவசியத்தையும் கடந்த இரண்டு ஆண்டுகளின் பொது சன ஐக்கிய முன்னணியின் ஆட்சியானது நம் அனைவருக்கும் உணர்த்தி யுள்ளது.

www.tamilarangam.net

## பொது சன ஐக்கிய முன்னணியின் ஆட்சி அதிகாரம்

பதினேழு வருட கால ஐக்கிய தேசியக் கட்சியின் கொடூர ஆட்சியில் வெறுப்புற்றிருந்த நாட்டு மக்கள் மத்தியில் பொதுசன ஐக்கிய முன் னணி மாற்று சக்தி என்னும் நம்பிக்கையைக் கொடுத்தது. குறிப்பாக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவின் தலைமைத் துவப் பாத்திரம் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை அலையாக வளர்ச்சி பெற்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூ னிஸ்ட் கட்சி என்பனவும் இலங்கை மக்கள் கட்சி, தேச விமுக்தி ஜனதா கட்சி ஆகியன இணைந்தே பொதுசன ஐக்கிய முன்னணியாகி நின்றன. இவற்றுக்கு வெளியே நின்ற இடதுசாரி முற்போக்குக் கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி அதிகாரம் அகற்றப் படும் அவசியத்தை ஏற்றுக் கொண்டன. அவை பொதுசன ஐக்கிய முன்னணி பிரச்சனைகளுக்கு முற்று முழுதான தீர்வைக் கொண்டு வரமுடியாவிடினும் குறைந்த பட்சமாவது செயலாற்றும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தத்தமது ஆதரவினை வழங்கின. தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்து சுயநிர்ணய உரிமையை வென் றெடுப்பது என்னும் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் வகுத்துக் கொண்ட பிரதான கோரிக்கையின் முழுமை அம்சங்களை பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சி அதிகார வரவால் பெற்றுக் கொள்வது இயலாத ஒன்று என்பதை கட்சி உணர்ந்திருந்தது.

ஆனாலும் அன்றைய சூழலில் பொதுசன ஐக்கிய முன்னணியை ஆதரிப்பதை விட கட்சிக்கு வேறு வழி இருக்கவில்லை. அதேவேளை மேற்கூறியவற்றில் சிலவற்றையாவது அத்தகைய ஆட்சி அதிகார வரவால் சாத்தியமாக்க முடியும் என்ற எதிர்பார்ப்பின் அடிப் படையிலேயே கட்சி தனது முழு ஆதரவையும் வழங்கியது. ஆனால் எதிர்காலத்தில் கண்மூடித்தனமான ஆதரவு என்பதற்குப் பதில் சாதகமானவற்றை ஆதரிப்பது பாதகமானவற்றை எதிர்த்துப் போரா டுவது என்னும் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து செயற்படும் அம்சத்தைக் கட்சி தெளிவுபடுத்திக் கொண்டது குறிப்பிடத்தக்க தாகும்.

www.tamilarangam.net

ஐக்கிய தேசியக் கட்சியின் பெரு முதலாளித்துவ பேரினவாத பாசிச ஆட்சி அதிகாரத்தால் சிதைந்து சின்னாபின்னப்படுத்தப்பட்ட இலங்கை நாட்டை முற்று முழுதாக மீட்டெடுத்துக் கட்டியெழுப்பும் ஓர் ஆழமான பொது வேலைத்திட்டத்தை பொதுசன ஐக்கிய முன்னணி கொண்டிருக்கவில்லை என்பதைக் கட்சி ஏற்கனவே கண்டு உணர்ந்திருந்தது. அதற்கு அடிப்படையாக அமைந்திருந்தமை ஐக்கிய முன்னணியில் இணைந்திருந்த கட்சிகளின் வர்க்கத்தன்மைகளின் நிலைப்பாடே ஆகும்.

இருந்த போதிலும் அவர்கள் முன்வைத்த தேர்தல் வேலைத்திட்டத்தில் காணப்பட்ட ஐந்து பிரதான விடயங்கள் தேர்தல் வாக்குறுதிகளாக மக்கள் முன் நம்பிக்கை அளித்தன.

1. முன்னைய ஆட்சியின் மறுத்து அடக்கப்பட்ட ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமைகளை மீட்டெடுத்து நிலை நிறுத்துதல்

2. யுத்தமாக மாற்றப்பட்டுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு யுத்த வழி முறையைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மூலம் நியாயமான அரசியல் தீர்வைக் கொண்டு வருதல்.

3. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் மூலம் பாராளுமன்றத்திடம் அதிகாரங்களை ஒப்படைத்தல்.

4. வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தி வேலை வாய்ப்பு, கல்வி மற்றும் சமூக சேவைகளைச் சீராக்கி மக்களுக்கு ஆறுதலும் சேவையும் அளித்தல்

5. மனித முகத்துடனான திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.

நாட்டு மக்களுக்கு முன்வைத்த மேற்படி தேர்தல் வாக்குறுதிகளின் அடிப்படையில் 1994 இல் இடம்பெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி அறுதிப் பெரும்பான்மை அற்ற நிலையில் வெற்றி பெற்றது. ஏற்கனவே தேர்தல் இணக்கப் பாட்டில் இணைந்து கொண்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் (லலித் பிரிவு) சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து மலையக மக்கள் முன்னணியின் ஒரு

www.tamilarangam.net

மேலதிக வாக்குடன் அரசாங்கத்தை அமைத்துக் கொண்டது. பின்பு இலங்கை தொழிலாளர் காங்கிரசும் அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட அதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர். எல்.எப்., புளொட் ஆகிய தமிழ்க் கட்சிகளும் ஆதரவு வழங்கின. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு வடக்கு கிழக்கு மலையக தமிழ் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வழங்கியது போன்ற ஒரு ஏகோபித்த ஆதரவை முன் எப்பொழுதுமே சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கம் பெற்றுக் கொள்ள வில்லை என்பது குறிப்பிடக்கூடிய அம்சமாகும். இத்தகையதொரு சூழலிலேயே 1994 நவம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா 62 வீதமான வாக்குகளைப் பெற்று பெரும் வெற்றி யைப் பெற்றுக் கொண்டார். இவ்வெற்றியானது ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகார வெறி கொண்ட கொடுமை மிகு ஆட்சிக்கு கிடைத்த பலத்த அடியாகவும் அமைந்தது.

பொதுசன ஐக்கிய முன்னணியும் அதன் ஜனாதிபதியும் பதவிக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் அதன் ஆட்சி அதிகாரத் தன்மை பற்றிய கணிப்பீட்டில் சில அடிப்படைக் கூறுகளை ஆராய்ந்து கொள்வது இவ்வேளை அவசியமாகும். தேசிய முத லாளித்துவ சக்திகளைப் பிரதிநிதித்துவம் செய்து வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தொழிலாளி வர்க்கத்தின் சார்பாக நின்று வந்த பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளும் இணைந்தே ஐக்கிய முன்ன ணியை உருவாக்கி கடந்த காலங்களில் ஆட்சி நடாத்தினார்கள். இன்றும் அவ்வாறே ஆட்சி செய்கிறார்கள். ஆனால் அன்றைய நிலைமைகளுக்கும் இன்றைய செயற்பாடுகளுக்கும் இடையில் பெருத்த வேறுபாட்டினைக் காணமுடிகின்றது. அன்று சில வரையறை களுக்கு உட்பட்ட அளவிலாவது முற்போக்கான நடைமுறைகளைப் பின்பற்றி தேசிய பொருளாதார அபிவிருத்தி என்பதனை மையப் படுத்தி சுயசார்பைக் கட்டியெழுப்பும் நோக்கில் செயற்பட்டனர். அக்காலத்தில் குறிப்பிட்டளவு தூரத்திற்கு ஏகாதிபத்திய நலன்களை எதிர்த்து நிற்கவும் செய்தனர். அத்தகைய தேசிய நலன்கள் சார்ந்த முற்போக்கான செயற்திட்டங்களைத் தான் தற்போதைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திடமும் மக்கள் எதிர்பார்த்தனர்.

www.tamilarangam.net

ஆனால் கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கம் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்து மக்கள் ஏமாற்றம் கொள்ளும் நிலைக்கே தள்ளப்பட்டுள்ளனர். ஏகாதிபத்திய பல்தேசிய நிறுவனங்களுக்கு முற்றிலும் வழி விட்டுக் கொடுத்துச் செல்லும் போக்கிலேயே அரசாங்கம் சென்று கொண்டிருக்கிறது. மனித முகத்துடனான திறந்த பொருளாதாரம் என்பது எவ்வகையிலும் வெளிப்பாடடைய வில்லை. தனியார் மயம் தொடர்ந்தும் வேகப்படுத்தப்படுகிறது. தாராள சந்தை மேன்மேலும் ஊக்கவிக்கப்படுகிறது. இவற்றால் தேசிய பொருளாதாரம் சுய சார்பின் மூலம் சொந்த வளங்களின் அபிவிருத்தி அடிப்படையில் விருத்தி செய்யப்படும் நிலை மறு தலிக்கப்பட்டு வருகிறது.

முன்னைய அரசாங்கத்தினால் தனியார் மயப்படுத்தப்பட்ட அரச கூட்டுத்தாபனங்கள் மீட்கப்படாத எஞ்சியுள்ளவையும் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் பிரதான ஏற்றுமதித் துறையாக விளங்கும் பெருந்த தோட்டத் தொழில் துறை முற்றிலும் தனியார் நிறுவனங்களுக்கு கடந்த அரசாங்கம் கையளித்தது. தோட்டத் தொழிலாளர்களும் தேசிய நலன் விரும்பிய சக்திகளும் காட்டிய எதிர்ப்பையும் மீறியே அன்றைய அரசாங்கம் தோட்டங் களைக் கொடுத்தது. ஆனால் ஐக்கிய முன்னணி ஆட்சியும் அவ் வாறே கம்பனிகளிடம் தோட்டங்களை விட்டு வைத்து செயற்படு கிறது. இது தோட்டங்களையும் தோட்டத் தொழிலாளர்களையும் பழைய கொலனித்துவத்தின் இருண்ட கால வாழ்வுக்குள் மீண்டும் தள்ளிவிட்டுள்ள நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. அதன் விளைவாக சம காலத்தில் வேலை நாட்குறைப்பு சம்பள உயர்வு இன்மை போன்ற பிரச்சினைகள் உட்பட ஏனைய அன்றாடப் பிரச்சனைகளையும் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்க வைத்துள்ளது. இதே போன்று சுதந்திர வர்த்தக வலய அமைப்பு முறை பாதுகாக்கப்பட்டு அந்நிய நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பும் பாதுகாப்பும் வழங்கப்பட்டு வருகிறது. அதேவேளை சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் ஆண் பெண் இருபாலரும் மோசமாகச் சுரண்டப்படுவதிலிருந்து எவ்வித பாதுகாப்பும் அற்ற வர்களாக விடப்பட்டுள்ளனர்.

அமெரிக்க, ஐரோப்பிய, யப்பானிய ஏகாதிபத்திய ஏகபோக முத லாளித்துவ மையங்களின் நலன்கள் முதன்மைப்படுத்தப்படுவதனை

www.tamilarangam.net

இன்றைய அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை. கடந்த கால நிலைப்பாடுகளைக் கொண்டிருக்க முடியாது அடி பணிந்த நிலை யிலேயே அரசாங்கம் நடந்து கொள்கிறது. உதாரணமாக அன்று அந்நிய ஏகாதிபத்திய எண்ணெய் கம்பெனிகள் தேச உடமை யாக்கப்பட்ட போது காண்பிக்கப்பட்ட ஆட்சியின் துணிச்சலையும் உறுதியையும் இன்று வொஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையம் பிரச்சனையில் கைக்கொள்ள முடியாத நிலையில் முற்றிலும் விட்டுக் கொடுத்துச் செல்லும் போக்கே எஞ்சி நிற்கிறது. அதே போன்றே அன்று பெரும் தோட்டத்துறையை தேசிய மயப்படுத்தி அந்நியரை அகற்றிய நிலைக்கு எதிர்மாறாக நாட்டின் வளமான விவசாய, காட்டு நிலங்கள் பல்தேசிய கம்பனிகளுக்குத் தொடர்ந்தும் வழங்கப்படு வதற்கு அரசாங்கம் முன் நிற்கிறது. ஜனாதிபதியும் அமைச்சர்களும் அந்நிய மூலதனத்திற்குத் தொடர்ந்தும் அழைப்பு விட்டவாறே உள்ளனர். இத்தகைய அமைப்புகள் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கவும் வேலை வாய்ப்பை அதிகரிக்கவும் செய்யும் என்று கூறப்படுகிறது. அது உண்மையானால் கடந்த ஆட்சியின் பதினேழு வருடங்களில் ஏன் அவ்வாறு இடம் பெறவில்லை. உண்மையில் இது தொடர்ந்தும் நாட்டை மேலும் நவ கொலனித்துவம் ஆக்கிப் பொருளாதாரத்தை நாசப்படுத்தவே செய்யும்.

உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் நமது நாட்டின் பொரு ளாதாரத்தில் எது செய்யப்பட வேண்டும் எவை செய்யப்படக்கூடாது என்பதைத் தீர்மானித்து ஆணையிடும் நிலையில் இருந்து வரு கின்றன. நாட்டில் எஞ்சியுள்ள அரசாங்கப் பொதுத்துறைகளை தனியார் மயப்படுத்துமாறு வற்புறுத்தல் செய்கின்றன. அதனை பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முழுமையாக ஏற்றுக் கொண்டு செயற்படுகிறது. விமானப் போக்குவரத்து, துறைமுகங்கள், மின்சாரம், புகையிரதப் போக்குவரத்து போன்ற நாட்டின் பிரதான துறைகள் அனைத்தையும் தனியார் மயப்படுத்துமாறு கோரப்பட் டுள்ளது. ஏற்கனவே இவற்றுக்கான செயற்திட்டங்களும் நடைமுறை களும் வேகப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு உலக வங்கியின் வழிகாட்டலை முழுமையாக ஏற்றுச் செயற்படும் போக்கினால் நாட்டில் பணவீக்கம் அதிகரித்துச் செல்கிறது. அதன் மூலம் வாழ்க்கைச் செலவு நாளாந்தம் உயர்ந்த வண்ணம் உள்ளன. இன்று கோதுமை மாவின் விலை அதிகரிப்பு

www.tamilarangam.net

சாதாரண மக்களை எந்தளவுக்குப் பாதித்து நிற்கிறது என்பதை இன்றைய அரசாங்கத்தினால் உணர முடியாத ஒன்றாகவே உள்ளது. வாழ்க்கைச் செலவு மக்கள் மீதான பெரும் சுமையாக அதிகரித்து வரும் அதேவேளை சம்பள உயர்வு என்பது வெறும் கண்துடைப் பாகவே காட்டப்படுகிறது.

முன்னைய பெருமுதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சி எத்தகைய் பொருளாதாரக் கொள்கையை பின்பற்றியதோ அதனையே பெயர் மாற்றங்களுடன் பொதுசன ஐக்கிய முன்னணி தொடர்கிறது. இது தேசிய முதலாளித்துவ இடதுசாரி வர்க்கத் தன்மைகளின் எஞ்சிய வற்றையும் இழக்கச் செய்துள்ளது. இந்த அரசாங்கத்தின் சேவையும் பாதுகாப்பும் அந்நிய ஏகாதிபத்திய பல்தேசிய கம்பனிகளுக்கும் உள்ளூர் பெரும் சொத்துடமை வசதி படைத்தவர்களுக்குமாகவே அமைந்து உள்ளது. அதனாலேயே தொழிலாளி வர்க்கத்திற்கு ஓரளவு தானும் நன்மை தரக் கூடியது என எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் சாசனம் முன்வைக்கப்பட்ட போதிலும் அது தடுத்து நிறுத்தப்பட்டு கிடப்பில் போட்டு வைக்கப்பட்டுள்ளது. அதே போன்று தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு உத்தரவாதம் வழங்கும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஒரு சரத்தினை இங்கு நிறை வேற்றிக் கொள்ள அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது. இவை அனைத்தும் எதைக் காட்டுகின்றது என்றால் இந்த அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்கள் ஏகாதிபத்திய ஏகபோக முதலாளித்துவ பல்தேசியக் கம்பனிகளுடன் நிபந்தனையற்ற சமரசம் செய்து கூட்டாளிகளாக மாறியுள்ள நிலைமையேயாகும்.

பொதுசன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்த சூழலில் ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்திகளுக்குச் சற்று பதட்டமாகவே இருந்தது. அதனால் அவர்கள் மிகுந்த நிதானத்துடன் தமது பொருளாதார அரசியல் இராணுவ வலைகளை விரித்து அதனுள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை வீழ்த்திச் சிக்க வைப்பதில் வெற்றி பெற்றுக் கொண் டன என்பதே உண்மையாகும். தமது பொருளாதார அரசியல் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள இந்த அரசாங்கத்திற்கு தாராள மாகக் கடன்களும் உதவிகளும் அளித்ததுடன் யுத்தத்தை விரிவாக்கி நடத்தக் கூடியளவு இராணுவ உதவிகளையும் செய்ய முன் வந்தனர். இன்று என்றுமில்லாதவாறு அமெரிக்காவின் இராணுவ உதவிகள் ஒத்தாசைகள் விரிவான பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. அவர்

www.tamilarangam.net

களின் ஆயுத விற்பனைக்கான ஒரு சந்தையாகவும் நமது நாடு தொடர்ந்து இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய சூழலிலேயே தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு என்ற மக்கள் அளித்த ஆணை மீறப்பட்டு யுத்தத்தின் மூலம் தீர்வு என்னும் நிலையை அரசாங்கம் எடுத்துக் கொண்டது. அதனால் அரசாங்கத்திற்கும் தேசிய இன விடுதலைப் போராட்ட அரங்கில் முதன்மைப் பாத்திரம் வகித்து நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிக்குமிடையிலான பேச்சுவார்த்தையில் படிப்படியாகப் பின்னடைவுகள் தோன்றி வளர ஆரம்பித்தன. புரிந்துணர்வின் அடிப்படையில் விட்டுக் கொடாமை, பேச்சுவார்த்தைகளுக்கிடையிலான கால இடைவெளி அதிகரித்தமை, பரஸ்பரம் சந்தேகங்கள் வலுப்பட்டமை, வெளிநாட்டு சக்திகளின் உள்ளார்ந்த விருப்பு வெறுப்புகளுக்கு செவி சாய்த்தமை, பேச்சுவார்த்தை என்பது இடம்பெற்ற சம காலத்திலேயே தத்தமது இராணுவ பலத்தை இரகசியமாகவே பெருக்கிக் கொண்டமை போன்றன பேச்சுவார்த்தையில் நம்பிக்கையீனத்தையும் தளர்ச்சியையும் ஏற்படுத்தி வந்தன. இந்நிலையில் புலிகள் இயக்கம் ஏற்கனவே இணங்கப்பட்ட யுத்த நிறுத்தத்தை ஒரு தலைப்பட்சமாக முறித்துக் கொண்டு தாக்குதல் நடவடிக்கையில் இறங்கியது. பதிலுக்கு அரசாங்கமும் படிப்படியாக முழுமையான இராணுவ நடவடிக்கை நோக்கிச் சென்றது. அரசியல் தீர்வுக்கான தீர்வுத்திட்டம் என்பது வெளியிடப்படாத சூழலில் ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலம் தெற்கின் பேரினவாத இராணுவ யுத்தப் பிரியர்களின் உணர்வுகள் குளிர்மைப்படுத்தப்பட்டன. தீர்வுத்திட்டத்தை அரசு பதவிக்கு வந்த ஒரு வருடத்தின் பின்பே வெளியிட்டது. பின்பு கூட பேச்சுவார்த்தைக்கான சூழல் உருவாக்கப்படாமலேயே யாழ்ப்பாணத்தை விடுவிக்கும் பாரிய இராணுவ நடவடிக்கையாக 'ரிவிரச 1' வடக்கில் இடம்பெற்றது. சமாதானத்தையும் அரசியல் தீர்வையும் எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களின் ஐந்து லட்சம் பேர் 1995 ஒக்ரோபரில் தொடங்கிய இராணுவ நடவடிக்கையால் இருப்பிடம், சொத்துக்கள் இழந்து அகதிகளாக இடம் பெயர்ந்தனர். இது வரலாற்றில் இடம் பெற்ற மிகப் பெரும் துன்பியலாகியது. இது இடம்பெற்று ஆறு மாதங்களின் பின்பு ரிவிசர 2 இராணுவ நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணம் வலிகாமத்திற்கு மீள

www.tamilarangam.net

அனுப்பப்பட்டனர். ஏற்கனவே இடம்பெயர்ந்த மக்களில் ஒன்றரை இலட்சம் பேர் வன்னிப் பிரதேசத்திற்கு அகதிகளாகச் சென்றனர்.

குடாநாடு முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பின் கிளிநொச்சியின் சில பகுதிகளும் பிடிக்கப்பட்டன. இதே போன்று கிழக்கின் குறிப்பிட்ட பிரதேசங்களும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. தமிழ், முஸ்லிம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு கிழக்கு இன்று பல துண்டுகளாக்கப்பட்டு இராணுவக் காவலரண்கள், காப்பு வேலிகள், மிதிவெடி கண்ணிவெடி எல்லைகள் போன்றவற்றால் கண்காணிக்கப்படுகிறது. சிவில் நிர்வாகம் என்பது இராணுவ நிர்வாகமாகவே நடாத்தப்படுகிறது. இன்று முழு நாட்டையும் நோக்கின் மூன்று வித நிர்வாகம் நடை பெறுவதை அவதானிக்கலாம். ஏழு மாகாணங்களில் சிவில் நிர்வாக மும், இரண்டு மாகாணங்களில் இராணுவ நிர்வாகமும், புலிகளின் நிர்வாகமும் இடம் பெறுகின்றன. வடக்கு கிழக்கின் இராணுவ நிர்வாகம் என்பது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் ஒன்றில் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் எவ்வாறு நடந்து கொள்ளுமோ அவ்வாறே செயற்பட்டு வருகின்றது. அங்கே ஜனநாயக மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் இடம் பெறுகின்றன. அதேவேளை இராணுவக் கட்டுப் பாடற்ற பிரதேசங்களில் புலிகளின் நிர்வாகம் அவர்களது வசதிக்கும் வாய்ப்புக்குமேற்றவாறு நடாத்தப்படுகிறது. அப்பிரதேச மக்களது நாளாந்த வாழ்க்கையும் அடிப்படை வசதிகளும் மிகவும் மட்டுப் படுத்தப்பட்டவையாகவே காணப்படுகின்றன. இராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசங்களில் புலிகள் தமது தாக்குதல்களைத் தொடர் வதும் புலிகளின் பிரதேசங்களில் இராணுவம் தாக்குதல்களில் ஈடுபடுவதும் தொடரப்படுகின்றன. இதனால் வடக்குக் கிழக்கில் இயல்பு வாழ்க்கை, சிவில் நிர்வாகம் என்பது இதுவரை சீர்ப்படுத்தவியலாத ஒன்றாகவே இருந்து வருகின்றன.

இந்நிலையில் அரசியல் தீர்வுத்திட்டம் தனது ஆரம்ப நிலை வடி வத்தில் இருந்து வெட்டிக் குறைக்கப்பட்டதொன்றாகப் பாராளுமன்ற தெரிவுக் குழுவில் விவாதிக்கப்பட்டு வரும் ஒன்றாக இருந்து வருகிறது. தீர்வுத்திட்டத்தை நிராகரித்து நிற்கும் விடுதலைப் புலிகள் நிபந்தனையுடன் மூன்றாம் தரப்பு மத்தியத்தை வற்புறுத்துகின்றனர். அரசும் புலிகளுடன் பேச நிபந்தனை வைத்துள்ளது. அரசியல் தீர்வு தான் இறுதி வழி எனக் கூறிவரும் அரசாங்கம் அதற்குரிய வழி

www.tamilarangam.net

முறைகளில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அத்தகைய உறுதிப்பாடு படிப்படியாகக் குறைந்து வந்து இன்று இராணுவத் தீர்வே மேலோங்கியதாக விளங்குகின்றது.

தேசிய இனப்பிரச்சினையின் தற்போதைய யுத்த சூழலில் சில புதிய பரிமாணங்கள் தோன்றி உள்ளன. ஒன்று, தீர்வுத்திட்டம் முன் வைக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் பரவலாக விவாதிக்கப்பட்டு வருவது. இரண்டு, அதிக அக்கறையுடனும் தன்முனைப்புடனும் தேசிய இனப் பிரச்சனையில் தலையிட்டு வந்த இந்தியா தற்போது வெளிப்படையாக அக்கறை குறைந்தும் தூரத் திலும் ஓர் பார்வையாளன் நிலைப்பாட்டில் இருந்து வருகின்றமை. மூன்றாவது அமெரிக்காவினதும் மேற்குலக நாடுகளினதும் நெருக் கமும் அக்கறையும் ஆதரவும் அரசாங்கத்திற்குக் கிடைத்து வருகின் றமை.

மேற்கூறியவை மிக உற்று நோக்க வேண்டியவையாகும். அரசியல் தீர்வு மட்டுமே இறுதித்தீர்வு எனக் கூறிக்கொண்டே யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் போக்கு உள்நாட்டுப் பேரினவாதிகளுக் கும் வெளிநாட்டு சக்திகளுக்கும் ஏற்றதொரு கொள்கையாகும். இதனை ஏற்றுக் கொண்டுள்ளதாலேயே உதவி வழங்கும் நாடுகள் உலக வங்கியின் வழி காட்டலில் கேட்ட தொகையிலும் பார்க்கக் கூடுதல் கடன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதே வேளை அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் இதுவரை காலமும் கண்டும் காணாத போல இருந்து வந்த புலிகள் இயக்கம் பற்றிய நிலைப்பாட்டில் கடுமையாக நடந்து கொள்ள ஆரம்பித்திருப் பதாகும். தனது மண்ணில் புலிகளின் நடவடிக்கைகளுக்கு இடமளிக்க மாட்டாது என்றும் அவ்வியக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கம் எனவும் அமெரிக்கா பகிரங்கமாக அறிவித்துள்ளது. அத்துடன் இலங்கை இராணுத்திற்கான ஆயுத உதவி மட்டுமன்றி இலங்கை மண்ணிலேயே நேரடி இராணுவப் பயிற்சிகளை விரிவுபடுத்தி வருவதுடன் அடிக்கடி அமெரிக்க உயர் இராணுவக் குழுக்கள் இங்கு வந்து மேற்பார்வை செய்து ஆலோசனைகளையும் வழங்கிச் செல்கின்றன.

தேசிய இனப்பிரச்சினை இன்றைய கொடூர யுத்தமாகிய கடந்த இரண்டு சகாப்தங்களில் அமெரிக்காவின் பின்புலப் பாத்திரம்

www.tamilarangam.net

எத்தகையது என்பது அரசியல் உற்றுநோக்காளர்களுக்கு நன்கு புரியும். இதுவரை தான் சம்பந்தப்படாத நேர்மையாளன் போல் நடந்து கொண்ட அமெரிக்கா இன்று ஏதோ உதவ வரும் இரட்சகன் போல் அறிக்கைகள் விட்டு வருகின்றது. பதினேழு வருட கால ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மீது மக்கள் வெறுப்புக் கொண்ட காரணத்தால் அவ் ஆட்சிமூலம் தமது நோக்கங்களைத் தொடர்வது உசிதமல்ல என்பதால் ஓர் ஆட்சிமாற்றத்தை அமெரிக்கா விரும்பியது. அதேவேளை பதவிக்கு வந்த புதிய அரசாங்கத்தை மடக்கி தன் வசப்படுத்திக் கொள்வதில் பல்முனை உத்திகளின் ஊடாக வெற்றியும் பெற்றுள்ளது. இன்று ஆசிய பசுபிக் பிராந்தியத் தில் தனது நலன்களுக்கான ஒரு தகுந்த தளமாக இலங்கையை மாற்றிவருவதில் அமெரிக்கா என்றுமில்லாதவாறு ஊக்கம் பெற்றுள் ளது. இந்த நிலை பிராந்திய மேலாதிக்கமாக வளர்ச்சி பெற்றுள்ள இந்திய நலன்களுக்கு உகந்ததாக அமையப்போவதில்லை என்பது மற்றொரு கவனத்திற்குரிய அம்சமாகும். எனவே உலக மேலாதிக்கம் நோக்கிச் செல்லும் அமெரிக்காவிற்கும் பிராந்திய மேலாதிக்கம் நாடிநிற்கும் இந்தியாவிற்குமான முரண்பாட்டின் பலப்பரீட்சைக் களமாக இலங்கையும் தேசிய இனப்பிரச்சினையும் ஆக்கப்படும் அபாயமும் விரிவாகி உள்ளது. இதனைப் பொதுசன ஐக்கிய முன் னணி அரசும் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் உள்ள விடுதலைப் புலிகளும் ஏனைய கட்சிகள் அமைப்புகள் அதிகளவு புரிந்து கொள்வது மிக முக்கியமானதாகும். உலகின் எந்தவொரு நாட்டினதும் பிரச்சனையில் அமெரிக்கா தன் நலன் கருதாது நேர்மையாக நடந்து கொண்ட வரலாற்றை ஒரு மூலையில் தானும் காணவியலாது. அதற்குப் பதிலாகப் பிரச்சினைகளைச் சிக்கலாக்கி அதன் ஊடே தனது நலன்களை உறுதிப்படுத்திக் கொள் வதிலேயே குறியாக இருந்து வந்துள்ளமையே அதன் வரலாறாகும்.

பொதுசன ஐக்கிய முன்னணி மக்களுக்கு முன்பாக வைத்த வாக்குறுதி களில் மற்றொன்று ஜனநாயக - தொழிற்சங்க - மனித உரிமைகளை மீட்டெடுத்து நிலைநிறுத்துவது என்பதாகும். அதன் அடிப்படையில் இன்றைய அரசாங்கம் கடந்த கால ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியின் கீழ் இடம்பெற்ற ஜனநாயக மனித உரிமை மீறல்கள் பலவற்றைப் பல்வேறு ஆணைக்குழுக்கள் மூலமாக வெளிக் கொணர்ந்துள்ளது. அத்துடன் கருத்து, எழுத்து சுதந்திரங்கள் சிலவற்றுக்கு குறிப்பிட்

www.tamilarangam.net

டளவு வாய்ப்பும் அளித்துள்ளமை காணக்கூடியதேயாகும். தொழிற் சங்க நடவடிக்கையான வேலை நிறுத்தம், மறியல் போன்றவற்றை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடாத்துவதற்கும் இந்த அரசாங் கத்தின் கீழ் முடிகிறது. கடந்த அரசாங்கத்தை விட இது சற்று வித்தியாசமானதொன்றேயாகும். ஆனால் அடிப்படையில் ஜன நாயக -தொழிற்சங்க மனித உரிமை பற்றிய விடயத்தில் இந்த அரசாங்கத்திடம் முழுமையாக எதையும் எதிர்பார்க்கமுடியாது, ஏனெனில் அடிப்படையில் அது ஓர் வர்க்கப் பிரச்சினை ஆகும். மக்கள் சார்பற்ற, தேசிய நலன்களுக்கு விரோதமான ஒரு பொருளா தாரக் கொள்கையை நடைமுறைப்படுத்திக் கொண்டும், தேசிய இனப்பிரச்சினைக்கு யுத்த வழிமுறைகளை நாளாந்தம் விரிவாக்கிக் கொண்டும், மறுபுறத்தில் ஜனநாயக -மனித உரிமைகளைப் பாது காத்து முன்னெடுப்பதாக அரசாங்கம் கூறிக் கொள்வது வெறும் அர்த்தமற்ற, முழக்கங்களாகவே இருக்க முடியும். தென் இலங்கை யில் தனியார் மயத்தை எதிர்த்தும், சம்பள உயர்வு உட்படத் தமது கோரிக்கைகளை முன்வைத்தும் வேலைநிறுத்தம் செய்யும் தொழி லாளர்களை மிரட்ட இன்றும் பழைய அரசாங்கம் உருவாக்கிய தொழிற்சங்க விரோதச் சட்டமான அத்தியாவசிய சேவைகள் சட்டம்தான் பயன்படுத்தப்படுகிறது என்றால் எவ்வாறு தொழிலாளி வர்க்கத்திற்கு ஏற்ற வகையில் ஜனநாயக - தொழிற்சங்க உரிமை களை வழங்கிப் பாதுகாக்கமுடியும். அதேபோன்று வடக்கு கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இளைஞர்கள் காணாமற் போவதும் சிறை சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதும் யுவதிகள், பெண் கள் பாலியல் வல்லுறவு -வன்முறைகளுக்கு உள்ளாவதும் இடம் பெற்று வருவனவாகவே காணப்படுகின்றன. இங்கே பயங்கரவாதத் தடைச்சட்டம் முன்னைய ஆட்சியினால் கொண்டு வரப்பட்டி ருப்பினும் இன்றும் அதன் பிரயோகம் இந்த அரசாங்கத்தினாலும் பயன்படுத்தப்படுகிறது. அச்சட்டத்தின் கீழ் இன்றும் மாத வருடக் கணக்கில் விசாரணை இன்றி இளைஞர்கள், யுவதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே எதிர்பார்த்த அளவிற்கு ஜனநாயக -தொழிற்சங்க -மனித உரிமைகள் விடயத்தில் இந்த அரசாங்கத்தின் கீழ் அதிகம் எதுவும் இடம்பெறவில்லை. அண்மைக் கால நிகழ்வுகள் அதனை உறுதிப் படுத்தி நிற்கின்றன. ஏற்கனவே முதலாளித்துவ வரையறைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமக்குத் தகுந்தவாறே ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமைகளை மட்டுப்படுத்தப்பட்ட வகையில் வரைந்து வைத்துள்ளன. அதற்குள் மக்கள் கட்டுப்பட்டு நிற்கும் வரை முதலாளித்துவம் தனது ஜனநாய கம் பற்றி குரல் வைத்து முழங்கும். ஆனால் தான் வகுத்த வரையறை களை தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் மீறும் சூழல் ஏற்பட்டதும் ஜனநாயகம் மனித உரிமைகள் என்பனவற்றைத் தூசாக மதித்து அப்பட்டமான ஒடுக்கு முறைகளைக் கையாளவே செய்யும். இதுவே தான் நமக்கு முன்னேயும் உள்ள ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமைகள் பற்றிய பிரச்சினையாகும்.

இந்த அரசாங்கம் மக்களுக்கு உரத்த குரலில் கொடுத்த மற்றொரு வாக்குறுதி தற்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து விடுவது என்பதாகும். ஆனால் இன்றும் தமது பேச்சளவில் தான் இருந்து வருகிறதே தவிர அதனை இல்லாமல் செய்யும் நோக்கம் படிப்படியாக அரசாங்கத்திடமிருந்து அகன்று வருகின்றது. இதற்கு அடிப்படைக் காரணம் அரசாங்கத்தின் தற்போதைய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்து வதற்கு அத்தகைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை தேவைப்படுவது தான். வெகு விரைவில் கடந்த கால ஆட்சி போல் அதிகாரம் எதேச்சதிகாரமாகப் பயன்படுத்தப்படும் சூழலே உருவாகும். அதற்கு ஒரு முன் உதாரணத்தை கடந்த வருடத் தில் மின்சார சபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின் போது அவதானிக்க முடிந்தது. எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட கால மக்கள் விரோத ஆட்சியின் ஒவ்வொரு செயலையும் விமர்சனம் செய்து எதிர்த்து அதற்குப் பதிலாகப் பதவிக்கு வந்த இன்றைய அரசாங்கம் பழைய அரசாங்கத்தின் பாதையில் சென்று கொண்டிருக்கிற போக்கையே அவதானிக்க முடிகிறது.

www.tamilarangam.net

## ஆட்சி அதிகாரத்தின் வர்க்கத் தன்மை

இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்குவதாகக் கூறி பிரித்தானிய கொலனித்துவவாதிகள் தரகு முதலாளித்துவ சக்திகளாக அணி சேர்ந்து நின்ற ஐக்கிய தேசியக் கட்சியிடமே அதிகாரத்தைக் கையளித்துச் சென்றனர். அதன் பின்பே அரசியல் அரங்கில் தரகு முதலாளித்துவ சக்திகளில் இருந்து வித்தியாசப்பட்ட வகையில் தேசிய முதலாளித்துவ சக்திகள் தோற்றம் பெற்று ஆட்சி அதிகாரத்தையும் பெற்றன. சுதந்திரத்திற்குப் பின்னான இன்று வரையான காலத்தில் தரகு - பெருமுதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சியும் தேசிய முதலாளித்துவ கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமே மாறி மாறி ஆட்சி அதிகாரத்தில் இருந்து வந்துள்ளன. தத்தமது வர்க்க குணாம்சத்திற்கும் தேவைக்கும் ஏற்றவாறு ஆட்சி செய்து வந்த வரலாற்றில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிற்சில சந்தர்ப்பங்களில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் முற்போக்குச் செயற்பாடுகளை முன்னிறுத்தியும் வந்துள்ளது. இடதுசாரிகளைத் தனது கூட்டாளிகளாக்கியும் சோஷலிச நாடுகளுடன் நெருக்கத்தை அதிகரித்தும் தேசிய பொருளாதாரம் என்பதை மையப்படுத்தியும் வந்துள்ளமை கடந்த கால வரலாறாகும். சுயசார்பு, சொந்த வளங்களை விருத்தி செய்தல், கலாசாரத்தைப் பேணல், சுயமொழிக் கல்வியைத் திட்டமிட்ட வகையில் முன்னெடுப்பது போன்றன தேசிய முதலாளித்துவத்தின் குணாம்சங்களாகத் திகழ்ந்தன. இவை குறைந்த பட்சமளவிலாவது வரவேற்கக் கூடியனவாக அமைந்தன.

ஆனால் இன்று பாராளுமன்றத்தில் நான்காவது தடவையாக தேசிய முதலாளித்துவ சக்திகள் என்னும் தோற்றப்பாடுடனேயே பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி அதிகாரத்திற்கு வந்துள்ளது. ஆட்சி அதிகாரத்தைப் பெற்ற இரண்டு ஆண்டுகளின் நடைமுறைகள் தேசிய முதலாளித்துவ குணாம்சத்தின் மீது பலத்த கேள்விகளையே எழுப்பியுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்கள் பெரு முதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த பொருளாதாரக் கொள்கைகளையே முன்னெடுப்பவர்களாகக் காணப்படுகின்றனர். தாராள பொருளதாரக் கொள்கை, தனியார் மயம், அந்நிய மூலதனத்திற்கு அமோக வரவேற்பு,

www.tamilarangam.net

அமெரிக்க அரவணைப்பு போன்ற சகலவற்றிலும் தேசிய முத லாளித்துவ சக்திகளாகச் செயற்படவில்லை. தடம் புரண்டு நிற்கும் தமது நிலைப்பாட்டிற்கு இன்றைய சர்வதேச சூழலை ஒரு சாட்டாகக் கூறுகிறார்கள். சோஷலிச நாடுகளிலும் தாராள பொருளாதாரக் கொள்கையும் தனியார் மயமும் இடம்பெற்று வருவதாகக் காட்ட முனைகிறார்கள். ஆனால் சோஷலிச நாடுகளில் ஆட்சியதிகாரம் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் கரங்களில் இருப்பதையும் அரசியலமைப்பு மக்கள் ஜனநாயகமாக இருப்பதையும் இலகுவில் மறந்து விடுகிறார்கள், அந்நாடுகளில் இடம்பெறும் பொருளாதார சீர்திருத்தங்களும், மறு சீரமைப்புகளும் அந்நாட்டின் ஏகப்பெரும்பான்மையான மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதையே மைய நோக்காகக் கொண்டுள் ளன. ஆனால் நமது நாடு போன்றவற்றில் இடம்பெறும் தாராள மயம், தனியார் மயம் என்பன சொத்துடைய ஆளும் வர்க்கத்தினருக்கும் அவர்களது எசமானர்களான ஏகாதிபத்தியவாதிகளுக்கும் நன்மை பெறும் நோக்கு உடையதாகவே அமைந்து இருக்கின்றன. தொழி லாளி வர்க்கத்திற்கும் உழைக்கும் மக்களுக்கும் மேன்மேலும் துன்பதுயரங்களை வழங்குவதாகவே அவை உள்ளன.

எனவே பொதுசன ஐக்கிய முன்னணியின் பொருளாதார அரசியல் நடைமுறைத்திட்டங்கள் யாவும் தேசிய முதலாளித்துவ குணாம் சத்தைக் கொண்டவையாகக் காணப்படவில்லை. அவை யாவும் பெரு முதலாளித்துவ நிலைப்பாட்டின் பக்கம் நிலை கொள்பவை யாகவே காணப்படுகின்றன. இதன் வெளிப்பாட்டினை அரசாங்கத் தின் உச்ச நிலைக் கொள்கை வகுப்பாளர்களுக்கும் பின்வரிசை உறுப்பினர்களுக்குமிடையில் அடிக்கடி எழும் முரண்பாட்டிலும் விவாதங்களிலும் அடையாளம் காண முடிகிறது. ஆதலால் பொது சன ஐக்கிய முன்னணியின் ஆட்சி அதிகாரமானது தமது தேசிய முதலாளித்துவ நலன்கள் அனைத்தையும் பெரு முதலாளித்துவ அரசு யந்திரத்தினால் கட்டியெழுப்பட்ட பொருளாதார அரசியல் கட்ட மைப்புக்கு பலியிட்டு வரும் போக்கினையே கொண்டிருக்கிறது. அதேவேளை இவ் அரசாங்கத்தினுள் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் சிறு உற்பத்தியாளர்கள், விவசாயிகள் தொழிலாளர்களைப் பிரதி நிதித்துவம் செய்யும் சக்திகளும் ஏகாதிபத்திய பல்தேசிய நிறுவனங் களின் ஊடுருவல்களை எதிர்ப்போரும் தேசிய முதலாளித்துவ

www.tamilarangam.net

குணாம்சத்துடன் இருந்து வருகின்றனர் என்பதும் காணக் கூடியதே யாகும். தொழிலாளி வர்க்க இடதுசாரி சக்திகள் இச் சக்திகளுடன் நேச உறவை வைத்து அவர்களுடனான ஐக்கியத்தை முன்னெடுப்பது தேவையானதாகும்.

www.tamilarangam.net

## நமது கட்சியின் அரசியல் மார்க்கம்

இலங்கையின் தற்போதைய சமூக அமைப்பும் அது உருவாக்கி நிற்கும் அடிப்படை முரண்பாடு, பிரதான முரண்பாடு போன்ற வற்றினால் பொருளாதார அரசியல் சமூக பிரச்சினைகள் பெருகி நிற்கின்றன. தொழிலாளி வர்க்கம் விவசாயிகள் தேசிய இனங்கள் பெண்கள் அறிவு ஜீவிகள் உட்பட ஏகப் பெரும்பான்மையான மக்கள் நாளாந்தம் கடினமான வாழ்க்கை நெருக்கடிகளை எதிர்நோக்கி நிற்கின்றனர். அவர்கள் நாளாந்தம் வியர்வை, கண்ணீர், இரத்தம் சிந்திய நிலையில் வாழ்க்கைப் பிரச்சினைகளான வறுமை நோய் வீடின்மை வேலையின்மை, ஊதியம் போதாமை, வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு, உடை, இருப்பிடம், கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெற முடியாது வறுமைக் கோட்டின் கீழ் சனத்தொகையில் 40% வீத மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நமது நாட்டில் கடந்த பதினான்கு ஆண்டுகளில் இடம்பெற்று வரும் இன யுத்தத்தினால் சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் கொல்லப்பட் டுள்ளனர். ஆனால் அதே காலப்பகுதியில் முழு நாட்டிலும் மொத்தம் எழுபதினாயிரம் பேர் தற்கொலை செய்துள்ளனர் என்ற புள்ளி விபரம் வெளியாகி உள்ளது. இத்தகைய அதிகரித்த தற்கொலை களின் பின்னணி பொருளாதார நெருக்கடிகள் வறுமை நோய், வேலையின்மை மற்றும் கலாச்சாரச் சீரழிவுகள் என்பனவாகவே உள்ளன.

முன்னைய ஆட்சி அமுல்படுத்திய 'ஜனசவிய' வறுமை ஒழிப்புத் திட்டமோ அதற்குப் பதிலாக இன்று நடைமுறைக்கு வந்துள்ள 'சமுர்த்தி' திட்டமோ எவ்வகையிலும் வறுமையை அகற்றக் கூடியவைகள் அல்ல. வறுமை என்பது அடிப்படையான சமூக அமைப்பு கட்டமைப்புடன் இணைந்த ஒன்றே அன்றி அதற்கு அப்பாலான தன்னிச்சைத்தன்மை கொண்ட ஒன்றல்ல. அதனை சமூக மாற்றத்தால் அன்றி 'உதவித் திட்டங்களால்' அகற்ற முடியாது. இன்று இலங்கை மக்கள் அனைவரினதும் பொதுவான வாழ்க்கைத் தரம் எவ்வகையிலும் மேம்படவில்லை. அவர்கள் தமது வருமானத்தில் 70 வீதத்தினை உணவிற்கே செலவு செய்கின்ற போதிலும் அவ் உணவானது மனித வாழ்வுக்குரிய நிறை உணவாக இல்லை என்ற

www.tamilarangam.net

நிலையே காணப்படுகின்றது. மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மேற்குலக தேசங்களுக்கும் வேலை தேடிச் சென்றிருந்த போதிலும் நாட்டில் ஏறத்தாள இருபது லட்சம் பேர் வேலையின்மைக்கு உட்பட்டு உள்ளனர். வருடா வருடம் பாடசாலைகளில் பல்கலைக் கழகங்களில் இருந்து வெளிவரும் இளைஞர், யுவதிகளுக்கும் பட்டதாரிகளுக்கும் உரிய வேலை வழங்கமுடியாத நிலையே காணப்படுகிறது.

கல்வி முற்றுமுழுதான சீர்குலைவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. க.பொ.த.(சா) பரீட்சை பெறுபேறுகள் மாணவர்களின் கல்வி -அறிவுத் தகைமைகளின் கீழ் இறங்கிய தன்மைகளை வெளிகாட்டி நிற்கின்றன. அதேவேளை வருடாவருடம் 70 ஆயிரம் பேர் உயர் கல்விக்கு தகுதி பெற்றுள்ள போதிலும் 11 ஆயிரம் பேர் மட்டுமே பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படும் கதியற்ற நிலை கல்வித் துறையில் காணப்படுகிறது. ஒரு தேசிய பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பதற்கான நோக்குடைய கல்விக் கொள்கை ஒன்று இன்னும் வகுக்கப்பட வில்லை. மேன்மேலும் திறந்த பொருளாதாரத்திற்குச் சாதகமானதும் வசதி பெற்றவர்களுக்குமான கல்விக்கொள்கை யாகவே பின்பற்றப்படுகிறது. இது நாளாந்தம் இலவசக் கல்வியையும் கிராமப்புறக் கல்வியையும் வேரறுத்துக் கொள்ளவே முடியும். அவ்வாறே கலாச்சாரத்துறை அந்நிய ஊடுருவல்களால் சிதைக்கப்பட்டு மேற்கு மயமாகி வருகின்றது. இக் கலாச்சாரச் சீரழிவுகள் இளம் சந்ததியினரைப் பல வழிகளிலும் பாதித்து பாழ்படுத்தி வருகின்றது.

இவ்வாறு மக்கள் எதிர்நோக்கி நிற்கும் எந்த ஒரு பிரச்சினையும் இன்றைய சமூக அமைப்புக்குள் தீர்வுகாணமுடியாத ஒன்றாகியுள்ளது. கொலனித்துவ வாதிகளால் கட்டமைக்கப்பட்டு பின்பு உள்ளூர் ஆளும் வர்க்க சக்திகளால் தொடரப்படுகின்ற பொருளாதார அரசியல் சமூக அடிப்படைகளும் நடைமுறையில் உள்ள நிதி, நீதி, நிர்வாக கல்வி ஒழுங்கமைப்புகளும் நாட்டின் தொழிலாளர் வர்க்கத்திற்கும் ஏனைய ஒடுக்கப்படும் உழைக்கும் மக்களுக்கும் சாகதமானவையாகவோ அன்றி விமோசனம் தருபவையாகவோ இல்லை. அவ்வாறு ஒரு விமோசன மார்க்கம் இருந்திருந்தால் கடந்த அரை நூற்றாண்டு காலத்தின் முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சிமுறையும் அதில் மாறி மாறி ஆட்சி அதிகாரத்தில் இருந்த கட்சிகளும் குறைந்த பட்சமாவது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிருக்க

www.tamilarangam.net

முடிந்திருக்கும். தீர்வு காணப்படுவதற்குப் பதிலாக பிரச்சினைகள் வளர்க்கப்பட்டு, சிக்கலாக்கப்பட்டு, பூதாகரமாகியுள்ள நிலையே இன்று நிலவுகின்றது. பிரித்தாளும் சூழ்ச்சியைப் பின்பற்றி ஆளும் வர்க்க சக்திகள் இலங்கை மக்களை இன, மத, மொழி, சாதி அடிப்படைகளில் பிளவுபடுத்தி குறுகிய உணர்வுகளை அரசியல் இலாபமாக்கி ஆட்சியதிகாரம் செலுத்தி வந்துள்ளனர். ஜனநாயகம், சுதந்திரம் வாக்குரிமை என்பன சகல மக்களுக்கும் உரியவை போன்றே காட்டப்படுகின்றது. அவற்றினால் எல்லா மக்களும் சமத்துவ உரிமையுடையவர்கள் என்றும் அரசியல் சட்டவரைபுகளில் கூறப்பட்டுள்ளன. ஆனால் இவை யாவும் சொத்துடைய ஆளும் வர்க்கத்தினருக்கே வாய்ப்பும் வசதியும் வழங்கியுள்ள சூழலே நடைமுறையில் உள்ளது. ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கு எவ்வித முன்னேற்றத்தையோ அன்றி வாழ்வுக்கான சிறந்த வாய்ப்புக்களையோ வழங்கவில்லை. தொடர்ந்தும் ஏற்றத் தாழ்வு மிக்க சமூக அமைப்பே நீடித்துச் செல்கிறது.

இந்நிலையில் மனிதனை மனிதன் சுரண்டி ஒடுக்கி ஏகப் பெரும்பான் மையான மக்களின் ஜனநாயகம், சுதந்திரம் என்பனவற்றை மறுத்து சொத்துடைய உயர் வர்க்கத்தின் சுகபோக வாழ்வுக்கும் ஆட்சி யதிகாரத்திற்கும் உத்தரவாதம் வழங்கி நிற்கும் இன்றைய சமூக அமைப்பு தகர்க்கப்பட்டு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் குறிக்கோளாகும். தொழிலாளி வர்க்கமும் உழை க்கும் வெகுஜனங்களும் அணிதிரட்டப்பட்டு அதனூடே முன் னெடுக்கப்படும் வெகுஜன புரட்சிகரப் போராட்ட மார்க்கத்தினா லேயே அச்சமூக மாற்றம் என்பது சாத்தியமாகும். தொழிலாளி வர்க்க கட்சியின் தலைமையின் கீழ் சகல ஒடுக்கப்படும் மக்கள் பிரிவினரும் தத்தமது கோரிக்கைகளை உள்ளடக்கிய பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஐக்கியப்பட்டு பல முனைப் புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். முதலாளித் துவப் பாராளுமன்ற ஆட்சி முறையினால் ஒடுக்கப்படும் வர்க்கங் களும் மக்களும் தேசிய இனங்களும் எவ்வித விடுதலை விமோசனத் தையும் பெற முடியாது என்பதை எமது கட்சி மிகத் தெளிவுடன் கண்டு கொள்கிறது. அதனாலேயே முற்று முழுதாகப் பாராளுமன்றப் பாதையில் மூழ்கிக் கொள்வதை நமது கட்சி நிராகரிக்கின்றது. அதேவேளை பாராளுமன்றத்தை முற்று முழுதாக நிராகரிக்கும்

www.tamilarangam.net

அதிதீவிர ஒரு முனைவாதப் போக்கையும் கட்சி ஏற்றுக் கொள்ள வில்லை. பாராளுமன்றத்தையும் ஏனைய உள்ளூராட்சி மன்றங் களையும் மிகுந்த நிதானத்துடனும் வரையறையுடனும் பயன் படுத்துவதை கட்சி ஏற்றுக் கொள்கின்றது. பாராளுமன்ற வகைப் பட்ட போராட்டங்கள் உட்பட அதற்கும் அப்பாலான தொழிற்சங்க, விவசாய இயக்க அணிகள் திரட்டப்பட்டு வர்க்கப் போர்க்குணத் துடன் போராட்டங்கள் முன்செல்லவேண்டும். இளைஞர் -யுவதிகள், பெண்கள், தேசிய இனங்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோருக் கான கோரிக்கைகளின் அடிப்படையில் இச்சமூக அமைப்பிற்கு எதிரான போராட்டக் களத்தில் அவர்கள் அணிதிரட்டப்படுவதன் அவசியம் இன்று உருவாகி நிற்கின்றது. அத்தகைய பல்வேறு சக்திகளின் புரட்சிகர வெகுஜன போராட்டங்கள் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்படும் போது அவை அனைத்தும் ஓர் உயர்ந்த கட்டப் போராட்ட வடிவத்தைப் பெறும். அப்போராட்டம் இன்றைய சமூக அமைப்பைத் தகர்த்து எறிந்து விட்டு அவ் இடத்திலே புதியதோர் சமூக அமைப்பைத் தோற்று விக்கும். அது சோஷலிச சமூக அமைப்பாகவே அமையும். சோசலிச சமூக அமைப்பின் கீழ் மனிதனை மனிதன் சுரண்டுவதற்கோ ஓர் இனம் மற்றோர் இனத்தை ஒடுக்குவதற்கோ இடம் இருக்க மாட்டாது. மனிதர்களிடையே நிலவிவந்த ஏற்றத்தாழ்வும் சமூக அநீதிகளும் அகற்றப்படும். தனி மனித சுதந்திரம் தனி மனிதப் போட்டி, ஒரு சிலருக்கான ஜனநாயகம் போன்ற ஏமாற்றுத்தனமான கேடுகெட்ட முதலாளித்துவ முறைமைகளுக்குப் பதிலாக சமூக ரீதியான உற்பத்தி யும் விநியோகமும் உள்ளடங்கிய திட்டமிட்ட சோசலிச பொருளா தாரம் நடைமுறைப் படுத்தப்படும். நாட்டின் செல்வ வளங்கள் தனி நபர்களின் கைகளில் குவிந்து இருப்பதற்கு இடமில்லாத வகையில் முழு நாட்டினதும் மக்களினதும் அபிவிருத்திக்கும் அடிப்படைத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும். 'சக்திக்கு ஏற்ப உழைப்பும் உழைப்புக்கு ஏற்ற ஊதியமும்' என்ற சோசலிசக் கோட்பாட்டின் அடிப்படையில் உற்பத்தி அதிகரிப்பும் ஊதிய நிர்ணயமும் நிலை நாட்டப்படும்.

அரசியலில் மக்கள் ஜனநாயகம் பாதுகாக்கப்படும். ஒரு சில சுரண்டு வோரின் கவசமாக முதலாளித்துவத்தால் பயன்படுத்தப்பட்டு வரும் ஜனநாயகம் சோசலிசத்தின் கீழ் மக்கள் ஜனநாயகமாக பரவலாக்கி

www.tamilarangam.net

முன்னெடுக்கப்படும். ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கு ஜனநாயகம் பூரணமாக அமைவதால் அது சோசலிச ஜனநாயகமாக மலர்ச்சி பெறும். அதேவேளை சோசலிச பொருளாதார அரசியல் சமூக கலாசாரக் கட்டமைப்புக்கு ஏற்றவாறான கல்வி முறை ஒன்று உருவாக்கம் பெறும். நவீன விஞ்ஞான தொழில்நுட்ப அறிவிற்கும் மனிதனை மனிதன் நேசிக்கும் அதி உயர் மனித விழுமியங்களைத் தோற்றவித்து வளர்க்கக்கூடியதுமான சோசலிச கல்வி முறையானது நடைமுறைக்குக் கொண்டு வரப்படும். நமது நாட்டின் தேசிய இனங்களின் தனித்துவங்களைப் பேணக்கூடிய புதிய கலாசாரம் கட்டமைக்கப்படும். அதேவேளை அந்நிய கலாசார நச்சுத்தனங்கள் தடுக்கப்படும்.

உலக அளவில் சோசலிச அமைப்புக்கள் சில நாடுகளிலே வீழ்ச்சி கண்டுள்ளன. சில நாடுகளிலே புதிய வளர்ச்சிப் போக்குகளுக்கு ஏற்ப மறுசீரமைப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. சோசலிச அமைப்பிலே முன்னெடுக்கப்பட்ட சில துறைகள் வெற்றி பெற வில்லை எனக்கூறி கேள்விகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. மேற்கூறியதன் மூலம் உலக அளவில் சோசலிசமும் அதனை முன் மொழிந்த மார்க்சிசமும் செயலிழந்து செத்துவிட்டது என்ற பிரசாரம் முதலாளித்துவ ஏகாதிபத்திய உலகில் இருந்து கிளப்பி விடப்பட் டுள்ளது. சோசலிசத்திற்கும் மார்க்சிசத்திற்கும் தற்காலிக தோல்வி களும் பின்டைவுகளும் உலக ரீதியாக ஏற்பட்டுள்ளமையை நாம் மறுக்கவில்லை. ஆனால் அவை இறந்துவிட்டன என்பதையோ அன்றி வரலாற்றின் அதன் தேவையும் அவசியமும் அற்றுப் போய் விட்டது என்ற முடிவையோ எமது கட்சி கடுகளவும் ஏற்றுக் கொள்ள வில்லை. அத்துடன் பின் நவீனத்துவ வாதங்கள் எனக் கூறிக் கொண்டு அடிப்படையில் மார்க்சியத்தையும் அதன் அமைப்பு ரீதியான பிரயோகத்தையும் வெவ்வேறு வழிகளிலும் வடிவங் களிலும் விமர்சனம் செய்து நிராகரித்து வரும் போக்குகளை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். அவற்றுக்கு எதிராகத் தொடர்ந்தும் போராடுவோம். 19 ம் நூற்றாண்டின் நடுக்கூறிலே மார்க்சிசம் தோற்றம் பெற்ற போது எத்தகைய ஜீவத் துடிப்புடன் திகழ்ந்ததோ அவ்வாறே இருபதாம் நூற்றாண்டின் போதும் அது மிகுந்த ஜீவத் துடிப்புடனும் வளர்ச்சி கண்டு பிரயோகம் பெற்றது. அதன் பிர யோகத்தில் இழைக்கப்பட்ட தவறுகளால் இருபதாம் நூற்றாண்டின்

www.tamilarangam.net

இறுதிக் கூறுகளிலே சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் தோல்விகளைத் தழுவி இருந்த போதிலும் அவை தற்காலிகமானவையாகவே இருக்க முடியும். எனவே இருபத் தோராம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் மார்க்சிசமும் சோசலிசமும் கடந்த கால அனுபவங்களில் இருந்து தகுந்த படிப்பினைகள் பெற்று தம்மை மீளமைத்து வரலாற்று நியதிக்கு ஏற்ப முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளுக்கு நேர் எதிரே தன்னை நிறுத்திச் செல்லும் என்பதில் எமது கட்சி உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது.

அந்த வகையில் மாமேதைகளான மார்க்சும் ஏங்கல்சும் முன் மொழிந்து சென்ற விஞ்ஞான சோசலிசமும் அதனை நடைமுறைக் குக் கொண்டுவருவதில் மகத்தான லெனின் பின்பற்றிய நடைமுறை களும் நமது காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் முற்றிலும் உரியன வாகும். சோவியத் யூனியனில் தோழர் ஸ்டாலின் தலைமையில் கட்டியெழுப்பப்பட்ட சோசலிச அமைப்புமுறையில் இடம்பெற்ற சாதகமான அம்சங்களும், சீனாவில் தோழர் மாஓசேதுங்கால் வழிநடத்தப்பட்ட புதிய ஜனநாயக புரட்சி சோசலிச அமைப்பின் சிறப்பு அம்சங்களும் ஏனைய சோசலிச நாடுகளின் முன் அனுபவங் களும் நமக்கு ஒளிமிக்க ஆதர்சங்களாகும். அவற்றில் இருந்து பெறக்கூடியவற்றைப் பெற்று மார்ச்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை அடிப்படையில் நமது நாட்டின் யதார்த்த சூழலுக்கு முற்றிலும் பொருந்தக்கூடிய ஒரு சோசலிச அமைப்பை வென்றெடு த்து நிலைநிறுத்திப் பாதுகாத்து கம்யூனிசத்தை நிலைநிறுத்துவதே எமது கட்சியின் இறுதி இலட்சியமும் குறிக்கோளுமாகும். இதனை எமது கட்சியின் மூன்றாவது காங்கிரஸ் மிகுந்த திடசங்கற்பத்துடன் மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்கின்றது.

சோசலிசம் கம்யூனிசம் எமது இறுதிக் குறிக்கோள் என்பதில் உறுதியாக இருக்கும் அதேவேளை அதனை உடனடியாக அடைந்து விட முடியாது என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். ஏனெனில் நமது கட்சி முன்னிறுத்தும் சோசலிச கட்டமைப்பு என்பது இன்றைய சமூக அமைப்பை வைத்துக் கொண்டு அதற்குள் இடைச் செருகலாக்கிக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல, அல்லது பாராளுமன்ற வழிமுறைகளின் மூலம் தனியே ஆட்சி அதிகாரத்திற்கு வந்தாலுங் கூட அதனைத் தோற்றுவிக்கமுடியாது. அதனை ஆளும் வர்க்கமும் அரசு யந்திரமும் அனுமதிக்க மாட்டார்கள். எனவே சோசலிசத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தையும் கம்யூனிசத்தையும் சென்றடையும் நீண்ட பாதையில் பல கட்டங்களைப் படிப்படியாகத் தாண்டிச் செல்லல் வேண்டும். தொழிலாளர் வர்க்கமும் ஏனைய ஒடுக்கப்படும் உழைக்கும் மக்கள் பிரிவினரும் ஆரம்ப இயக்கங்களைத் தோற்றுவித்து சொந்தப் போராட்டங்களின் நடைமுறை அனுபவங்கள் மூலம் அர்ப்பணிப்பு உறுதி, தன்னம்பிக்கை, விடாமுயற்சி என்பவற்றினூடே அணி திரட்டப்படல் வேண்டும்.

உடனடியான வேலைத்திட்டத்தின் முக்கிய அம்சமாக தேசிய இனப் பிரச்சினையும், தேசிய ஜனநாயகமும், ஏகாதிபத்திய எதிர்ப்பும் முக்கியத்துவம் பெறுவதுடன் பல்தேசிய நிறுவனங்களின் ஊடுருவல்களையும் தனியார்மயத்தையும் எதிர்த்து நிற்பதும் பிரதானமானதாகும். அத்துடன் தேசிய பொருளாதாரம் சுயசார்பு என்பனவற்றை முன்நிறுத்தி கல்வியைப் பயனுடையதாய் மாற்றி அமைத்தலுமாகும். இவற்றின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கமும் விவசாயிகளும், தேசிய இனங்களும், பெண்கள், அறிவு ஜீவிகள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரும் இவ் உடனடிப் பொது வேலைத்திட்டத்தின் கீழ் அணிதிரட்டப்படல் வேண்டும்.

இத்தகைய அணிதிரட்டலின் வேகத்தினால் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் சரியான தொழிலாளர் வர்க்கத் தலைமைத்துவத்தால் புதிய- ஜனநாயகப் புரட்சிகர கட்டத்தை நோக்கி முன்னேறச் செய்தல் வேண்டும். பரந்ததும் விட்டுக் கொடுக்காததுமான புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களின் வளர்ச்சியானது புதிய -ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்து தொழிலாளர் விவசாயிகள் தலைமையிலான ஓர் அரசாங்கத்தைத் தோற்றுவிக்கும். அதிலிருந்து படிப்படியான வளர்ச்சிப் பாதையில் சோசலிசத்தை நோக்கிய நீண்டகால வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

இவ்வாறு நமது அரசியல் மார்க்கத்தை வரயைறை செய்யும் போது மூன்று முக்கிய அம்சங்கள் பற்றி கவனத்திற் கொள்வது அவசியமாகிறது.

1. மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனை என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட அனுபவங்களை வெறும் சூத்திர வாய்பாட்டு வடிவில் வைத்துக் கொண்டு அதி தீவிர எதிர்ப்பு அரசியல் முழக்கங்களை மட்டும் முன் வைத்து வருவது.

www.tamilarangam.net

2. எவ்வித கோட்பாட்டு கொள்கை நிலைப்பாடுகளும் இன்றி தற்போதைய முதலாளித்துவப் பாராளுமன்றப் பாதை யிலான நடப்பு அரசியல் சந்தர்ப்பவாத சகதியுள் இடதுசாரி கள் என்னும் பெயரில் முற்று முழுதாக மூழ்கிக் கொள்வது.

3. மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனையின் வழிகாட் டலின் கீழ் சமகால தேசிய சர்வதேசிய சூழலில் எழுந்துள்ள புதிய நிலைமைகளையும், வளர்ச்சிப் போக்குகளையும் படித்துப் பரிசீலித்து உள்வாங்கிக் கொண்டு புதிய இரத்தம் பாச்சப்பட்ட கட்சியமைப்பை கட்டியெழுப்புதல், அத்த கைய கட்சித் தலைமைத்துவத்தின் வழிகாட்டலில் புரட்சிகர வெகுசன அரசியல் போராட்ட மார்க்கம் ஒன்றினை உறுதி யுடன் முன்னெடுப்பது.

இலங்கையின் பொதுவுடமை இயக்க வரலாற்றில் எமது கட்சியின் வரலாற்று அனுபவத்தில் மேற்கூறிய மூன்று அம்சங்களில் முதல் இரண்டினையும் நமது கட்சி திடமாக நிராகரிக்கின்றது. மூன்றா வதாகக் கூறப்பட்டதனை நாம் உறுதியாக வற்புறுத்தி அம்மார்க் கத்தில் செல்லும் வழிவகைகளை விரிவுபடுத்தி விரைவாக்குதல் வேண்டும். அதற்குரிய செழுமையான முன் அனுபவமும் நடைமுறைகளும் எமது கட்சியிடம் உண்டு. அவற்றின் கடந்த காலப் படிப்பினைகளின் ஒளியில் முன்னோக்கிச் செல்ல முடியும் என இக்கட்சிக் காங்கிரஸ் திடமாக நம்புகின்றது.

இன்று மாக்சிசம் சோஷலிசம் என்பனவும் அவற்றை முன்னெடுப் பதற்கான பாட்டாளிவர்க்க கட்சிகளும் இயக்கங்களும் உலக அளவில் பன்முக நெருக்கடிகளை எதிர்நோக்கி நிற்கின்றன. தத்து வார்த்த கருத்தியல் நிலையிலும் அமைப்பு ரீதியிலான செயல் முறைகளிலும் ஒவ்வொரு மாக்சிச லெனினிசக் கட்சியும் என்று மில்லாத வகையில் புதிய புதிய சவால்களையும் பிரச்சினைகளையும் கஷ்டங்களையும் எதிர்கொண்டு நிற்கின்றன.

உலக ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்திகள் தமது நீண்ட மூல உபாயத்திற்கு ஏற்றவாறு மாக்சிசம், சோஷலிசம், கம்யூனிஸ்ட் கட்சிகள் என்பனவற்றை நிர்மூலம் செய்யும் செயல் முறைகளை நன்கு திட்டமிட்ட வகையில் முன்னெடுத்து வருகின்றனர் என்பது கவனத்திற்குரியதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவற்றின் குறிப்பான ஓர் அம்சமாகவே கடந்த இரண்டு தசாப்த கால கட்டத்தினுள் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்னும் புதிய வகை நிறுவன அமைப்புகள் பரவுமாறு செய்யப்பட்டுள்ளன. இன்று மூன்றாம் உலக நாடுகள் அனைத்திலும் இந் நிறுவனங்களின் செல்வாக்கும் செயற்பாடுகளும் உச்ச நிலையில் காணப்படுகின்றன. நமது சிறிய நாட்டில் இத்தகைய அரச சார்பற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை மூவாயிரத்து ஐந்நூறுக்கு மேல் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களிடம் முதன்மை வாய்ந்ததாகக் காணப்படுவது போதியளவு நிதி வளமாகும். இந்நிதி வளம் கொண்டு அந்நிறுவனங்கள் செயற்படும் நடைமுறைகள் கூர்ந்து நோக்கத் தக்கவையாகும். இவ்வாறு தாராள நிதிவழங்குதலும் அவற்றை இயக்குவிக்கும் மூலத்தானமும் மேற்குலகாகவே உள்ளன. அவர் களது விருப்பு வெறுப்புக்கும் தேவைக்கும் ஏற்றவாறே சகல அரச சார்பற்ற நிறுவனங்களும் செயல்படுகின்றன. அந்நிறுவனங்களில் வேலை புரிபவர்களில் சிலர் சமூக அக்கறை கொண்டவர்களாகவும் முற்போக்கானவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால் அவர்களது விருப்பங்கள் எல்லைப்படுத்தப்பட்டனவாகவும் இறுதியான முடிவு கள் மேற்குலக நிதிவழங்கும் சக்திகளின் நலன்கள் சார்ந்தவையாக வுமே காணப்படுகின்றன.

இவ் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு வழிகளில் சமூகப்பிரச்சினைகளை தனித்தனிக் கூறுகளாகக் கையில் எடுத்து வேலை செய்பவை போலவே தோற்றமளிக்கின்றன. அடிப்படையானதும் ஒட்டு மொத்தமானதுமான சமூகவிடுதலை மனித விடுதலை என்பதனை எந்தளவிற்கு திசை திருப்பி சீர்குலைக்க முடியுமோ? அந்தளவிற்கு அவை செயல்படுகின்றன. இந்நிறுவனங் கள் சுதந்திரமானவை போலவும், அரசியல் சார்பற்றன என்பதாகவும் தம்மைக் காட்டிக் கொள்கின்றன. சில நிறுவனங்கள் நவீன கருத்தியல் கோட்பாடுகளின் மையங்களாகவும் காணப்படுகின்றன. மேற்குலக முதலாளித்துவ சக்திகள் விரித்துள்ள இந்த மாய வலையுள் மெத்தப் படித்த புத்திஜீவிகள் தொட்டு ஆய்வு, அறிவுத்தளம், தேடல், அறிக்கை செய்தல் போன்றனவற்றில் ஈடுபடுவோர் வரை வீழ்ந்து வருகின்றனர்.

எவ்வளவுதான் நியாயப்படுத்த முற்பட்டாலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நோக்கும் போக்கும் மார்க்கிசத்தையும் பாட்டாளி

www.tamilarangam.net

**வர்க்க இயக்கங்களையும் நாசப்படுத்தும் நச்சுத்தன்மை வாய்ந்தன வாகவே காணமுடியும். இவ் அபாயத்தை நமது கட்சி அடையாளம் காணும் அதேவேளை அதற்கெதிரான நமது நிலையை வலுப்படுத்தி தீவிர செயற்பாட்டில் வேலை செய்வது அவசியம் எனக் கொள்கின்றது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இடதுசாரி ஜனநாயக சக்திகளின் ஐக்கியம்

நமது நாடு எதிர்நோக்கி நிற்கும் அடிப்படை முரண்பாட்டின் தீர்வுக்கு நீண்டகால அடிப்படையில் சோசலிசம் வென்றெடுக்கப்படுவதே உரிய மார்க்கமாகும். ஆனால் தற்போது பிரதான முரண்பாடாக முன்னெழுந்து நிற்கும் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கும், தேசிய ஜனநாயகம் வென்றெடுக்கப்படுவதற்கும், ஏகாதிபத்திய பல்தேசிய நிறுவனங்களின் ஊடுருவல் - தனியார்மயம் என்பன வற்றை எதிர்ப்பதற்கும் உடனடி வேலைத் திட்டம் தேவை என நமது கட்சி வற்புறுத்துகின்றது. இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு சரியான தலைமைத்துவம் அவசியமானதாகும். அது இன்றைய தேசிய சர்வதேசச் சூழலில் தனி ஒரு கட்சியினால் முன்னெடுக்கப் படமுடியாத ஒன்றாகும். அதனை முன்னெடுக்க தொழிலாளி வர்க்கத்தையும், விவசாயிகளையும் ஏனைய ஒடுக்கப் படும் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள், இயக்கங்கள், குழுக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஓர் இடதுசாரி ஐக்கிய முன்னணியும் அதன் உறுதியான தலைமைத்துவமும் அவசிய மாகின்றது.

இலங்கையில் உள்ள இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் மார்க்சி யத்தை தமது அடிப்படைக் கோட்பாடாக ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் மார்க்சியத்தின் வளர்ச்சி நிலைகள் எனக் கொள்ளப்படும் லெனின், ஸ்டாலின் கொள்கைகள், ட்ரொட்சிசம், மாஓசேதுங் சிந்தனை மற்றும் நவீன மார்க்சிய கருத்துக்கள் போன்றவற்றை ஏற்றுக்கொள்வதிலும் நிராகரிப்பதிலும் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொருவித நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. அது மட்டுமன்றி அவற்றைக் கொண்டே ஒருவரை ஒருவர் விமர்சனம் செய்து தத்து வார்த்த தர்க்கங்கள் புரிவதில் முன்னணியிலும் இருந்து வந்துள் ளனர். இத்தகைய தர்க்கங்களும் விவாதங்களும் இடதுசாரி இயக் கத்தை பலமுனைகளிலும் பலவீனப்படுத்தியதைத்தான் இதுவரை காணமுடிந்தது. இறுதிவரை நாம் கூறியதுதான் சரியென ஒருமுனை வாத நிலையில் நின்று கொண்டதன் எதிர்விளைவு எத்தகைய சீரழிவுகளையும் பலவீனத்தையும் இடதுசாரி இயக்கத்தில் ஏற்படுத் தியது என்பது வரலாறாகி உள்ளது. நாடு, மக்கள், தொழிலாளி

www.tamilarangam.net

வர்க்கம், எதிர்காலம் என்பனவற்றை மையப்படுத்தி முன்செல்வ தற்குப் பதிலாக குழுவாதம், சுயநலம், பதவி, வர்க்கச் சீரழிவுத் துரோகம், குறுகிய கட்சிநலன் போன்றன மேலோங்கியதால் இடது சாரி ஐக்கியம் என்பது தோற்றம் பெற்று வளர்வதற்கு பெரும் தடைகளாக இருந்தன. இதனால் தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இடதுசாரி சக்திகள்மீது நம்பிக்கையீனமும் வெறுப்பும் விரக்தியும் கொண்டு ஆளும் வர்க்க கட்சிகளின் பின்னால் செல்ல நிர்ப்பந்தித்த சூழல்களும் தோன்றின.

இப்பாதகம் மிகுந்த கடந்தகாலத் தவறுகள் ஒவ்வொரு இடதுசாரிக் கட்சியினாலும் தகுந்தவாறு சுய விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். மேற்கூறிய நடைமுறைகளில் மாற்றங்கள் கொண்டு வரப்படல் வேண்டும். புதிய இடதுசாரிக் கட்சிகளாகத் தோற்றம் பெறும் கட்சிகளும் குழுக்களும் பழைய தடத்தில் தம்மை அறி யாமலே நடந்துகொள்வதில் இருந்து தம்மை விடுவித்துப் புதிய இடதுசாரி ஐக்கியத்திற்கான சூழல்களைத் தோற்றுவிக்க முன்வர வேண்டும். தத்தமது தத்துவார்த்த நிலைப்பாடுகளை முதன்மை நிலைப்படுத்தி அவற்றிலிருந்து ஆரம்பிக்காது நாட்டு நலன், தொழி லாளி வர்க்க நலன், விவசாயிகளினதும், உழைக்கும் மக்களினதும், தேசிய இனங்களினதும் அடிப்படை நலன்களில் இருந்து திறந்த மனத்துடனான கலந்துரையாடல்களை இடதுசாரி சக்திகள் முன் னெடுக்க வேண்டும். அதன்மூலம் வேலைத்திட்டம் ஒன்றிற்கான முன் முயற்சிகளில் ஈடுபடமுடியும். இதற்கும் பாராளுமன்றத்தில் பதவிகளுடன் திருப்திகண்டு நிற்கும் பாரம்பரிய இடதுசாரிகளிடம் எதிர்பார்ப்பதற்கு அதிகம் எதுவுமில்லை. ஆனால் அந்தக் கட்சி களில் உள்ள நல்ல சக்திகளை அரவணைப்பதை நாம் நிராகரிக் கவில்லை. அதேபோன்று நாடு பூராவும் தனிநபர்களாகவும், சமூக சேவையாளர்களாகவும் நேர்மையான இடதுசாரிகள் பெரும் தொகையானோர் இருந்து வருகின்றனர். பல்வேறு காரணங்களி னால் சிதறிப்பரவலாக இருந்து வரும் அத்தகையோரை இடதுசாரி ஐக்கியத்தின் அடிப்படையின் வெவ்வேறு தளங்களில் ஐக்கியப் படுத்துவது அவசியமாகிறது.

பாராளுமன்றத்திற்கு வெளியே உள்ள சகல இடதுசாரிக் கட்சிகளும் இயக்கங்களும் குழுக்களும் பெரியவை சிறியவை என்ற வேறு பாடின்றி பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஐக்கியப்படுவதற்கான

www.tamilarangam.net

அடிப்படைகளை நோக்கி விரைவாக செயற்பட வேண்டும். அத்த கைய ஓர் இடதுசாரி ஐக்கியத்தின் மூலமே ஏனைய ஜனநாயக சக்திகளையும் அவ் ஐக்கிய முன்னணியுடன் இணையச் செய்ய முடியும். இவ்வாறு படிப்படியாகவும், நடைமுறை இயக்கங்கள் அனுபவங்கள் மூலமாகவும் தொழிலாளி வர்க்க இடதுசாரி இயக்கத் தலைமைத்துவம் கட்டியெழுப்பப்படுவதை எமது கட்சிக் காங்கிரஸ் ஒரு முக்கிய பணியாக முன்நிறுத்துகிறது. இது ஒன்றுதான் இன்று நாட்டில் பூதாகரமாகிநிற்கும் பிரச்சினைகளுக்கு மாற்றுத் தீர்வை தோற்றுவிக்க சரியான அரசியல் சக்தியாகவும் மார்க்கமாகவும் அமைய முடியும் என நமது கட்சி நம்புகிறது.

www.tamilarangam.net

## தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி

தேசிய இனப்பிரச்சினையின் உக்கிரத் தன்மை தான் நாட்டின் தேசிய முரண்பாடு பிரதான முரண்பாடாக வளரக் காரணமாகியது. இதன் அடிப்படை பேரினவாத இராணுவ ஒடுக்குமுறையாகும். அதன் காரணமாகவே தேசிய இனவிடுதலைப் போராட்டம் விட்டுக் கொடுக்காத ஆயுதப் போராட்டமாக வளர்ச்சிகண்டு நிற்கிறது. இன ஒடுக்குமுறையின் குறிப்பிட்ட கட்டத்திலே உயர் வர்க்க மிதவாதப் பாராளுமன்றத் தமிழர் தலைமையான தமிழர் கூட்டணியினால் தமிழீழ பிரிவினைக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. பாராளுமன்ற வெற்றிகளைக் குறியாகக் கொண்டு முன் வைக்கப்பட்ட அக்கோரிக் கையை பின்பு ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர் அமைப்புகள் தமதாக்கி முன்னெடுத்தன. இவ்விளைஞர் அமைப்புகள் ஆயுதங் களை முதன்மைப்படுத்திய அளவுக்கு நீண்ட காலத்தில் வென்றெடு க்க வேண்டிய உரிமைகள் உள்ளடங்கிய நிதானமான கொள்கைகள் எதனையும் சரியான கோட்பாட்டு நடைமுறை அடிப்படையில் முன்வைக்கவில்லை. அதனால் தமது ஆயுதம் தாங்கிய போராட்டப் பாதையில் பாரிய தவறுகளை இழைத்து இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை விட இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நலன்களுக்கு உதவும் கைக்கருவிகளாகினர். இந்திய ஆளும் வர்க்க சக்திகளின் பயன்படுத்தல் தந்திரோபாயங்களைப் புரிந்து கொள்ளத் தவறிய மையால் அவ்வியக்கங்கள் நம்பி ஏமாந்து தம்மையே பலியாக்கிக் கொண்டன. அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அதிலிருந்து ஒரு கட்டத்தில் தன்னை விடுவித்துக் கொண்டது. அத்துடன் தனி ஒரே ஒரு இயக்கமாகத் தான் வளர்வதற்கு ஏனைய தமிழர் இயக்கங்களை ஒவ்வொன்றாகத் தாக்கி ஓரங்கட்டிக் கொண் டது. அதன் எதிர் விளைவாக ஏனைய இயக்கங்கள் மேன்மேலும் இந்தியாவின் பக்கம் சாயவும், அதற்கு மேலால் இலங்கையின் ஆளும் வர்க்க சக்திகளின் பக்கம் தள்ளப்படவும் நிர்ப்பந்திக்கப் பட்டன. இது பேரினவாத ஆளும் சக்திகளுக்கு வாய்ப்பானதாகி சுயநிர்ணய உரிமைக்கான நியாயமான போராட்டத்தை விரிந்து பரந்த வகையில் முன்னெடுப்பதற்குப் பதிலாக பலவீனத்திற்கு உள்ளாக்கிச் சுருங்கச் செய்தது. இன்றும் இந்நிலையே நீடித்து நிற்கிறது.

www.tamilarangam.net

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான அபிலாசைகளின் அடிப்படை அம்சங்கள் பலவற்றைத் தம்மகத்தே கொண்டிருக்கிறார்கள் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதேயாகும். அதன் அடிப்படையில் விட்டுக்கொடுக் காத இராணுவ முனைப்பையும் வல்லமையையும் கொண்டு பலம் மிக்க கெரில்லா இயக்கமாகவும் தம்மைக் கட்டியெழுப்பி நிற்கிறார் கள். புலிகள் இயக்கம் அழித்து ஒழிக்கப்பட வேண்டிய ஒரு பயங்கர வாத இயக்கம் என்ற நிலைப்பாடு எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல. ஏனெனில் அந்த இயக்கம் பேரினவாத இராணுவ ஒடுக்கு முறையினதும் அதன் கொடூரத்தினதும் தவிர்க்கவியலாத எதிர்ப்போராட்ட வடிவமாகும். அதேவேளை அந்த இயக்கம் தனது போராட்ட மார்க்கத்தில் பாரிய தவறுகளை இழைத்திருக்கிறது என்பது மூடி மறைப்பதற்குரியவை அல்ல. அத்தவறுகளின் திருத்தப் படாத தொடர்சியானது அவ்வியக்கத்திற்கு பாதகமான சூழல்களை யும் பலவீனங்களையும் தோற்றுவித்துள்ளன.

இவ்விடத்திலே சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமும் தேசிய விடுதலைக்கான போராட்டங்களும் எவ்வாறு நிதானித்து முன் னெடுக்கப்பட்டன என்பதும் அவற்றின் வெற்றிகள் எத்தகைய திசை மார்க்கத்தில் முன்னேறிச் சென்றன என்பதற்கும் அண்மைக் காலப் போராட்டங்களின் சர்வதேச அரங்கில் காணமுடியும். தேசியவாத அடிப்படையும் மக்கள் சார்பற்ற அரசியல் தந்திரோபாயங்களும் இராணுவ முனைப்பு மட்டும் கொண்ட நிலைப்பாடுகளுக்கு மாறாக மாக்சிச நோக்கிலான வர்க்க அடிப்படையும் மக்கள் நலன் சார்ந்த அரசியல் தந்திரோபாயங்களும் இவற்றின் வழிகாட்டல்களுக்கு உட்பட்ட இராணுவ செயற்பாடுகளுமே நிக்கரகுவா, எரித்திரியா, குர்திஷ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களில் காண முடிகின்ற மிகச் சாதகமான அம்சங்களாக அடையாளம் பெற்றுள்ளன. இவை சுயநிர்ணய உரிமைக்கும் தேசிய இன விடு தலைக்கும் போராடக்கூடிய எந்தவொரு இயக்கமும் அதிக கவனத் திற்கு எடுக்கப்பட வேண்டியவை ஆகும். அவை அப்படியே பிரதி பண்ண வேண்டியவை அல்ல என்ற போதிலும் அவற்றின் அடிப் படை நிலைப்பாடுகள் படிப்பினை பெற உதவக் கூடியவையாகும்.

1978ம் ஆண்டின் நடுக்கூறிலே எமது கட்சி மறு உருவாக்கம் பெற்றது. முதல் தேசிய இனப்பிரச்சினையின் தோற்றம் வளர்ச்சி

www.tamilarangam.net

அதற்கான தீர்வு என்பன பற்றி ஆழ்ந்த கண்ணோட்டம் செலுத்தத் தொடங்கியது. 1984 ம், 1991 ம் ஆண்டுகளின் முதலாம் இரண்டாம் கட்சிக் காங்கிரசுகளில் மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனை நோக்குகளின் ஊடே தேசிய இனப்பிரச்சினையை ஆய்வுக்கு உட்படுத்திக் கொண்டது. அதன் மூலம் சுயநிர்ணய உரிமையின் தற்காலப் பிரயோகம் பற்றியும் நமது நாட்டின் விஷேச சூழலுக்கு ஏற்ப அதனைப் பிரிவினை அற்ற வழிகளில் வென்றெடுப்பதற்கான போராட்ட மார்க்கம் பற்றியும் தெளிவு படுத்திக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழீழக் கோரிக்கை 1976 ல் வட்டுக்கோட்டைத் தீர்மானமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் முன் வைக்கப்பட்ட காலத்திலிருந்தே எமது கட்சி அதனைத் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு உரிய கொள்கை அல்ல என்பதை விரிவாக விளக்கி அதன் எதிர் விளைவுகளைச் சுட்டிக் காட்டி வந்துள்ளது. பிரிவினையை வற்புறுத்தி நிற்கும் தமிழீழக் கோரிக்கை அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுக்கும், உள்ளூர் ஆளும் உயர் வர்க்க அதிகார சக்திகளுக்கும் நிலைத்து நீடிக்கக் கூடிய களமாகவே இருக்கும். அதேவேளை தமிழ் முஸ்லிம் மலையக மக்களுக்கு இறுதி விமோசனத்தை அளிக்க முடியாத ஒன்று என்பதை மட்டுமன்றி தொழிலாளி வர்க்கத்தினதும் உழைக்கும் அனைத்து மக்களினதும் ஐக்கியத்தை உடைத்துச் சிதற வைப்பதற்கும் அது பயன்படுத்தப்படும் என்பதையும் கட்சி சுட்டிக்காட்டி நின்றது. இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டு இரண்டு தசாப்தங்கள் கடந்து விட்ட நிலையில் அதன் சாதக பாதக அம்சங்களை மறுமதிப்பீட்டுக்கு உட்படுத்தும் போது கட்சி முன் வைத்த கருத்துக்களின் தர்க்க ரீதியான விளைவுகளை கண்டு கொள்ளவியலும். தமிழீழக் கோரிக்கையை நமது கட்சி ஏற்றுக் கொள்ளாத நிலையிலும் அக்கோரிக்கை எழுந்து வலுப்பெறக் காரணமான பேரினவாத இராணுவ ஒடுக்குமுறையின் வளர்ச்சியையும் அதன் கொடூரத் தாக்கத்தையும் எடுத்து விளக்கி எதிர்த்து வந்துள்ளது. அதேவேளை அக்கோரிக்கைக்குள் தமிழ்த் தேசிய இனத்தின் நியாயமானதும் வென்றெடுக்கப்பட வேண்டியதுமான அபிலாசைகள் உள்ளடங்கி இருப்பதை கட்சி எவ்வேளையிலும் நிராகரித்து நின்றதில்லை.

தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி எமது கட்சி ஏற்கனவே தெளிவான நிலைப்பாட்டை முன்வைத்து வந்துள்ளது. சுயநிர்ணய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமையின் அடிப்படையில் தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரிய வடக்கு கிழக்கு பிரதேசத்தில் பூரண அதிகாரங்கள் கொண்ட பிரதேச சுயாட்சி முறையை நிறுவதாகும். அவ்வமைப்பில் முஸ்லிம் மக்களின் தனித்துவத் தன்னடையாளங்கள் உட்பட அவர்களது தேசிய அபிலாசைகளை நிறைவு செய்யக்கூடிய சுயாட்சி உள்ளமைப்பு ஒன்று வலுவானதாக உருவாக்கிக் கொள்ளுதல். அதேபோன்று இப்பிரதேச சுயாட்சிக்கு உட்பட்ட பிரதேசத்தில் வாழும் சிங்கள மக்களினதும் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கவல்ல அதிகாரம் கொண்ட உள்ளமைப்புகளைத் தோற்றுவித்தல். அதேபோன்று மத்திய மலைப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் மலையக மக்களின் இன, வர்க்கத் தனித்துவங்களை உள்ளடக்கிப் பாதுகாக்கவல்ல சுயாட்சி உள்ளமைப்பு ஒன்று உறுதியான அடிப்படைகளில் நிறுவப்படல் வேண்டும். சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களை உள்ளடக்கிய இச்சுயாட்சி உள்ளமைப்பு தனது சூழலுக்கு ஏற்றவாறானதும் சிங்கள மக்களின் ஒத்துழைப்பையும் புரிந்துணர்வையும் பெற்றுக் கொள்ளும் வகையில் உருவாக்கம் பெறல் வேண்டும்.

இத்தகைய பூரணத்துவம் கொண்ட பிரதேச சுயாட்சி அமைப்பு முறையும் சுயாட்சி உள்ளமைப்பு முறைகளும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் வென்றெடுக்கப்பட்டு நிலைநிறத்தப்படுவதற்கு மிக நீண்ட தூரம் செல்ல வேண்டியே உள்ளது. பேரினவாத ஒடுக்கு முறையும் குறுந்தேசியவாத உணர்வுகளும் வளர்க்கப்பட்டுள்ள இன்றைய சூழலில் இருந்து விடுபட்ட ஓர் புதிய போராட்ட மார்க்கம் திறக்கப்படல் வேண்டும் என்பதே நமது கட்சியின் நிலைப்பாடாகும். இன்றைய சமூக அமைப்பினுள் ஆகக் கூடிய முயற்சிகள் செய்யப்படினும் கூட மிகக் குறைந்தபட்ச உரிமைகளைத் தான் பெற்றுக் கொள்ள முடியுமே தவிர முழுமையாக எதனையும் அடைந்து கொள்ளவியலாது.

ஆதலால் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு உடனடியானதும் நீண்ட காலத்திற்குமான கொள்கைகள் வகுக்கப்பட்டு முன்னெடுக் கப்படுவது அவசியமாகும். நீண்ட காலத்திற்கான கொள்கையானது சமுதாய மாற்றத்தை நோக்கிய புதிய ஜனநாயக புரட்சிக்கான கால கட்டத்தைத் தோற்றுவிப்பதும் அதன் ஊடாக சோஷலிசத்தைச் சென்றடைவதுமாகும். சோஷலிசத்தின் மூலமாகவே தேசிய இனங் கள் அனைத்தினதும் முழுமையானதும் சமத்துவமானதுமான உரி

www.tamilarangam.net

மைகள் உத்தரவாதம் பெற்று நிலை பெற முடியும்.

ஆனால் அந்த நீண்ட இலக்கை அடைவதற்கு முன்பு பல கட்டங்களை தேசிய இனப்பிரச்சினை கடக்க வேண்டியுள்ளது என்பதை எமது கட்சி கவனத்தில் கொள்கின்றது. அவ்வாறு நோக்கும் போது தேசிய இனப்பிரச்சினை கடந்து வந்த மூன்று கட்டங்களைச் சுட்டிக்காட்டு கிறது. இதனைக் கட்சியின் காலச் சென்ற முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் பகுப்பாய்வு செய்து முன்மொழிந்தமை குறிப்பிடக்கூடியதுமாகும். இருபதுகளின் ஆரம் பம் தொட்டு நாற்பாதுகளின் முடிவு வரை ஆரம்ப பிரதிநிதித்துவக் கோரிக்கையாகவும் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையாகவும் முன் வைக்கப்பட்ட காலம் தேசிய இனப்பிரச்சினையின் முதலாவது கட்டப் போராட்ட காலமாகும். ஐம்பதுகளின் ஆரம்பம் முதல் முன் வைக்கப்பட்ட சமஷ்டிக்கான கோரிக்கையும் அதற்கான போராட் டங்களும் இரண்டாவது போராட்டக் கால கட்டமாகும். எழுபது களில் தமிழீழக் கோரிக்கையும் அதற்கான ஆயுதம் தாங்கிய போராட் டங்களும் மூன்றாவது கால கட்டப் போராட்டத்தைக் கொண்ட தாகும். ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களிலான அப்போராட்டங் களின் படிப்பினைகள் பல்வேறு அம்சங்களைக் கொண்டதாகும். அவற்றை ஆழ்ந்து நோக்கியே நமது கட்சி நான்காவது கட்டப் போராட்டம் ஒன்றின் அவசியத்தை முன் வைக்கின்றது.

இந்நான்காவது கட்டப் போராட்டம் இதுவரை வழி நடாத்திய உயர் வர்க்க அல்லது சிறு முதலாளித்துவ தலைமைத்துவங்களுக்குப் பதிலாகத் தொழிலாளி வர்க்கத்தினரும் இடதுசாரி சக்திகளினதும் தலைமைத்துவத்தின் கீழ் முன்னெடுக்கப்படல் வேண்டும். தேசிய வாத அடிப்படையிலும் குறுந்தேசியவாத உணர்வுகளின் மூல மாகவும் முன்னெடுக்கப்பட்டு வந்த தேசிய இன விடுதலைக்கான போராட்டமானது மாக்சிச அடிப்படையிலும் தொழிலாளி வர்க்கத் தின் தலைமையிலும் முன்னெடுக்கப்படல் வேண்டும். அதன் மூலம் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் விரிந்து பரந்தளவில் செல்வதற்குரிய சூழல் தோன்ற முடியும்.

தேசிய இனப்பிரச்சினையில் உள்ளடங்கி நிற்கும் இலங்கைத் தமிழ்த் தேசிய இனம், முஸ்லிம் தேசிய இனம், மலையகத் தமிழ்த் தேசிய இனம் என்பனவற்றின் சுயநிர்ணய உரிமை என்பது பிரிவினை அற்ற

www.tamilarangam.net

வகையில் புவியியல், பொருளாதார இனத்துவ பாரம்பரிய தனித்துவ தன்னடையாளங்கள் என்பனவற்றின் அடிப்படையில் நிலைநாட்டப்படல் வேண்டும். இவற்றை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் சிங்கள மக்களின் ஒத்துழைப்பு, புரிந்துணர்வு, பங்களிப்பு போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்குரிய கொள்கைகளைக் கொண்டிருப்பது அவசியமாகும். அவர்களும் இணைந்த தொழிலாளி வர்க்க இயக்கமாக இருப்பதானது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் வலுவுடையதாக அமைவதற்கு வாய்ப்பானதாகும்.

தேசிய இன விடுதலையின் சுயநிர்ணய உரிமைக்கான நான்காம் கட்டப் போராட்டமானது தொழிலாளி வர்க்கத் தலைமை வழிகாட்டலில் சரியான தந்திரோபாய அடிப்படையில் முன்னெடுப்பதற்கு உடனடியாக நான்கு முனைகளில் உரிய அணுகுமுறைகளும் வேலைகளும் செய்யப்படல் வேண்டும்.

1. பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரிய பிரதேசம் மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பனவற்றை உறுதிப்படுத்தி நிலைநிறுத்தும் வகையிலான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன்நிறுத்துவது. அதனைக் குறுந்தேசியவாத அடிப்படையில் அன்றி முழுத் தமிழ் மக்களையும் ஏனைய பரந்த சக்திகளையும் அக்கோரிக்கையின் பின்னால் அணி திரளச் செய்யும் ஓர் வேலைத் திட்டத்தை முன்னெடுத்தல் வேண்டும்.

2. சிங்களத் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் உள்ள இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகள் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அதனை வென்றெடுப்பதற்கான போராட்டத்தை தமது கொள்கையிலும் வேலைத் திட்டத்திலும் முன்னுரிமை கொடுத்து முன்னெடுக்க வேண்டும்.

   அதேவேளை தமிழர் விடுதலைக்கான அமைப்புகள் முன்னைய உயர் வர்க்கத் தமிழ்த் தலைமைகள் சென்ற அதே தடத்தில் செல்வதைத் தவிர்த்து தொழிலாளி வர்க்க இடதுசாரி சக்திகளுடன் தம்மை இணைத்து புரட்சிகர முற்போக்குப் பாதையில் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்காக அணி சேர வேண்டும்.

www.tamilarangam.net

3. முஸ்லிம் மக்கள் மத்தியில் உருவாகியுள்ள தேசிய உணர்வுகள் சரியான திசையில் முன்னேற வேண்டும். இஸ்லாமிய மதக் கலாசாரத்தின் தனித்துவம் பேணப்படுவதையும், அடிப்படை உரிமைகள் வென்றெடுத்து நிலை நாட்டப்படவும் முஸ்லிம் மக்கள் தொழிலாளி - விவசாயி வர்க்க இடதுசாரி சக்திகளுடன் ஐக்கியப்படுவது அவசியம். அடிப்படைவாதத்தை அல்லது குறுந்தேசியவாதத்தை கைப்பிடித்துச் செல்லும் போக்கை நிராகரித்து முஸ்லிம் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் இடதுசாரி முற்போக்கு சக்திகளுடன் இணைந்து செல்ல வேண்டும்.

4. மலையகத் தமிழர் இலங்கையின் நான்காவது தேசிய இனமாக அடையாளம் பெற்றுள்ளார்கள். அவர்களது பிரதேசம் சிங்கள மக்கள் மத்தியில் இருப்பினும் அவர்களது தனித்துவமான வளர்ச்சி எவராலும் மறுதலிக்க இயலாத ஒன்றாகும். மலையக மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் தேசிய உணர்வுகள் இதுவரை யான பாரம்பரிய தொழிற்சங்க தலைமைகளுக்கு ஒரு பலத்த சவாலாகவும் காணப்படுகின்றது. மலையக தேசிய இனம் இனத்துவ ரீதியிலும் அதேவேளை வர்க்க அடிப்படையிலும் ஒடுக்கப்படுகின்ற இரட்டைக் குணாம்சத்தை மிக வெளிப் படையாகக் கொண்டுள்ளமை கவனத்திற்குரியதாகும். அத்த கைய தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமையினை வென் றெடுத்து நிலைநிறுத்த நாட்டின் தொழிலாளி வர்க்க இடதுசாரி சக்திகளுடன் இணைந்து போராட்டப் பாதையில் அணிவகுக்க வேண்டும்.

இவ்வாறு நீண்ட - குறுகிய கால கொள்கை வேலைத் திட்டங்களின் நடைமுறை வளர்ச்சிப் போக்கிலேயே சுயநிர்ணய உரிமை வென் றெடுத்து நிலை நிறுத்தப் பெற முடியும் என்பதே நமது கட்சியின் தீர்வுக்கான மார்க்கமாகும்.

எனவே இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வானது இதுவரை பின்பற்றப்படாத ஆனால் உலகின் குறிப்பிட்ட நாடுகளில் பின்பற்றப்பட்டு வெற்றி பெற்றுக் கொண்ட சரியான வழி முறை களின் படிப்பினைகளின் ஊடே வென்றெடுக்கப்படல் வேண்டும்.

www.tamilarangam.net

## தற்போதைய தீர்வுத் திட்டம்

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள தற்போதைய தீர்வுத்திட்டம் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்கு முழுமையானதும் திருப்திகரமானதுமான தீர்வினைக் கொண்டிருக்கவில்லை என்பது நமது நிலைப்பாடாகும். ஆயினும் நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய கொடூரமான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், அதன் பன்முகப் பாதிப்புகளிலிருந்து அனைத்து மக்களுக்கு ஆறுதலும் புனர்வாழ்வும், இயல்பு வாழ்வையும் அளிக்கத் தற்போதைய தீர்வுத் திட்டத்தை ஓர் அம்சமாகக் கவனத்தில் எடுப்பது தவிர்க்க இயலாத ஒன்றாகும். அரசாங்கம் பதவி ஏற்று ஒரு வருட கால தாமதத்திற்குப் பின் 1995 ஆகஸ்ட் மாதத்தில் முதன்முதலாக முன் வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்திற்கும் பின்பு அது சட்ட வரைவு வடிவத்தில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டதற்கும் வேறுபாடு காணப்படுகிறது. முன்னையது இதுவரை முன் வைக்கப்பட்ட தீர்வுக்கான திட்டங்கள் அனைத்திலிருந்தும் மிக முன்னேற்றகரமாக அமைந்திருந்தது. ஆயினும் அதிலும் கூட பாதகமான அம்சங்கள் சில நீக்கப்பட்டு சாதகமான கூறுகள் சேர்க்கப்பட வேண்டியதாகவே இருந்தது. ஆனால் பின்னையதான சட்டவரைவு வடிவத்தில் பல்வேறு அம்சங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டு திருப்தியற்றதாகவே காணப்படுகின்றன. அதிகாரங்களைப் பகிர்ந்து அளிப்பதில் தயக்க நிலையும், கட்டுப்படுத்தும் உள்ளார்ந்த முனைப்பும், அச்ச உணர்வும் வெளிப்பாடடைந்து காணப்படுகிறது. சில முக்கிய விடயங்களுக்கு தெளிவாக எதுவும் கூறாது விடப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு இணைப்பு, முதலமைச்சரின் பணிகளில் தலையிட்டுக் கட்டுப்படுத்தும் அதிகாரம், காணிக் குடியேற்றத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மட்டுப்படுத்தல், நிதி, அபிவிருத்தி, பாதுகாப்பு போன்றவற்றில் மத்தியின் தலையீடு போன்றன சுட்டிக்காட்டப்பட வேண்டிய குறைபாடுகளாகும். மேற்கூறியவற்றில் போதிய திருத்தங்களும் மாற்றங்களும் செய்யப்பட்டாலே குறைந்த பட்சமாவது அத்தீர்வுத்திட்டம் தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாசைகளை உள்ளடக்கி நிற்கமுடியும். அல்லாதுவிடின் அத்தீர்வுத்திட்டம் அரைகுறையான ஒன்றாகி தமிழ் மக்களின் அங்கீகாரம் இன்றி திணிப்பாகச் செலுத்தப்படும் ஒன்றாகி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடும். அப்படியானால் முன்னைய மாவட்ட சபைக்கும் பின்பு மாகாண சபைக்கும் ஏற்பட்ட கதியாகி விடும் நிலையே தோன்றச் செய்யும்.

ஆதலால் தற்போதைய தீர்வுத்திட்டம் இதயசுத்தியுடன் உள்நோக்கங்கள் அற்றவகையில் இன்றைய அமைப்பிற்குள் குறைந்தபட்சத் தீர்வைத்தானும் கொண்டுவர அதற்கு செய்யவேண்டிய செயல் முறைகள் அவசியமானதாகும். ஒன்று, தீர்வுத்திட்டம் தமிழ்த் தேசிய இனத்தினதும் ஏனைய முஸ்லிம் மலையக தேசிய இனங்களினதும் நியாயமான உரிமைகளுக்கு அடிப்படை உத்தரவாதம் வழங்கும்வகையில் மாற்றங்கள் செய்து வடிவமைக்கப்படல் வேண்டும். இரண்டு, பேரினவாத, மிதவாத சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாது கடந்தகாலப் பட்டறிவின் அடிப்படையில் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றி நடைமுறைக்குக் கொண்டுவர உறுதிபூணல் வேண்டும். மூன்று, மேற்படி தீர்வுத்திட்டத்தை நிறைவேற்றி நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக இன்றைய போராட்டத்தின் முதன்மைப் பாத்திரத்தை வசித்துவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் ஏனைய தமிழ் அமைப்புகளுடனும் விரிவான பேச்சுவார்த்தை நடாத்தி உரிய இணக்கப்பாட்டைத் தோற்றுவிக்க வேண்டும். தேவைப்படின் அத்தகைய பேச்சவார்த்தைக்கும் நடைமுறைப் பிரயோகத்திற்கும் நேர்மையான உள்ளநோக்கமற்ற மூன்றாம் தரப்பு வெளிநாட்டு மத்தியஸ்தம் பெறப்பட வேண்டும்.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தபின் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தை விடுதலைப் புலிகளுடன் தோல்வி அடைந்தது. இதில் அரசாங்கம் புலிகள் மீதும் புலிகள் அரசாங்கத்தின் மீதும் பழியை சுமத்தி இரு பகுதியினருமே தத்தமது இராணுவ முனைப்பில் இறங்கினர். இது சமாதானத்தையும் இயல்பு வாழ்க்கையையும் எதிர்பார்த்த அனைத்து மக்களுக்கும் பேரிடியாகியது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் இடம்பெற்று வரும் யுத்தமுனைப்பு முயற்சிகளினால் ஏற்பட்டுள்ள பாரிய அனர்த்தங்களையும் -நாடும் மக்களும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதையும் அனுபவரீதியாகக் காணமுடியும். இதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைவிட ஒரு பொறுப்புள்ள அரசாங்கத்திற்கு உள்ள கடப்பாடு மிக முக்கியமானதாகும். எனவே இன்றுள்ள அரசியல் யதார்த்தத்தை உணர்ந்து அரசாங்கம் முன்னெடுத்து

www.tamilarangam.net

வரும் ''யுத்தத்தின் மூலம் சமாதானம் அல்லது பயங்கரவாதத்திற்கு இராணுவத்தீர்வும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வும்'' என்னும் நிலைப்பாட்டில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருதல் வேண்டும். அமெரிக்காவின் பின்புல ஆதரவுடன், மேற்குலக அனுதாபத்துடன் இந்தியாவின் வெளிக்காட்டாத ஆலோசனை ஒத்துழைப்புடனும் தனது யுத்த மார்க்கத்தில் வெற்றி பெற்று விடலாம் என அரசாங்கம் நம்புவது வெறும் கற்பனைத்தனமானதாகும்.

அதேவேளை புலிகள் இயக்கம் தனியே இராணுவ செயற்பாட்டில் மட்டும் தங்கியிராது அரசியல் தளத்தில் நின்றும் பிரச்சினைகளை அணுகுவது அவசியமாகும். எனவே முழுத் தமிழ் இனமும் சின்னா பின்னப்படுத்தப்பட்டுள்ள இன்றைய மோசமான நிலையில் அம்மக்க ளுக்கு ஒரு நியாயமான மாற்று அரசியல் தீர்வுத்திட்டத்தின் மூலம் குறைந்த பட்சமாவது இடைக்காலத் தீர்வு ஒன்று காணப்படுவதை புலிகள் இயக்கம் அங்கீகரித்து அத்தகைய அரசியல் தீர்வுக்கான பேச்சவார்த்தை ஒன்றிற்கு முன்வரல் வேண்டும். இது அனைத்து தமிழ் மக்களின் இன்றைய முழு விருப்பமுமாகும்.

எனவே அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஒருவரை ஒருவர் நிராகரிக்காது, முன்நிபந்தனைகளை விதிக்காது உறுதியான அரசியல் தீர்வை முன்நிறுத்தி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றின் மூலம் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். பரஸ்பரம் நம்பிக்கை யும், தத்தமது உள்நோக்கங்களைக் கொண்டிராத வகையில் புரிந் துணர்வுடனும், விட்டுக் கொடுப்புடனும் அப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது அவசியம். பேச்சுவார்த்தையின் மையப்பகுதி இனப்பிரச்சினையாகவும் முழு நாட்டு மக்கள் எதிர்நோக்கி நிற்கும் அவலங்களுக்கு தீர்வு காணப்படுவதாகவும் அமையவேண்டும். இதில் பேரினவாத, இனவாத சக்திகளினதும் இராணுவ தீர்வுநாடு வோரதும் கருத்துகளுக்கு செவிமடுத்து வளைந்து கொடுக்கும் போக்கு உறுதியாக நிராகரிக்கப்படுவது முக்கியமானதாகும். ஆத லால் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தத்தமது நிலையில் இருந்து இறங்கி இனப்பிரச்சினைக்குப் பேச்சவார்த்தை மூலம் ஏற்றுக் கொள்ளத்தக்க நியாயமான அரசியல் தீர்வு காணமுற்பட வேண்டும் என்பதையே நமது கட்சிக் காங்கிரஸ் வற்புறுத்துகின்றது. அதே வேளை யுத்த நிறுத்தம் மிகமிக அவசியமானது என்பதையும் காங்கிரஸ் சுட்டிக் காட்டுகிறது.

www.tamilarangam.net

## கலை இலக்கியக் களம் பற்றி

சமூக மாற்றத்திற்கான செயற்பாட்டில் கலை இலக்கியத்தின் பங்குப்பணி நிராகரிக்கப்படவியலாத முக்கியத்துவமுடையது. இன்று கலை இலக்கியம் பலவேளைகளில் தனிமனிதச் செயற்பாடாக அமைந்துள்ளது; தனிமனிதவாதம் முனைப்புறுவதற்கும் காரணியும் அதன் காரணமாயும் இது நேர்கிறது. இருப்பினும் கலை இயக்கத்தின் ஆரம்பகாலத் தோற்றுவாய் கூட்டு முயற்சியின் பாற்பட்டதே. உழைப்புடன் உறவுடையதாய்த் தொடங்கிய சடங்கிலிருந்தே கூத்துப்பிறந்தது. இன்றுவரை உன்னத இலக்கியங்கள் எனப்பட்டவை அவ்வக்காலத்து மக்கள் கலை இலக்கியங்களை (நாட்டார் வழக்காறுகளை) உட்செரித்து வளம் பெற்றவையே.

பாரதியுகத்தின் பின், வரலாறு மக்கள் மயப்பட்ட நிலையில், மக்கள் இலக்கியம் செவ்வியல் இலக்கியத்தில் தாக்கம் விளைவிப்பது என்பதைக் கடந்து குணாம்சரீதியான மாற்றத்தைப் பெற்று, மக்கள் இலக்கியமே பிரதான செல்நெறியாகிவிட்டுள்ளது.

அதன் பேறாக ஐம்பதாம் ஆண்டுகளில் இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தோற்றம் பெற்றது. மண்வாசனை இலக்கியம், தேசிய இலக்கியம், யதார்த்த இலக்கியம் என்ற கோட்பாடுகள் முனைப்புப் பெறலாயிற்று. அதற்கு முன்னரே சமூக இருப்பைப் படைப்புகள் மரபுசார்ந்த செவ்வியல் இலக்கியத் தாக்கத்தோடு வெளிப்படுத்தியிருந்தன. ஆயினும் இப்புதிய செல்நெறி சமூகச் சச்சரவுகளையும் முரண்பாடுகளையும் வெளிப்படுத்த ஆற்றுப் படுத்துவதாயிற்று.

அறுபதாம் ஆண்டுகளின் பிற்கூறில் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டலில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் முன்னெடுத்த சாதியத்துக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டம் சமூகச் சச்சரவுகளை வெறும் முரண்பாடுகளின் தொகுதியாவன்றிக் கூர்மையான வர்க்கப் போராட்டக் களமாய் இனங்காட்டிய போது அதனை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினரால் கிரகிக்கவோ கலை இலக்கிய வடிவத்தில் படைப்பாக்கம் செய்யவோ முடியாமற் போயிற்று. இதன் பேறாகவே 1974 இல் தேசிய கலை இலக்கியப் பேரவை முகிழ்த்தது.

www.tamilarangam.net

எண்பதுகளின் பிற்கூறில் தமிழக இலக்கியச் சூழலில் தலித்தியம், பெண்ணியம் ஆகியகோட்பாடுகள் முனைப்புற்றபோது முழுமை யான சமூக விடுதலையுடன் இணைத்துப் பார்க்க முடியாமல் அமைப்புகளை மையப்படுத்திப் பார்க்கும் போக்கு வலுப்படு வதாயிற்று. போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி வைக்கப்பட்ட ஒருதலைமுறை அவ்வாறு நேர்ந்தமைக்கான காரணியை ''அமைப் புச் சர்வாதிகாரத்தில்'' மட்டும் தேட முனைந்ததன் விளைவாக இத்தகைய கோட்பாடு ஈழத்து இலக்கியச் சூழலிலும் ஒரு சிலரால் வலிந்து பின்பற்றப்படலாயிற்று. இதற்கமைவான தத்துவமாக அமைப்பியல்வாதமும் பின் அமைப்பியல்வாதமும் வந்து சேர்ந்தன.

பின் அமைப்பியல்வாதம் மையத்தகர்ப்பு என்ற பெயரில் ஆதிக்க அமைப்புகளை மட்டும் அன்றி பாட்டாளி வர்க்கக் கட்சி அமைப்பை யும் தகர்க்க அழைப்புவிடுவதானது, இறுதி ஆய்வில் சுரண்டச் சக்திகளுக்கே உதவும் கோட்பாடாக அதனை இனங்காண வழி கோலும். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமும் உண்மையில் ஆதிக்க அமைப்புகளைத்தகர்க்கும் பாதையில் ஒரு தவிர்க்கவியலாத இடைக்கட்டுமே!

இதுவரையிலிருந்த அரசுகள் அனைத்தும் (சோஷலிஸ நாடுகள் தவிர்ந்தவை) மிகப் பெரும்பாலான உழைக்கும் மக்களை மிகச் சிறு தொகையினரான சுரண்டும் வர்க்கத்தினர் அடக்கிவைத்திருப்பதற் கான சக்திகளாய் விளங்கி வந்தன. அரசு என்ற ஒடுக்கு முறைக் கருவி மட்டுமே அதற்குப் போதுமாய் இல்லாதபோது, தந்தையாதிக்க ஒடுக்குமுறைக் குடும்பம், மதம், சாதி என்ற அமைப்புகளும் அதன் ஒடுக்குதல் கடமையை மேற்கொள்வனவாயிற்று. அரசின் ஆதிக் கத்தை நிலைநிறுத்த உதவும் உறுப்புகளே தந்தையாதிக்கக் குடும்பம், மதம், சாதி என்ற அமைப்புகள், அரசை இருக்கவிட்டு, நுண் -அரசியல் செயற்பாடு என்ற பெயரில் இந்த அமைப்புகளை மட் டுமே ஒழித்து விடமுடியுமென எண்ணுவது நிழலோடு யுத்தம்புரியும் வீண் எத்தனிப்பாகும். வெகுஜனப் புரட்சியும் பேருரு அரசியற் செயற்பாடு வாயிலாக அரசைச் சாய்ப்பதோடேயே ஒடுக்குமுறை அமைப்புகளாய் உள்ள அதன் கூறுகளையும் சாய்க்க முடியும்.

இந்த மாற்றத்தின் போது, குடும்பம் சமூகத்தின் ஒரு அலகு என்பதும், அதன் தந்தை ஆதிக்க ஒடுக்குமுறைக் குணாசம்சமும், பொருளியல்

www.tamilarangam.net

தேவைக்காக கணவன் - மனைவி இணை சேர்வதும் தகர்க்கப்படும். உண்மை அர்த்தத்தில் காதலிரிருவர் கருத்தொருமித்துக் குடும்பமாய் வாழ்தல் புதிய கலாசாரமாய் முகிழ்க்கும்.

இன்றைய பின் நவீனத்துவம் அரசின் தோற்றம் வளர்ச்சியில் தனிச்சொத்துடைமை அமைப்பு மாற்றங்கள் ஏற்படுத்திய மாற்றங் களையும், அவற்றுக்கிடையேயான பரஸ்பர உறவையும் இயங்கியல் விதியையும் காணவொட்டாது தடுக்கும் தத்துவக் குழறுபடிகளை விதைத்துள்ளது. எங்கும் எப்போதும் குழப்பங்கள் நிலவுமேயன்றி விதி செயற்பட முடியாதென பின் நவீனத்துவவாதி கூறுவது மாற்றத் துக்கு விழைபவரை முடக்கவே உதவும். நிகழும் சம்பவங்கள் வெறும் தற்செயல் எனக்கருதுகின்றனர். ஒவ்வொரு தற்செயல் நிகழ்வுகளுக்குள்ளும் ஒரு அவசியம் இழையோடுவதைக் காண முடியாது தடுமாறுகின்றனர். உண்மையில் தனிச்சொத்துடைமை அமைப்பின் இயங்கியல் விதியைப் புரிந்து கொண்டு, அடுத்த கட்ட வளர்ச்சிப்போக்கை மானுடம் வெல்லும் வகையில் ஆற்றுப்படுத்த நாம் உழைக்கக்கூடிய உலகப் பார்வை எம்மிடம் உண்டு. அதன் காரணமாயே பூரண இயக்கவியல் - பொருள் முதல்வாதிகளான நாம் எந்தக் குழப்பகரச் சூழலிலும் அச்சமற்றவர்களாய் திகழ்கிறோம்.

இத்தகைய தெளிந்த ஞானத்தோடு கடந்த கால கலை கலாசார இலக்கிய வளங்களை நாம் அணுகுகின்றோம். இதுவரை இருந்த கலை - இலக்கிய வடிவங்களில் ஆதிக்க சக்திகளின் தாக்கம் வெவ்வேறு அளவுகளில் இருந்து வந்துள்ளன. ஆயினும் இவற்றி னூடாக வளர்ந்த கலாசாரக் கூறுகள் அனைத்தும் நிராகரிக்கப்படக் கூடியனவல்ல. அவ்வாறே உழைக்கும் மக்களிடம் முகிழ்த்த எதிர்க் கலாசாரக் கூறுகளையும் அவற்றிடமுள்ள குறைபாடுகள் காரணமாய் நிராகரித்துவிட முடியாது. இவையனைத்திலுமுள்ள நல்ல அம்சங் களைக் கையேற்று சுரண்டற் கூறுகளையும் குறுகிய நோக்குகளையும் களைந்து மக்கள் விடுதலையின் பேறான பொதுமைச் சமூகத்தைப் படைக்கும் புதிய கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புவதையே எமது நீண்டகால கலை இலக்கியப் பணியாகக் கொள்கிறோம்.

கலாசாரவாதிகள் தூய கலைவாதம் பேசுவர். எதிர்க்கலாசாரவாதிகள் நீண்டகாலப் பார்வையற்று குறுகிய நலன்களை முதன்மைப்படுத்தும் படைப்புக்களைக் கோருவர். இந்த இரு தரப்பினரும் சுரண்டலுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிராகக் குரல் கொடுக்கும் போது அந்த இடங்களை நாம் ஆதரிப்போம். ஐக்கியமும் போராட்டமும் என்ற கோட்பாட்டு அடிப்படையில் இவர்களோடு செயற்படுவோம்.

நாம் ஒளிபாய்ச்ச வேண்டிய பக்கத்தையும் அம்பலப்படுத்த வேண்டிய அம்சங்களையும் கலை மயப்படுத்தும் போது வாழ்வின் முழுமையம்சத்தினைக் காட்டத் தவறுகின்றோம் என்ற குற்றச்சாட்டு எம்மீது சுமத்தப்படுவதுண்டு, ஒருவகையில் இது தவிர்க்கவியலாததே; வர்க்கங்களற்ற பொதுமைச் சமூகத்தைப் போல இன்றைய வர்க்கபேத சமூகத்தைப் பார்க்க முடியாது. இன்று தொடர்ந்து வளர்ந்துவரும் சமூகச் சீரழிவுகளை நாம் அம்பலப்படுத்துவதோடு, இதனூடே தெரியும் ஒளிமயமான எதிர்காலத்துக்கான கிரணங்களை இனங்கண்டு அதன் வளர்திசையை தொட்டுக் காட்டவே நாம் பெரிதும் முயல்கிறோம். போற்றத்தகுந்த கலை இலக்கியங்கள் மானுடம் வெல்லும் வண்ணம் உன்னத மனிதத்துவத்தின் சிருஷ்டிப்புக்காக உழைப்பதைப் படைப்பாக்கம் செய்வனவே. இதன் வழியே தான் சமூகத்தினுள் நிகழும் போராட்டங்களும் இயற்கையுடனான போராட்டமும் பார்க்கப்படும்.

மக்கள் எழுச்சியுறாத காலங்களில் மக்களைப் பிரியும் தூய கலைவாதிகள் மக்களின் அழகியலைப் புரியமுடியாமல் செவ்வியல்சார் தூய அழகியல்வாதத்தில் அமுந்தி சமூகச் சீரழிவுகளை நனவிலி மனங்களூடாகப் படைப்பாக்கம் செய்வர். சீரழிவுறலே மனித இயற்கையெனச் சோர்வடைவர். அந்தப் பக்கத்தை இலக்கியப் படுத்திக் காட்டி இதுவே மனிதவாழ்வின் முழுமைச் சித்தரிப்பு என்பர். இது உண்மையின் ஒரு பக்கம்.

மக்கள் கிளர்ந்தெழுவர்; சீரழிவுகளைக் குழிதோண்டிப் புதைப்பர்; புதிய உலகம் புனைவர். அந்த இயக்கவியல் விதியைக் கவனத்திற் கொள்ளும் புதிய கலாசாரவாதிகளாகிய நாம் மனிதவாழ்வின் முழுமையைப் படைப்பாக்கம் செய்யும்போது இந்த வரலாற்று எதிர்வுகூறலை முதன்மையானதாகக் கொள்கிறோம்.

அந்த வகையில் மனித குலம் கண்டடைந்த அறிவுக்கூறுகள் அனைத்தையும் -தத்துவவியல், சமூகவியல், மானுடவியல், வரலாற்றியல், உளவியல், அறிவியல், அரசறிவியல், இருத்தலியல், அமைப்பியல், பின்அமைப்பியல் போன்ற அனைத்து அறிவுக் கூறுகளையும்

www.tamilarangam.net

உள்வாங்குவோம். இயங்கியல் பொருள்முதலல்லாத நோக்கு எந்த விலங்கிடலுக்கும் உட்படுத்தாது புறநிலை யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளும் தெளிவை ஊட்டியிருப்பதால் இந்த அறிவுக்கூறுகளி லிருந்து ஏற்படுடையவற்றை தெளிந்தெடுக்க எம்மால் இயுலும். இதன் போது வர்க்கப் பார்வை அடிப்படையாதென்ற அரசியல் பேதம் எமக்குண்டு. இவ்வாறு கூறுகையில் ஒவ்வொரு அம்சத்திலும் வர்க்கத்தைத் தேடுவது ஒவ்வொரு படைப்பிலும் வர்க்க எதிரியின் வீழ்ச்சியைக் காட்டிவிடுவது என்று அர்த்தமல்ல; இன்றைய சுரண்டற் சமூகத்தில் பல சமூகப் பிரச்சனைகள் தீர்க்கப்படமுடியாதவை என்பதும், பாட்டாளிவர்க்கத் தலைமையில் சமவுடமைப் பொருளா தார அமைப்பை வென்றெடுத்தல் அவசியமானதென்பதையும் அடிப்படையானதெனும் புரிதல் வேண்டும் என்பதே பொருள்.

அதிகாரத்துவத்திற்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான மக்களின் போராட்டங்களுக்கான ஜனநாயகச் சூழலை வழங்குதல் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான மக்கள் ஜனநாயக இயக்கத்தின் பணியா கும். மக்கள் தாமே போராடித் தமது உரிமைகளை நிலைநாட்ட அங்கும் கலை இலக்கியம் உறுதுணையாய் நிற்கும்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் பொருளாதார அடித்தளத்தை சோஷ லிஸமாக மாற்றியமைத்தல் ஒன்றே தீர்வென எப்போதும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்றில்லை. குறித்த சூழலில் பொருளா தார அடித்தளத்தைவிட மேற்கட்டுமானமாகிய கலாசாரம் முக் கியத்துவமுடையதாகும் போது அதனைக் கவனத்திற் கொள்வ தவசியம். அதனாலேயே சாதியத்துக்கெதிரான போராட்டத்தை வர்க்கம் போராட்டத்தின் ஒரு வடிவமாய் எங்களால் காணமுடிந்தது; இன்று பேரினவாதத்துக்கெதிரான போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் போராட்டங்களை உறுதியாக ஆதரிக்க முடி கின்றது. இவை குறித்த சூழலில் வெவ்வேறு முரண்பாடுகள் பிரதான இடங்களைப் பெற்றுத் தீர்மானிக்கும் சக்தியாகும் எனக் கண்டதன் பேறே, சாதிய, இனத்துவ ஒடுக்குமுறைகளில் பண்பாட்டு அழிவுகள் நிகழும்போது பண்பாட்டுத்தளத்துக்கு எமது படைப்புகள் அதிக அழுத்தங் கொடுக்கத் தவறுவதில்லை.

வர்க்கப் பார்வையை அடிப்படையாகக் கொண்டு, மனுக் குலம் வளர்த்தெடுத்த சகல அறிவுக்களஞ்சியங்களையும் உள்வாங்கி,

www.tamilarangam.net

மக்கள் அழகியல் நோக்கோடு வாழ்வைக் கலைத்துவ மறுஉருவாக்கம் செய்வோம்.

புதிய ஜனநாயகம், புதிய கலாசாரம், புதிய வாழ்வைக் கட்டியெழுப்புவோம்! அதற்கென, இன்றைய நுகர்வுக் கலாசார நச்சுச் சூழலால் கறைபடாமல், பாட்டாளிவர்க்க ஒருமைப்பாட்டு உணர்வுடன் ஐக்கியமும் அனைத்து சக்திகளும் ஓரணி திரண்டு புதிய பண்பாட்டு ஒழுங்கமைப்பு ஒன்றைக் கட்டிவளர்ப்போம்! கலை கலைக்காவே என்னும் உள்ளடக்கத்தைக் கொண்டு நவீன கோட்பாட்டுப் போர்வைகளில் முன்னெடுக்கப்படும் நாசுக்கும் நச்சுத்தனமும் கொண்ட கலை இலக்கியப் படைப்புகளை உரியவாறு இனம் கண்டு அம்பலப்படுத்தி நிராகரிப்போம். சமூக மாற்றத்திற்கான மக்கள் கலை இலக்கிய கோட்பாட்டை மேலும் செழுமைப்படுத்தி முன் செல்வதே நமது கலை இலக்கியப் பணியாகும்.

www.tamilarangam.net

## சர்வதேச நிலைமை

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏனைய முன்னேறிய முதலாளித்துவ நாடுகளும் மனித உரிமைகள் ஜனநாயகம், சமாதானம் என்ற பெயர்களில் சோஷலிஸ நாடுகளிலும் ஏனைய நாடுகளிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தலையிட்டும் அழுத்தங்களை மேற்கொண்டும் வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பவற்றை அமெரிக்க ஏகாதிபத்தியமே நடாத்தி வருகிறது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவே மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதாரத் திட்டங்களையும், வரவு செலவுத்திட்டங்களையும் தீர்மானிக்கின்றன. சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி என்பவற்றை அமெரிக்க ஏகாதிபத்தியமே இயக்கி வருகிறது. உலக வங்கியினதும்,சர்வதேச நாணய நிதியத்தினதும் பிடிக்குள் மாட்டிக் கொண்டிருப்பதால் அவற்றின் விருப்பிற்கு ஏற்பவே மூன்றாம் உலக நாட்டு அரசாங்கங்கள் நடக்க வேண்டியிருக்கின்றன.

இன்றைய உலக ஒழுங்கை இயக்குகின்ற ஏகாதிபத்திய, நவகாலனித்துவ, முதலாளித்துவ சக்திகளினது தேவைகளுக்கு ஏற்றவாறே உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன இயங்குகின்றன.

சந்தைப் பொருளாதாரத்துக்கு அனுசரணையாகவே உலக வர்த்தக ஸ்தாபனம் (W.T.O) காட், ஐரோப்பிய யூனியன், ஜீ -7 நாடுகள், ஆசியான் போன்றன இயங்குகின்றன அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் கைத்தொழில் வீழ்ச்சியை சீர்படுத்தவும், பாதுகாப்புச் செலவை சமாளிக்கவும், ஏற்றுமதி வர்த்தகத்தில் உயர்ந்த இடத்தைப் பிடிக்கவும், சர்வதேச பொருளாதார நிறுவனங்களூடாக வறிய நாடுகளை தனது பிடிக்குள் வைத்திருக்க வேண்டி திட்டமிட்டு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளையும் தனது பிடிக்குள் வைத்துக் கொண்டு சர்வதேச பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக அமெரிக்க ஏகாதிபத்தியம் இருந்து வருகிறது.

அமெரிக்க கண்டத்தின் பிராந்திய சந்தையை வட அமெரிக்க பிராந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தினூடாக அமெரிக்கா கட்டுப்படுத்துகிறது.

www.tamilarangam.net

ஜப்பானுக்கு நன்மை அளிப்பதாக இருக்கும் கிழக்கு ஆசிய பொருளாதார ஒத்துழைப்பு, ஆசியான் ஆகிய அமைப்புகளை கட்டுப்படுத்தும் நோக்கில் ஆசிய, பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு மன்றம் என்ற அமைப்பை ஸ்திரப்படுத்தி வருகிறது.

மேற்கு ஐரோப்பிய வர்த்தக போட்டிகளை மேவி முன்னாள் சோவியத் யூனியனுக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்கா அதன் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்து வருகிறது. ஜப்பானையும், ஐரோப்பிய யூனியனையும் பின்னடையச் செய்யும் நோக்குடன் அமெரிக்கா அடிக்கடி அதனது டொலரை மதிப்பிறக்கம் செய்துவருகிறது.

சோவியத் யூனியனின் தலைமையிலான வார்சோ இராணுவ அமைப்பு தற்போது இல்லை. நேட்டோ இராணுவ அமைப்பினூடாக அமெரிக்க சர்வதேசரீதியாக அதனது இராணுவ ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகிறது.

ஹங்கேரி, ருமேனியா, யூகோஸ்லாவியாவிலிருந்து தோன்றிய பல நாடுகளுடனும் அமெரிக்கா இருதரப்பு இராணுவ உடன்படிக்கைகளை செய்து கொண்டுள்ளது. முழு ரஷ்ய பிராந்தியமும் நேட்டோ அமைப்பின் மூலமே கட்டுப்படுத்தப்படுகிறது.

சந்தைப் பொருளாதாரம், தாராளமயப் பொருளாதாரம், திறந்த பொருளாதாரம், உலகமயமாதல் என்பன முதலாளித்துவத்தின் சாதனைகளாக காட்டப்படுகின்றன ஆனால் உலக சனத்தொகையில் 2/3 பகுதியினர் 'மேற்படி சாதனைகளால்' பாதிப்படைந்து உயிர் வாழ்வதற்கான வாழ்க்கைத் தரத்தையும் இழந்து வருகின்றனர்.

சந்தை பொருளாதாரம், தாராளப் பொருளாதாரம், திறந்த பொருளாதாரம், உலக மயமாதல் என்பவற்றில் எல்லா நாடுகளாலும் எல்லா மக்களாலும் பிரவேசிக்கவே முடிவதில்லை. அவற்றின் பாதிப்பால் சர்வதேச சந்தையில் ஏற்கனவே இருந்த இடங்களையும் மூன்றாம் உலக நாடுகள் பல இழந்துள்ளன.

சர்வதேச சந்தைகளில் இடங்களைப் பிடிக்கப் போவதாகக் கூறிக் கொண்டு பல மூன்றாம் உலக நாடுகள் அவற்றின் தேசிய பொருளாதாரத்தையும், தேசிய வளங்களையும் ஏகாதிபத்தியத்திடமும் பன்னாட்டு கம்பெனிகளிடமும் தாரைவார்த்து வருகின்றன.

www.tamilarangam.net

சிங்கப்பூர், தென்கொரிய நாடுகளைப் போன்று பொருளாதாரத்தில் முன்னேறப் போவதாக நம்பிக் கொண்டு திறந்த பொருளாதாரம், தாராளப் பொருளாதாரம், சந்தைப் பொருளாதாரம் என்பவற்றில் தம்மை கண்மூடித்தனமாக ஈடுபடுத்தி வருகின்றன. சிங்கப்பூர், தென்கொரியா என்பன ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளின் உதவியுடன் இப்பிராந்திய சோஷலிஸ நாடுகளுக்கு சவாலாக திட்டமிட்டு வளர்க்கப்பட்டன என்ற உண்மையை மறந்து திறந்த, சந்தை, தாராளப் பொருளாதாரம் என்று கூறிக் கொண்டு அவற்றை கடைப்பிடிக்கின்றன. அதனால் ஏற்கனவே இருந்த பொருளாதார நிலைமைகளையும் இழக்கின்றன.

திறந்த, சந்தை, தாராளப் பொருளாதாரத்தை கடைப்பிடிக்கும் நாடுகளில் ஜனநாயகம் மனித உரிமைகள் என்பன மறுக்கப்படுகின்ற சர்வாதிகார, இராணுவ ஆட்சிகளே நடைபெறுகின்றன. அந்நாடு களில் பலவிதமாக சமூகச் சீர்கேடுகளும், சமூகப் பிரச்சினைகளும் தலைவிரித்தாடுகின்றன.

எனவே ஏகாதிபத்தியமோ, முதலாளித்துவமோ மனிதகுலத்தின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுவிடவில்லை என்பது நிருபிக்கப்பட்டு வருகின்றன. இருந்த போதும் அவை அவற்றுக்கு சார்பான திட்டமிட்ட சக்தி வாய்ந்த சர்வதேச முறைமையை கட்டி வளர்த்துள்ளன.

சோஷலிஸ நாடுகளில் வாழும் மக்கள் புரட்சியினால் சோஷலிஸ ஆட்சியினால் பலவிதமான முன்னேற்றங்களை அடைந்தனர் என்பதை யாரும் மறுக்க முடியாது. வடகொரியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் தற்போது பாரிய பொருளாதார பிரச்சினைகள் நிலவுவ தாக தெரிவிக்கப்படுகின்ற போதும் சோஷலிஸத்தின் கீழ் அந்நாடு கள் பல சாதனைகளை படைத்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சீனாவில் பல ''பொருளதார மாற்றங்களும், சீர்திருத்தங்களும்'' இடம்பெற்ற போதும் ஏகாதிபத்தியத்திற்கு சீனா அடிமையாகி விடவில்லை. அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் போன்ற பல சவால்களுக்கும் மத்தியில் கியூபா மக்கள் அவர்களின் சுய தேவைகளை பூர்த்தி செய்வதில் தன்னிறைவைக் கண்டுள்ளனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் முதலாளித்துவ நாடுகளினதும் எதிர்ப்புகளுக்கும், சவால்களுக்கும் மத்தியிலும், பல சோஷலிஸ

www.tamilarangam.net

நாடுகள் இன்றும் உயிர்ப்புடன் சோஷலிஸ நிர்மாணங்களை முன் னெடுத்து வருகின்றன. ஐரோப்பிய நாடுகளில்இடதுசாரி சக்திகள் பலம்பெற்றுவருவதைக் காணமுடிகிறது.

பிலிப்பைன்ஸ், கம்போச்சியா, குர்திஷ்தான், பேரு, கெளதமாலா, கொலம்பியா, நிக்கரகுவா போன்ற நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சி களின் தலைமையில் சமூக மாற்றத்துக்கான ஆயுதப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. இந்தியாவில் சில கம்யூனிஸ்ட் கட்சிகள் மக்கள் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. சில கம்யூனிஸ்ட் கட்சிகள் பாராளுமன்ற போராட்டப் பாதையில் ஈடுபட்டுள்ளன.

நேபாளத்தில் (ஐக்கியப்பட்ட மாக்சிஸ்ட் லெனினிஸ்ட்) கம்யூனிஸ்ட் கட்சி பாராளுமன்ற போராட்டப் பாதையில் வெற்றி கண்டுள்ளது. அங்கு மக்கள் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சியும் தனது போராட்டத்தை தொடர்கிறது.

சர்வதேச புரட்சியை மட்டும் உயர்த்திப் பிடிக்கும் ட்ரொஸ்சிட்டு களும், உலகளாவில் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் வேலை செய்வதையும் அவதானிக்க முடிகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான 'புதிய உலக ஒழுங்கு' சோஷலிஸ்ட் நாடுகளிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் சமூக மாற்றத்துக்கான போராட்டங்களுக்கும் எதிரான அழுத்தங் களை நிலைநாட்டி வருகிறது. சமூக மாற்றத்திற்கான போராட்டங் களுக்கு எதிரான எதிர்புரட்சிகளுக்கு நேரடியாகவும், மறைமுக மாகவும், உதவுவதுடன் ஏகாதிபத்தியற்திற்கு எதிராக உலக நாடுகள் ஐக்கியப்படாதவாறு நாடுகளினுள் இனமுரண்பாடுகளையும், மத முரண்பாடுகளையும் நாடுகளுக்கிடையே எல்லைச் சண்டைகளை யும் கூர்மையடைச் செய்து வருகிறது.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு வளைகுடாவில் பொருளா தாரக் கட்டுப்பாட்டை செலுத்தும் நோக்கில் 1992 இல் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தப்பட்டது. இதைவிட இனரீதியாகவும் மதரீதியாகவும் ஆயுத முரண்பாடுகள் முன் தள்ளப்பட்டன.

ஏகாதிபத்தியத்தின் தலையீட்டினாலோ தூண்டுதலினாலோ பின் னணியினாலோ தான் ஆபிரிக்காவில் பல ஆயுத முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ருவாண்டா, புருண்டி, சோமாலியா,

www.tamilarangam.net

சூடான், ஷயர், சியரலியோன், லைபீரியா ஆகிய நாடுகளில் ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்படவும், லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாகவும் ஏகாதிபத்தியப் பின்னணியிலான ஆயுத நடவடிக் கைகளே காரணமாகும். அங்கோலாவிலும் மொசாம்பிக்கிலும் சமாதான உடன்படிக்கைகளையும் மீறி சிவில் யுத்தங்கள் நடை பெறுகின்றன.

இலங்கையின் 80 களில் தொடங்கிய தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு யுத்தம் 1990 களுக்கு பிறகு மிகவும் மோசமாக நடத்தப் படுகின்றது. இதற்கு இன்றைய உலக ஒழுங்கு உற்சாகமூட்டி வரு வதை அவதானிக்கலாம்.

எத்தியோப்பிய, எரித்திரிய தேசிய விடுதலைப் போராட்டங்களின் வெற்றிக்குப் பிறகு ஆட்சியமைத்துள்ள அரசாங்கங்கள் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த பலவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றன.

சோவியத் யூனியனின் ஆதரவைப் பெற்றிருந்த தேசிய விடுதலை இயக்கங்கள் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் எதிர்த் தரப்பினருடன் சமரசம் செய்து கொண்டுள்ளன. அந்த சமரசங் களினால் நிலையான சமாதானம் ஏற்பட்டதாக தெரியவில்லை.

இவ்வாறான சர்வதேச நிலைமைக்கு ஆதாரமாக இருப்பது இன்றைய சர்வதேச அல்லது உலக ஒழுங்காகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான இந்த உலக ஒழுங்கு ஏற்பட சோவியத்யூனி யனினதும், கிழக்கு ஐரோப்பிய சோஷலிச நாடுகளினதும் வீழ்ச்சி ஒரு முக்கிய அடிப்படையாக அமைந்தது.

சோஷலிச நாடுகளில் மாக்சியம் ஒரு அரசியல் தத்துவமாகவும் பொருளதாரத் தத்தவமாகவும், பிரயோகிக்கப்பட்ட அளவிற்கு சமூகப் பண்பாட்டு தளங்களில் பரவலாக பிரயோகிக்கப்படா மையாலும், மாக்சியம் மனிதனின் வாழ்வியற் தத்துவமாக வளர்த் தெடுக்கப்படாமையாலும், நடைமுறை தவறுகளாலும் பின்னடை வுகள் ஏற்பட்டன எனலாம்.

அரசியல், பொருளாதார பண்பாட்டுத்துறைகளில் சர்வதேச ரீதியாக பொதுவான அம்சங்கள் வளர்த்தெடுக்கப்படவில்லை. அதனால் கம்யூனிஸ சர்வதேசியம் என்பது கம்யூனிஸ்ட் கட்சிகளுடனான

www.tamilarangam.net

உறவும், சோஷலிஸநாடுகளுக்கான உறவும், ஒத்துழைப்பும் என்பவற்றுக்கு வரையறுக்கப்பட்டது. சர்வதேச கம்யூனிஸ ஒழுங்குபற்றி கவனம் செலுத்தப்படவில்லை.

சீன-சோவியத் முரண்பாடுகளும், சோஷலிஸ நாடுகளுக்கிடையேயும் கம்யூனிஸ்ட் கட்சிகளிடையேயும் ஏற்பட்ட முரண்பாடுகளும் பகை முரண்பாடுகளாக வளர்க்கப்பட்டமையும் கம்யூனிஸ சர்வதேசியம் வளர்க்கப்படுவதற்கு தடையாக இருந்தது.

சீன- சோவியத் முரண்பாட்டில் சோவியத் பக்கம் நின்ற சோஷலிஸ நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சிகளிலும் பெரும்பாலானவை சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் நிலைகுலைந்து போயின. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் சீன அரசாங்கமும் சீனாவின் உள்விவகாரங்களிலேயே அதிகம் கவனம் செலுத்தியமையால் சர்வதேச கம்யூனிஸ ஒழுங்கை ஏற்படுத்துவதில் அக்கறை செலுத்தவில்லை. அதனால் சீனாவின் பக்கம் நின்ற சோஷலிஸ நாடுகளும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் கூட கம்யூனிஸ சர்வதேசத்தை எதிர் கொள்வதில் பல வீனத்தை சந்தித்துக் கொண்டன.

எனவே சர்வதேசரீதியாக ஏற்பட்ட அரசியல், பொருளாதார பண்பாட்டு, இராணுவ சவால்களுக்கு சர்வதேசரீதியாக கம்யூனிஸ்ட் கட்சிகளினால் ஒரு நிலைப்பட்ட முடிவுகளையும் செயற்திறனையும் முன்னெடுக்க முடியவில்லை.

இந்த பின்னணியில் எமது கட்சியின் 3 வது தேசிய காங்கிரஸ் தற்போதைய சர்வதேச சூழ்நிலையை பின்வருமாறு சுருக்கமாக விளங்கிக் கொள்கிறது.

1. சர்வதேசியரீதியாக மாக்சியம் ஒரு அரசியல் தத்துவமாகவும், பொருளாதாரத்தத்துவமாகவும் மனித வாழ்வியல் தத்துவமாகவும் ஒரு முகப்பட்டத் தன்மையுடன் ஆரோக்கியமாக வளர்த்தெடுக்கப்படவில்லை. மாக்சிய தத்துவத்தை ஏற்றுக் கொண்ட கட்சிகளிடையே நடைமுறை தொடர்பாக நிலவும் முரண்பாடுகள் பெரிதாக்கப்பட்டதால் ஒரு குறிப்பிட்ட நாட்டுக்குள்ளும், சர்வதேசரீதியாகவும் கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே ஒரு பொது இணக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. சோஷலிஸ நாடுகளிடையேயும் கம்யூனிஸ்ட் கட்சிகளிடையேயும் இருதரப்பு தொடர்புகளும் உறவுகளும்

www.tamilarangam.net

பேணப்பட்டதேயன்றி பொதுவான மாக்சிய சர்வதேச முறைமை வளர்த்தெடுக்கப்படவில்லை.

2. சோவியத் யூனியனது வீழ்ச்சிக்குப் பிறகு உலக இராணுவ, அரசியல், பொருளாதார நிலைமைகளின் சமநிலை குழம்பியுள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியம் அதனது இராணுவம், அரசியல், பொருளாதாரம், தொழிநுட்ப ஆகிய பலதுறைகளையும் சர்வதேசரீதியாக பலப்படுத்தி முதன்மைப்படுத்தி வருகிறது. அதேவேளை ஜேர்மன், பிரான்ஸ், பிரிட்டன், யப்பான், யெல்ட்ஸினின் ரஷ்யா போன்ற வல்லரசுகளும் சர்வதேச ரீதியாக கட்டுப்பாடுகளை செலுத்தி வருகின்றன. இவை ஒன்றோடொன்று முரண்பாடுகளை கொண்டும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் முரண்பாடுகளை கொண்டிருந்த போதும் அமெரிக்கா தலைமையிலான புதிய உலக ஒழுங்கிற்கு ஆதாரமாகவே இருந்து வருகின்றன. இவற்றை விட சீனா, வடகொரியா, இந்தியா, ஈராக், ஈரான் போன்ற பிராந்திய சக்திகளும் இருக்கின்றன. இவை அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமிருந்தும் ஏனைய வல்லரசுகளிடமிருந்தும் தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருக்கின்றன.

3. நேரடியாகவும் மறைமுகமாகவும் பல நாடுகள் ஏகாதிபத்திய இராணுவ, அரசியல், பொருளாதார தலையீடுகளால் பாதிக்கப்பட்டுள்ளன. நாடுகளின் சுதந்திரம் ஏகாதிபத்தியத்தின் இராணுவ, பொருளாதார அரசியல் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளன.

4. மனித குல வளர்ச்சிக்கு தடையான குறிப்பாக நாடுகளின் சுதந்திரத்துக்கு சவாலான உலகமயமாதல் தாராளமயம் சந்தைப் பொருளாதாரம் என்பனவே சர்வதேச பொருளாதாரத்தை இயக்குகின்றன பொருளாதாரரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகள். ஏகாதிபத்திய நலனை அடிப்படையாகக் கொண்டு கெட், உலக வங்கி, உலக வர்த்தக ஸ்தாபனம் போன்ற அமைப்புகள் இணைந்து கொண்டுள்ளன. வளர்ச்சிடையாத நாடுகள் மேற்படி அமைப்புக்களின் பிடிக்குள் மாட்டுப்பட்டுள்ளன.

www.tamilarangam.net

5. ஏகாதிபத்திய, மேலாதிக்க இராணுவ தலையீடுகளுக்கும் அரசியல் தலையீடுகளுக்கும் எதிராக பல நாடுகளிலும் போராட்டங்கள் நடைபெறுகின்றன.

6. உலக மயமாதல், தாராளமயம், சந்தைப் பொருளாதாரம் போன்றவற்றின் சுரண்டல்கள் சீரழிவுகளுக்கு எதிராக போராட்டங்கள் நடைபெறுகின்றன.

7. நாடுகளுக்கிடையேயும் நாடுகளுக்குள்ளும் போர்களும், ஆயுத முரண்பாடுகளும் அதிகரித்து வருகின்றன. இவற்றை அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது உலக ஆதிக்கம் என்ற நீண்டகால நோக்கிற்குப் பயன்படுத்திக் கொள்வதில் மிகக் கவனமாகவும் மிக நுணுக்கமாகவும் செயல்பட்டு வருகின்றது.

மேற்படி விளக்கங்களிலிருந்து சர்வதேசரீதியாக பின்வரும் வேலைத் திட்டத்தை எமது கட்சி முன்வைக்கிறது.

1. ஏககாலத்தில் மாக்சியத்தை ஒரு குறிப்பான நாட்டு சூழ் நிலைகளுக்கு ஏற்பவும் பொதுவான அரசியல், பொருளாதார, மனித வாழ்வியல் தத்துவமாகப் பிரயோகிப்பதிலும், வளர்த்தெடுப்பதிலும், சர்வதேசரீதியாக பொதுவான நோக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. போராடுகின்ற கம்யூனிஸ்ட் கட்சிகளினதும் ஆட்சியதிகாரத்திலிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளினதும் அனுபவங்கள் தொகுக்கப்படுவதுடன் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும். போராடுகின்ற கட்சிகளினதும் ஆட்சியதிகாரத்திலிருக்கும் கட்சிகளையும் இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றினூடாக சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான புதிய பொது வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

3. மாக்சியத்தையும், சோஷலிஸ நாடுகளையும் கம்யூனிஸ்ட் கட்சிகளையும் பாதுகாக்கும் வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும்.

4. ஏனைய நாடுகளில் நடைபெறும் சமூக மாற்றத்துக்கான போராட்டங்களுடனும் நாடுகளின் சுதந்திர விடுதலைப்

www.tamilarangam.net

போராட்டங்களுடனும், சுயநிர்ணய உரிமைப் போராட்டங் களுடனும் ஜனநாயகத்துக்கான போராட்டங்களுடனும், அடக்குமுறைகளுக்கு எதிரான எல்லாப் போராட்டங் களுடனும், சர்வதேச ரீதியாக இடம்பெறும் ஏகாதிபத்திய எதிர்ப்பு மேலாதிக்க எதிர்ப்பு போராட்டங்களுடனும் சாத்தியமான வழிகளில் இணைந்து கொள்வதுடன் ஆதர வையும், பரஸ்பர ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

மேற்படி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக சர்வதேசரீதியாகவும் நாட்டிற்குள்ளும் எல்லா கம்யூனிஸ்ட் மாக்சிஸ கட்சிகளுடனும் எல்லாப் போராடும் அமைப்பு களுடனும் எமது கட்சி உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

5. நாடுகளின் மீதும் மக்களின் மீதும் மேற்கொள்ளப்படும் எல்லாவிதமான ஏகாதிபத்திய மேலாதிக்க தலையீடுகளும் பிற தலையீடுகளும் கைவிடப்பட வேண்டும்.

6. ஒரு நாட்டின் நிலம், நீர், ஆகாய எல்லைகளில் நிலை கொண்டிருக்கும் ஏகாதிபத்திய, மேலாதிக்க, அந்நிய இராணுவங்கள் வெளியேற்றப்பட வேண்டும். இராணுவ நிலைகள் அகற்றப்பட வேண்டும்; ஏகாதிபத்திய, மேலாதி க்க, அந்நிய இராணுவ அச்சுறுத்தல்கள் கைவிடப்பட வேண்டும்.

7. மனிதகுல அழிவிற்கான ஆயுத இருப்புகள் அழிக்கப்பட வேண்டும். மனித குல அழிவிற்கான பயங்கரமான அபாய கரமான ஆயுத உற்பத்திகள் நிறுத்தப்பட வேண்டும்.

8. மேற்கு ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் பாதுகாப்புக்கும், அமைதிக்கும், அச்சுறுத்தலாக இருக்கும் நேட்டோவும் ஏனைய பிரதேசங்களின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் எல்லாவித இராணுவ கூட்டமைப் புகளும் கலைக்கப்பட வேண்டும். அந்நிய ராணுவத் தளங் கள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும்.

9. ஐ.நா. சபையும் ஏனைய சர்வதேச நிறுவனங்களும் ஏகாதி பத்திய பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

www.tamilarangam.net

10. ஏகாதிபத்திய நலன்களை அடிப்படையாக கொண்டு இயங்கும். அபிவிருத்தியடையாத நாடுகளின் வளங்களை சுரண்டும் கெட் போன்ற பொருளாதார, கூட்டமைப்புகள் கலைக்கப்பட வேண்டும். உலகமயமாதல் தாராளமயமாதல், சந்தைப் பொருளாதாரம் என்பவற்றின் சுரண்டலிருந்து நாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

11. கியூபா, ஈராக், ஈரான், லிபியா போன்ற நாடுகளின் மீது மேற்கொள்ளப்பட்டிருக்கும் பொருளாதாரத்தடைகள் நீக்கப்பட வேண்டும். சீனா, வடகொரியா போன்ற நாடுகள் மீது பொருளாதாரத் தடைகளை மேற்கொள்ள எடுக்கப் படும் முயற்சிகள் கைவிடப்பட வேண்டும்.

12. உள்நாட்டிலும் சர்வதேசரீதியாகவும் பரந்தளவிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை கட்டி வளர்க்க வேண்டும்.

***கம்யூனிஸ்ட் சர்வதேசியம் புத்துயிர் பெறட்டும்***

***ஏகாதிபத்தியம், மேலாதிக்கம் ஒழியட்டும்.***

***உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!***

***அடக்கியொடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் அணி திரள்வீர்.***

www.tamilarangam.net

# தேசிய ஜனநாயகப் புரட்சிக்கான வேலைத்திட்டம்

இலங்கையில் சோஷலிச அரசைத் தோற்றுவித்து கம்யூனிஸ்ட் சமூகத்தை ஆக்கும் பணியில் ஈடுபடுவதையே எமது புதிய - ஜனநாயக கட்சி தனது நீண்ட கால அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அத்தகைய இலக்கை அடைவதற்கு இடைமாறும் கால கட்டப் புரட்சியாக பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் மாக்சிசம் லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனை காட்டும் ஒளியில் புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்பதாகும்.

இலங்கையின் பிரத்தியேக சூழலில் அத்தகைய புதிய - ஜனநாயகப் புரட்சிக்கு ஒரு தவிர்க்க வியலாத முன் தேவையாக தேசிய ஜன நாயகப் புரட்சி நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது என்பதை கட்சி கவனத்திற்கு எடுத்துக் கொள்கின்றது. எமது கட்சி உட்பட அனைத்து புரட்சிகர இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளது ஐக்கியப்பட்ட தலைமைத்துவத்தின் கீழ் இத்தேசிய ஜனநாயகப் புரட்சி நிறை வேற்றப்படல் வேண்டும். அதற்குரிய குறைந்த பட்ச வேலைத் திட்டம் ஒன்றினை எமது கட்சி தமது மூன்றாவது தேசியக் காங்கிரஸ் மூலம் முன் வைக்கின்றது.

1. இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையகத் தேசிய இனங்களும் பிற சிறுபான்மைச் சமூகங்களும் இருப்பதன் யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரதான முரண்பாடாக முன்னெழுந்து நிற்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டும். அதற்குரிய மார்க்கம் சுயநிர்ணய உரிமைக்கான பரந்த புரட்சிகர வெகுஜனப் போராட்ட மார்க்கமேயாகும். இப்போராட்டத்தை தொழிலாளி வர்க்கத்தின் தலைமை யிலான புரட்சிகர முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து முன்னெடுத்தல் வேண்டும். அத்தகைய போராட்டத்தின் விளைவாக தேசிய இனப் பிரச்சினையானது கீழ்வருமாறு தீர்வு அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என எமது கட்சி முன் வைக்கின்றது.

www.tamilarangam.net

1:1 இலங்கை பல்இனத் தேசியங்களைக் கொண்ட மதச்சார்பற்ற நாடு என்பது அரசியலமைப்பு வாயிலாக உறுதிப்படுத்தல் வேண்டும். அத்தகைய அமைப்பில் தமிழ், முஸ்லீம் மக்கள் பாரம்பரியமாகவும் மிகச் செறிவாகவும் வாழ்ந்து வரும் வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து வலுமிக்க அதிகாரங்களை உள்ளடக்கியதான பிரதேச சுயாட்சி அமைப்பு ஒன்றினை உருவாக்குதல்

1:2 இப்பிரதேச சுயாட்சியின் உள் முஸ்லீம் மக்களின் மத கலாச்சார சமூக பொருளாதார நிலைமைகளின் தனித்துவங்களையும் தன்னடையாளங்களையும் நிலைநிறுத்தி பாதுகாத்து முன்னெடுக்கக் கூடிய வலுவானதும் தலையீடுகள் அற்றதுமான சுயாட்சி உள் அமைப்பும் உப உள்ளமைப்புகளும் உருவாக்கப்படுதல் வேண்டும்.

1:3 இலங்கையின் மத்திய மலைப் பிரதேசங்களில் கடந்த 175 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியாகவும் அதேவேளை அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டும் வாழ்ந்து வரும் மலையகத் தமிழ் மக்களுக்கு தமது இன வர்க்க அடிப்படை ஜீவாதார உரிமைகளை நிலைநிறுத்திப் பாதுகாத்து தங்களின் தனித்துவங்கள் தன்னடையாளங்களைப் பேணக் கூடியவாறான சுயாட்சி உள்ளமைப்பும், உப உள்ளமைப்புகளும் உருவாக்கப்படுதல் வேண்டும்.

1:4 வடக்கு கிழக்கில் அமையும் பிரதேச சுயாட்சி அமைப்பின் கீழ் அப்பிரதேசத்தில் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் சிங்கள, மலையக மக்களுக்கு சுயாட்சி உப உள்ளமைப்புக்கள் வாயிலாக அவர்களது உரிமைகள் பேணப்படுவதற்கு வழிவகை செய்யப்படல் வேண்டும்.

1:5 வடக்கு கிழக்கு மலையகத்திற்கு அப்பால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்து வரும் தமிழ், முஸ்லீம், மலையக மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்கத் தக்க விதத்தில் சுயாட்சி உப உள்ளமைப்புக்கள் தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

www.tamilarangam.net

1:6 யுத்தமாகி நிற்கும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டி முன்வைக்கப்பட்டுள்ள மேற்படி அம்சங்களை வற்புறுத்தியும், யுத்தத்தை நிறுத்தக் கோரியும் பரந்த புரட்சிகர வெகுஜன இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வது இன்றைய பிரதான பணியாகின்றது. அதன் வழியில் இன்றைய போராட்டத்தின் முன்னணியில் இருந்து வரும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் முன் நிபந்தனை அற்றதொரு பேச்சுவார்த்தையை நடாத்தி குறைந்த பட்சத் தீர்வைத் தானும் உருவாக்கிக் கொள்ள அரசாங்கத்தை வற்புறுத்தி இயக்கம் ஒன்றினை அப்புரட்சிகர வெகுஜன இயக்கம் முன்னெடுத்தல் வேண்டும்.

1:7 கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம் பெற்று வரும் போராட்டம் யுத்தம் என்பனவற்றால் வடக்கு கிழக்கின் அனைத்து மக்களும் கடும் பாதிப்புக்களையும் இழப்பு களையும் பெற்றுள்ளனர். தொடர்ச்சியான இடப் பெயர்வு களினால் பல திக்குகளில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிகளாகி அல்லற்பட்டு அவல வாழ்வுனுள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் புனர்வாழ்வுக்கும் புனரமைப் புக்கும் சமாதானமான இயல்பு வாழ்விற்கும் ஏற்ற முழு மையான திட்டங்கள் வகுக்கப்படுவது இடம்பெறும் பேச்சு வார்த்தையில் ஓரம்சமாகக் கொள்ளப்படல் வேண்டும்.

2. இலங்கையின் சுதந்திரம் சுயாதிபத்தியம் இறமை என்பன ஏகாதிபத்திய வல்லரசுகளின் பிராந்திய வல்லரசுகளின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வரும் போக்கு அதிகரித்து வருகின்றது. பல்வேறுபட்ட அரசியல் பொருளாதார சமூக கலாச்சார அணுகுமுறைகளால் புதிய புதிய முனைகளின் ஊடே ஊடுருவி வரும் இவ் ஏகாதிபத்திய பிராந்திய மேலா திக்க சக்திகளை அம்பலமாக்கி எதிர்த்து அவற்றுக்கு எதி ரான உறுதிமிக்கப் போராட்டங்களை வழிநடத்துதல் வேண்டும்.

3. இலங்கையின் பொருளாதாரத்தை நவகாலனித்துவப் பொருளாதாரமாக முழுமைப்படுத்தி நிலைநிறுத்தும் போக்கு தற்போது, பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்

www.tamilarangam.net

கத்தினால் முன்னெடுக்கப்படுகிறது. இதனை 'உலகமய மாதலின்' தவிர்க்க வியலாத உலகம் தழுவிய போக்கு எனக் கூறி இலங்கை மக்களை ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந் திக்கப்படுகின்றனர். இத்தகைய நவகாலனித்துவப் பொரு ளாதார ஊடுருவல்களை நியாயப்படுத்தும் மாயைகளையும் உள்வாங்கும் இயலாமையையும் எதிர்த்த தொழிலாளி விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களது பல்வேறுபட்ட இயக்கங்களையும் போராட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும்.

4. இலங்கையின் பொருளாதாரம் சுயசார்பும் சுயதேவை யையும் அடிப்படையாகக் கொண்ட விவசாய கைத்தொழில் தேசிய பொருளாதாரமாகவே கட்டியெழுப்பப்படல் வேண் டும். இத்தேசிய பொருளாதாரம் அரசாங்க 'கூட்டுறவு' தனியார் துறைகளைக் கொண்ட பங்களிப்புடன் கட்டி வளர்க்கப்பட வேண்டியதாகும். மேற்படி மூன்று துறை களும் மக்களின் அடிப்படை நலன்களை அடிப்படையாகக் கொண்டதாகவும் ஒன்றை ஒன்று விழுங்கி கொள்ளாத வகையில் முன்னெடுக்கப்படல் வேண்டும். தேசிய பொரு ளாதாரத்தை முற்று முழுதாக வேரறுத்துக் கொள்ளும் வழி யில் மனித, இயற்கை வளங்களையும் அரசாங்க உடமை களையும் பல்தேசியக் கம்பனிகளுக்கும் அந்நிய முதலீட் டாளர்களுக்கும் தாரைவார்த்துக் கொள்வதை முழு மூச்சாக எதிர்த்து இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும்.

5. பெருந்தோட்டத் தொழில் துறையின் தனியார் மயத்தினால் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இனத்துவ வர்க்க நிலைகளில் ஏற்கனவே இருந்த நிலைமைகளை விட மோச மான அன்றாடப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற போக்கு நாளாந்தம் வளர்ச்சி பெற்று வருகின்றது. தோட்டத் தொழில் துறையில் உள்ள லட்சக் கணக்கான தோட்டத் தொழிலாளர்களைப் புதிய தொழிற்சங்க அணுகு முறைகளின் ஊடே ஐக்கியப்படுத்தி எழுச்சியுறச் செய்யும் புதிய போராட்ட முனைகள் திறக்கப்படச் செய்தல் வேண் டும். இப்போராட்டங்கள் நாட்டின் ஏனைய போராட்ட

www.tamilarangam.net

இயக்கங்களுடன் இணைந்த வகையில் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

6. பல்தேசியக் கம்பனிகளின் வரவையும் ஊடுருவல்களையும் தீவிரமாக எதிர்த்து அம்பலப்படுத்துவதுடன் அதன் விளைவாக பொருளாதாரச் சுரண்டல் அரசியல் அடக்குமுறை, சமூக கலாச்சாரச் சீரழிவுகள், சூழல் மாசடைதல், நாட்டின் சுதந்திரத்திற்கு ஏற்பட்டு வரும் அபாயம் போன்றவற்றை மக்களுக்கு விளக்கி அதனடிப்படையில் போராட்ட இயக்கங்களை கட்டுதல் வேண்டும்.

7. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றின் ஆலோசனை வழிகாட்டல் கட்டுப்பாடுகள் நிபந்தனைகள் என்பனவற்றுக்கு இணங்க கடைப்பிடிக்கப்படும் தாராள இறக்குமதிக் கொள்கையால் உள் நாட்டு விவசாய கைத்தொழில் உற்பத்திகள் முற்று முழுதாகச் செயலிழந்து வருகின்றன. அத்துறைகள் சார்ந்த தொழிலாளர்கள் விவசாயிகள் சிறு உற்பத்திக்கான முதலாளிகள் என்போர் நலிவடைந்துள்ளனர். இப்பாதிப்புகளுக்கு எதிரான உறுதிமிக்க இயக்கங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

8. இதுவரை இலங்கையின் தொழிலாளி வர்க்கமும் மக்களும் இடதுசாரி இயக்கமும் ஏனைய ஜனநாயக சக்திகளும் போராடி வென்றெடுத்து அனுபவித்து வந்த ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமைகளை மேலும் பாதுகாத்து முன்னெடுக்க வேண்டிய சூழலும் நிர்ப்பந்தமும் இருந்து வருகின்றன. ஜனநாயகமும் மனித உரிமைகளும் மறுக்கப்பட்டு வரும் சூழலில் அவற்றைப் பாதுகாப்பதற்கும், தினம் தினம் அவற்றுக்கு எதிரான மீறல்களை எதிர்ப்பதற்கும் உறுதியான இயக்கங்களை இடதுசாரி புரட்சிகர முற்போக்கு ஜனநாயக இயங்கங்கள் முன்னெடுப்பதைத் தமது பிரதான பணியாகக் கொள்ளல் வேண்டும்.

9. பெண்கள் எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகள் பாரிய சமூகத் தாக்கம் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இலங்கையில் அநேகமான பெண்கள் அமைப்புக்

www.tamilarangam.net

கள் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் அவற்றின் குறுகிய கருத்தியல்களாலுமே வழிநடாத்தப்படுகின்றன. குறிப்பாக பெண்களது பிரச்சினைகள் மத்தியதர வர்க்கப் பெண்களின் பிரச்சினைகளாகவே அடையாளம் காட்டப்படுகின்றன. ஆனால் அதற்கும் அப்பால் உழைக்கும் பெண்கள் கிரா மியப் பெண்கள் எதிர்நோக்கி நிற்கும் வர்க்க பால் சமூகப் பிரச்சினைகள் பற்றி நோக்கப்படுவதில்லை. இந்நிலையை மாற்றி சமூக மாற்றத்திற்கான பாதையில் தேசிய ஜனநாயகத் தையும் சுபீட்சமான சமூக வாழ்வையும் வென்றெடுப்பதற்கு பெண்களின் பங்களிப்பு அவசியமானதாகும். அந்த வகை யில் பெண்கள் அணிதிரட்டப்படல் வேண்டும். அவர்களது பிரச்சினைகளுக்கான போராட்டங்கள் ஏனைய போராட்ட இயக்கங்களுடன் இணைத்து முன்னெடுக்கப்படல் வேண் டும்.

10. நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் குறிப்பாக வடக்கு கிழக்கில் சாதியத்தின் பாதிப்புகளுக்கு ஆளாக்கப்பட்டு வரும் மக்கள் பெரும் கூட்டத்தின் பிரச்சினைகளுக்கு தொடர்ந்து இடதுசாரி புரட்சிகர சக்திகளின் வழிகாட்டலும் தலைமைத்துவமும் தேவைப்படுகின்றது. சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான உறுதிமிக்கப் போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

11. நாட்டின் இளைஞர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினை களில் வேலை இன்மையும் உழைப்பிற்கு ஏற்ற சம்பளமின் மையும் ஒரு பெரும் பிரச்சினையாகும். இதனால் விரக்தி யடையும் இளைஞர்கள் இயல்பாகவே அதிருப்தி வெறுப்பு க்கு உள்ளாகின்றனர். அதனால் சமூக மாற்றம் வேண்டிய புரட்சிகர சக்திகளாகவும் மாற்றம் அடைகின்றனர். ஆனால் அவர்களது உணர்வுகள் தவறான வழிகளில் திசை திருப்பப் பட்டு பாரிய அழிவுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இன்னும் இந்நிலை தொடர்கிறது. மேலும் வெளிநாடுகளை நோக்கிப் படையெடுக்கப்படுவதுடன் உள்நாட்டில் சமூக கலாச்சாரச் சீரழிவுகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். இவற்றில் இருந்து விடுவித்து சரியானதோர் புரட்சிகர வழிகாட்டலையும் தொழிலாளர்கள் விவசாயிகள் மக்க

www.tamilarangam.net

ளோடு இணைந்து செயற்படும் புதிய வேலை முறையினை வழங்கி அவர்களை முன்னெடுத்துச் செல்லல் வேண்டும்.

12. வேகமாகச் சீரழிவுகளுக்கு உள்ளாகி வரும் சமூக கலாச்சாரப் பாதிப்புக்களில் இருந்து சகல தரப்பு மக்களையும் இளைஞர் யுவதிகளையும் பாதுகாப்பதற்கான மக்கள் சார்பு பல்லினப் பண்பாட்டு கலாச்சார முனைகள் திறக்கப்படல் வேண்டும். அத்தகைய முனைகள் ஊடாக மக்களுக்கு இளம் தலைமுறையினருக்கு அறிவூட்டி விழிப்புணர்வு பெறச் செய்தல் வேண்டும். அந்நிய கலாச்சார நுகர்வுப் போக்கை தடுத்து நிறுத்தும் வல்லமை பெற்ற மக்கள் கலை இலக்கிய கலாச்சார இயக்கம் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

13. சூழல் மாசடைந்து வருவது திறந்த பொருளாதாரக் கொள்கையின் ஊடாகவும் பல்தேசியக் கம்பனிகளின் வருகையோடும் பன்மடங்காகி நிற்கின்றது. சூழல் மாசடைவதன் பன்முக அபாயங்களை மக்களுக்கு எடுத்து விளக்கி சூழல் பாதுகாப்பு இயக்கங்களைக் கட்டுதல் வேண்டும்.

14. தற்போதைய கல்விமுறை தனது போதாமை இயலாமையை வெளிப்படுத்தி நிற்கின்றது. அதேவேளை அதனை மாற்றியமைப்பதாகக் கூறி தற்போதைய நவகாலனித்துவப் பொருளாதாரக் கட்டமைப்புக்கு ஏற்றதொரு கல்விக் கொள்கையை உருவாக்கி முன்னெடுக்க முயற்சிகள் இடம் பெறுகின்றன. அதனால் இதுவரை கல்வித்துறையில் பெறப்பட்ட சாதகமான அசம்சங்கள் பல அடிபட்டுப் போகும் அபாயமும் தோன்றியுள்ளது. ஆதலால் இதுவரையான சாதகமான அம்சங்கள் மேலும் வளர்த்து முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் முற்று முழுதான நாட்டு நலன், மக்கள் நலன், தேசிய பொருளாதார நலன் சார்ந்த ஒரு கல்விக் கொள்கைக்கான இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும்.

15. இன்று நாடு முழுவதிலும் பல்வேறு இடதுசாரி முற்போக்கு தொழிற்சங்க ஜனநாயக அமைப்புகளிலும் அவற்றுக்கு அப்பாலும் தனிநபர்களாகவும் சமூக மாற்றத்தைக் கோரும் சக்திகள் இருந்து வருகின்றன. இத்தகைய சக்திகள் ஐக்கியப் பட்டு தொழிலாளர்கள் விவசாயிகள் தேசிய இனங்கள்

www.tamilarangam.net

பெண்கள் இளைஞர் யுவதிகள் ஆசிரியர் மாணவர்கள் மற்றும் அனைத்து உழைக்கும் பிரிவினர் மத்தியிலும் தேசிய ஜனநாயகப் புரட்சிக்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் சென்று அமைப்பு ரீதியில் அணிதிரளச் செய்வது அவசியமாகும். இத்தகைய ஒரு புரட்சிகர கடமையினைப் புதிய - ஜனநாயகக் கட்சி தனது முழு சக்திக்கும் ஏற்ற வகையில் தனியாகவும் ஏனைய புரட்சிகர இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளுடன் இணைந்தும் முன்னெடுக்கும் என்ற உறுதியினை இவ்வேலைத்திட்டத்தின் ஊடே எடுத்துக் கொள்கின்றது.

**மத்திய குழு**

**புதிய - ஜனநாயக கட்சி**

***59/3, வைத்தியா வீதி***

***தெகிவளை***

***தொ.பே.இல: 335844, 435117***

***பாக்ஸ் : 737604***

***சி.கா. செந்திவேல்***
***பொதுச் செயலாளர்***

***இ.தம்பையா***
***தேசிய அமைப்பாளர்***

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

